[1974 மார்ச் 9

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒத்தி வைப்புத் தீர்மானத்தை அனுமதிக்கவோ, ஒத்துக்கொள்ளவோ, மறுக்கவோ, பேரவைத் தலைவருக்கு அதிகாரம் இருக்கிறது. அந்த உரிமையை ஒட்டித் தான் இது கொடுக்கப்பட்டு இருக்கிறது. அதைப்பற்றி நீங்கள் கேட்கக் கூடாது.

(3) பேரவைத் துணைத் தலைவரைப் பதவியிலிருந்து நீக்கக் கோரும் தீர்மானம்

திரு. செ. கந்தப்பன்: தலைவர் அவர்களே,

"திரு. பெ. சீனிவாசன் அவர்களைப் பேரவைத் துணைத் தலைவர் பதவியிலிருந்து நீக்க இப்பேரவை தீர்மானிக்கிறது" என்கிற தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

திரு. மு. சுருளிவேல்: மாண்புமிகு உறுப்பினர் கந்தப்பன் அவர்கள் முன்மொழிந்த, திரு. பெ. சீனிவாசன் அவர்களைப் பேரவைத் துணைத் தலைவர் பதவியிலிருந்து நீக்க இப்பேரவை தீர்மானிக்கிறது என்ற தீர்மானத்தை நான் வழிமொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்த விவாதம் 2 மணி நேரத்திற்கு மேல் போகக் கூடாது. இப்பொழுது மணி 10.30 ஆகிறது. 12.30 மணியோடு அது முடிவடைய வேண்டுமென்று கூறிக்கொள்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: இன்றைக்கு 1.30 மணி வரையில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அன்றைக்கே 2 மணி நேரம் தான் விவாதம் என்று சொல்லியிருக்கிறோம். இப்பொழுது ஏறத்தாழ 10.30-க்கு ஆரம்பிக்கிறோம், 12.30-க்கு முடிக்கலாம்.

THIRU K. T. K. TANGAMANI: What has transpired in the Business Advisory Committee should be taken into consideration. You were pleased to say that the discussion will be held from 10.30 to 12.30 p.m. on the 12th March 1974. Now the date has been changed. Why not the time also be extended?
இது மாற முடியாதா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எப்படி முடியும்?

1974 மார்ச் 9]

திரு. கே. டி. கே. தங்கமணி : அப்படியானால், 1½ மணி நேரம் தான் விவாதம் இருக்கும் என்று சொல்கிறீர்களா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்பொழுது மணி 10½ ஆகிறது, 12½ வரையில் இருக்கும்—2 மணி நேரம் இருக்கும்.

திரு. கே. டி. கே. தங்கமணி : எங்களுடைய அண்டர்ஸ்டான்டிங் அப்படி அல்ல. நீங்கள் திடீர் திடீரென்று ஏதாவது ஒரு ரூலிங் கொடுத்தால், எங்களுக்குக் கஷ்டமாகி விடுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திடீர் ரூலிங் அல்ல.

திரு. கே. டி. கே. தங்கமணி : அன்றைக்கு 9-ம் தேதி என்று மாற்றுகிறபொழுது, ஏற்கனவே ஒரு நாள் பூராவும் வேண்டுமென்று சொல்லி, பட்ஜெட் விவாதத்தை ஒரு நாளைக்கு ஒத்திப் போட்டிருக்கிறோம். ஆனால், நீங்கள் 12½ மணிக்குள்ளே பேச வேண்டுமென்று சொன்னால், எனக்கு ஒரு மணி நேரம் பேசுவதற்கு டைம் வேண்டும், வாதத்திற்காகச் சொல்கிறேன்—விவாதத்தைக் குறைத்திட வேண்டாமென்று சொல்கிறேன். உங்களுடைய முடிவை மீற வேண்டுமென்பதற்காகச் சொல்லவில்லை. அதற்கு முன்னாலே விவாதம் முடிந்துவிட்டால், நீங்களும் வரவேற்பீர்கள், நாங்களும் வரவேற்போம். பின்னாலே, டிவிஷன்' எல்லாம் வரக் கூடிய நேரத்திலே, 'டைம்' ஆகத்தான் செய்யும். ஆக 1½ மணி வரை விவாதம் இருக்கச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

* திரு. செ. கந்தப்பன் : தலைவர் அவர்களே, மிகப் பொறுப்புணர்ச்சியோடும், கவலையோடும் நான் இந்தத் தீர்மானத்தை இங்கே கொடுத்திருக்கிறேன். மக்களைக் கொண்டு, மக்களாட்சி நடக்கின்ற நாடுகளில் மக்கள் மன்றமும் அந்த மன்றத்தினுடைய தலைவரும் மன்றத்திலே இருக்கிற உறுப்பினர்கள், அவர்களின் உரிமைகள், அந்த மன்றத்தின் மாபுகள், அதற்கு உள்விட்ட வரம்புகள் இவைகளையெல்லாம் பாதுகாப்பதிலே எவ்வளவு முக்கியத்துவம் பெற்றிருக்கிறார்கள் உலக நாடுகளில் என்பதை நாம் எல்லோரும் அறிவோம்.

[திரு. செ. கந்தப்பன்] [1974 மார்ச் 9

இங்கு மாண்புமிகு சீனிவாசன் அவர்கள் கூட சற்று முன்பு குறிப்பிடுகிறபொழுது, சட்டதிட்டத்திற்கு மாறுக இந்தத் தீர்மானம் தரப்பட்டது, செய்தி ஏடுகளுக்குத் தரப்பட்டது என்பதுபோல் சொன்னார்கள். இந்தத் தீர்மானத்தை இங்கே மூன் மொழிந்திருக்கிற நான் சட்ட வரம்புக்குள்ளே நின்று, தீர்மானத் தைத் தந்தேன் என்பது மட்டுமல்ல, இந்த அவையிலே அறிவிக்கப் படுகிற வரையில் வேறு செய்தி ஏடுகளுக்கோ அல்லது வெளியிலோ தெரிவிக்கின்ற அளவுக்கோ வெளிப்படுத்தவில்லை என்பதை இங்கே தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன்.

இங்கு சிலர் எடுத்துக் காட்டியதைப்போல், தங்களுடைய இருக்கையில் மூன்பு அமர்ந்து தம்முடைய கடமையை ஆற்றிக் கொண்டிருந்த நண்பர் சீனிவாசன் அவர்கள் ஒரு முறை கீழ்க் கண்டவாறு சுட்டிக்காட்டினார்கள். "ஒரு நபர் என்மீது நம்பிக்கையில்லையென்று சொன்னலுங்கூட நான் அதற்கான நடவ டிக்கையை மேற்கொண்டு அந்தப் பொறுப்பிலே நீடிக்கமாட்டேன்" என்ற கருத்தைத் தெளிவுபடுத்தினார்கள். நான் இங்கே உண்மை யிலேயே மிக வேதனையோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன், ஜனநாயக மரபுகளுக்கு நல்ல மதிப்பைத் தருகின்ற ஒரு நல்ல வாய்ப்பினைப் பெற்றும் நண்பர் சீனிவாசன் அவர்கள் அதை நழுவ விட்டுவிட்டார்கள் என்றுதான் நான் கருதுகிறேன்.

இங்கே இருக்கின்ற பெரும்பான்மையோர் அவர்மீது நம்பிக்கை யில்லை என்பதைத் தெரிவிக்கிறார்கள் என்று சொல்வதைவிட, பெரும்பாலானவர்கள் மீது தனக்கு நம்பிக்கை இல்லை என்பதை நண்பர் சீனிவாசன் அவர்களே அறிவித்துவிட்டார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே முக்கியமான வாதமாக வைக்க விரும்பு கிறேன். பெரும்பாலானவர்களால் ஒரு கட்சியின் சார்பிலே தேர்ந்தெடுக்கப்பட்டாலும் சட்ட மன்றத் தலைவரும், துணைத் தலைவரும் கட்சிக்கு அப்பாற்பட்டவர்கள் என்று வாதிடக் கூடும். அந்தப் பிரச்னைக்கு இப்பொழுது நான் வரவில்லை. பொதுவாக, மன்றத் தலைவர் எல்லோருடைய சம்மதத்தையும் விஸ்வாசத் தையும் பெற்று வருவதுதான் சாலச் சிறந்தது. ஆனால் நடை முறையிலே அது ஓளவுக்கு அல்லது முழு அளவிற்கு இயலாதது என்றலுங்கூட பெரும்பாலானவர்களுடைய நம்பிக்கை நிச்சய மாக இருந்தாக வேண்டுமென்பதை யாரும் மறுக்க முடியாது.

1974 மார்ச் 9] [திரு. செ. கந்தப்பன்]

1969-ஆம் ஆண்டிலே நாடாளுமன்றத்திலே நடந்த ஒரு நிகழ்ச்சியை இங்கே நினைவு கொள்வது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். அப்பொழுது இரு காங்கிரஸ்களும் பிரிந்து இருந்த நேரம், மன்றத் துணைத் தலைவர் ஒருவர் அமைச்சராக்கப் பட்ட நிலையில் நாடாளுமன்றத்திற்குத் துணைத் தலைவர் ஒருவர் தேர்ந்தெடுக்கப்படுகிற ஒரு கட்டம் ஏற்பட்டது. அப்பொழுது இருந்த நாடாளுமன்ற, கட்சி உறுப்பினர்களின் எண்ணிக்கையிலே எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எல்லோருமாகச் சேர்ந்து இருந்த எண்ணிக்கை ஆளுங்கட்சி உறுப்பினர்களின் எண்ணிக்கையைவிட பலம் அதிகமாக இருந்தது. 1969-ஆம் ஆண்டிலே நாடாளுமன் றத்திலே இருந்த நிலவரம் நண்பர்களுக்கு நினைவிருக்குமென்று கருதுகிறேன். அதைப் பயன்படுத்திக்கொண்டு எதிர்க் கட்சி களின் தரப்பிலே ஒரு நாடாளுமன்ற உறுப்பினரைத் துணைத் தலைவராக நிறுத்த வேண்டுமென்ற முயற்சி மேற்கொள்ளப் பட்டது. அப்பொழுது சுதந்திராக் கட்சித் தலைவராக இருந்த திரு. ரங்கா அவர்களும் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த திரு. ஹிரேன் முகர்ஜி அவர்களும் மற்றத் தலைவர்களும் இதைக் குறித்துக் கலந்து பேசி, தங்களுக்குள்ளே இறுதியாக ஒரு முடிவு எடுக்கின்ற நிலையில், இடதுசாரிக் கருத்துக் களைக் கொண்ட நண்பர்களுக்கு வலதுசாரி கருத்துக் களைக் கொண்ட நண்பர்களின் கருத்துக்கள் உடன்பாடாக இல்லை, வலதுசாரித் தரப்பிலே கொண்டிருந்த கருத்துக்கள் இடதுசாரித் தரப்பிலே இருந்த நண்பர்களுக்கு உடன் பாடாக இல்லை, ஆகவே எல்லோருக்குமாகச் சேர்ந்து உடன் பாடாக உள்ள ஒரு தலைவர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்ற முறையிலே எல்லோருடனும் அதிகமாக ஒட்டும் உறவும் கொண் டிருந்த திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே ஒருவர் கொண்டுவரப்பட வேண்டுமென்ற ஒரு முடிவு எடுக்கப்பட்டு, அது பற்றி அப்பொழுது திராவிட முன்னேற்றக் கழகத்தின் கட்சி அமைப்போடு கலந்து பேசப்பட்டு, அப்பொழுது நாடாளுமன்றத் தில் பொறுப்பிலே இருந்தவர்கள் டாக்டர் கலைஞர் அவர்களோடு தொடர்பு கொண்டு எப்படி நடந்து கொள்வது என்று விசாரித் தோம். அப்பொழுது அவர்கள் வேறொரு வேலையாக டெல்லி வரு வதற்குச் சந்தர்ப்பம் ஏற்பட்டது. அவர்கள் டெல்லி வந்தபிறகு திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களை அழைத்துப் பேசி நாடாளுமன்ற ஜனநாயகத்தின் அடித்தளத்தை மையமாக

[திரு. செ. கந்தப்பன்] [1974 மார்ச் 9

வைத்து ஆளுங்கட்சி மனமுவந்து வந்தாலும்கூட அதை ஏற்றுக் கொள்ள வேண்டாமென்று சொல்லப்பட்டு அந்த முடிவு எடுக்கப் பட்டது. நாடாளுமன்றமாக இருந்தாலும் சட்டமன்றமாக இருந்தாலும் தலைமை ஸ்தானத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படுகின்ற வர்களைப் பொறுத்தவரையில் அப்படிப்பட்ட மரபு ஏற்படுத்தப் பட்டது. அந்த மரபு வழிநின்று நான் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறேன்.

சட்ட மன்றத் துணைத் தலைவரின் நடைமுறை குறித்து நான் எந்தவிதமான வாதமும் எழுப்பிட விரும்பவில்லை. இதே தீர்மானம் சில காலத்திற்கு முன்பு வந்திருக்குமானால் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் மிக வன்மையாக ஆதரித்திருப் பார்கள். இன்றைக்கு ஒரு வேளை அவர்கள் எதிர்க்கக்கூடும். அல்லது ஆதரிப்பார்களா என்பது எனக்குத் தெரியாது.

சில நாட்களுக்கு முன் ஒரு வாக்கியத்திலே தீர்மானம் கொண்டுவரலாமா என்ற கேள்வி எழுப்பப்பட்டது. அதுபற்றிக் கூட எனக்கு வாய்ப்புத் தரப்படுமானால் நல்ல விளக்கங்கள் தரலாம் என்றுகூட நான் எதிர்பார்த்தேன். ஆனால் தலைவராகிய தாங்கள் அன்றைக்கு நல்ல விளக்கங்களைத் தந்திருக்கிறீர்கள். நாடாளுமன்றத்திலே நம்பிக்கையில்லை என்று ஒரு வாக்கியத்திலே தான் தீர்மானம் கொண்டுவரப்பட்டிருக்கிறது என்று எடுத்துக் காட்டினீர்கள். ஒரு காரணத்தை மனத்திலே வைத்து ஒரு வாக்கியத் தீர்மானமாகக் கொடுத்திருக்கிறேன் என்பதை நான் தெளிவாக்கிட விரும்புகிறேன். மறைமுகமாகக் காரியங்கள் செய் யப்படுகின்றன, அல்லது சட்ட மன்ற மரபுகளுக்கு உள் நிற்காமல் பிறழ்ந்து காரியங்கள் செய்யப்படுகின்றன என்ற உணர்வு சட்ட மன்றத்திலே இருக்கின்ற உறுப்பினர்களுக்கோ அல்லது வெளி யாருக்கோ ஏற்படக் கூடாது என்பதால்தான் நான் இதைத் தெரி விக்கிறேன். அரசியல் நிர்ணய சபையிலே அமைக்கப்பட்ட சட்டத்திலோ அல்லது நம்முடைய சட்ட, நடைமுறை விதி களிலோ இந்தத் தீர்மானத்தை எப்படிக் கொடுக்க வேண்டு மென்ற வரையறை சொல்லப்படவில்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் 1954-ஆம் ஆண்டு நிலவ ரத்தைப்பற்றி நடைமுறையைப் பற்றிச் சொன்னார்கள். நடை

1974 மார்ச் 9] [திரு. செ. கந்தப்பன்]

முறைகள் எப்பொழுதும் மாறுபடுகள். அவ்வப்பொழுது மாறுபடுகள் மாறிக்கொண்டே இருப்பதை நாம் காண்கிறோம். கடந்த பத்தாண்டுக் காலத்திலே நாடாளுமன்றத்திலே பல்வேறு கோட்பாடுகளைக் கொண்ட கட்சிகள் ஆளுங்கட்சியின் மீது நம்பிக்கையில்லை என்ற கருத்தை வைக்கின்றபொழுது நேர்மாறுபட்ட கருத்துக்களைக் கூறி, நம்பிக்கையில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். உணவு தானிய வர்த்தகத்தைத் தேசியமயமாக்கவில்லை; அதனால் நம்பிக்கை இல்லையென்று ஒரு சாராரும், தேசியமயமாக்கி விட்டது தப்பு அதனால் நம்பிக்கையில்லையென்று ஒரு சாராரும் சொல்லக் கூடும். இரண்டு அணிகளும் ஒன்று திரண்டு ஒரு வாக்கியத்திலே நம்பிக்கையில்லை என்று கொண்டுவருவார்கள். அந்த ஒரு பாணியை, நடைமுறையைப் பின்பற்றி நான் இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்திருக்கிறேன்.

நான் இதைக் கொண்டுவரும்பொழுது சில காரணங்களை மனதிலே வைத்துக்கொண்டு கொண்டுவருகிறேன், அதேபோல ஆதரிக்கின்ற நண்பர்கள் சில காரணங்களை மனதிலே வைத்துக் கொண்டு ஆதரிக்கலாம். ஆகவே அதற்காக ஒரு எல்லையை வரையறை செய்து நான் அந்த எல்லைக்குள்ளே அவர்களை வைக்க விரும்பவில்லை. இதையெல்லாம் கருதித்தான் நான் ஒரு வரம்பு கட்டாமல் ஒரு வரித் தீர்மானமாகக் கொடுத்திருக்கிறேன்.

மீண்டும் எனது முக்கியமான கருத்தை நான் இங்கே தெளிவுபடுத்த விரும்புகிறேன். இங்கே இருக்கிற பெரும்பான்மையோர் மீது நம்பிக்கையில்லை என்ற கருத்தை நண்பர் சீனிவாசன் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே வேறு வழியின்றி இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வருகின்ற நெருக்கடிக்கு நாங்கள் கள்ளப்பட்டிருக்கிறோம் என்ற அளவிலே சொல்லி இந்தத் தீர்மானத்தை முன்மொழிந்து அமர்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: சபாநாயகர் அவர்களே, சபைக்கு முன்னால் இருக்கக்கூடிய இந்தத் தீர்மானத்தை எதிர்த்து எங்கள் கட்சியின் சார்பாக சில கருத்துக்களைச் சொல்லலாம் என்று நினைக்கிறேன். இந்தத் தீர்மானத்திற்கு அங்கீகாரம் கேட்கின்ற நேரத்திலேயே இந்தத் தீர்மானம் முறையாக எழுதப்படவில்லை என்ற ஆட்சேபணையை நான் எழுப்பினேன். அந்தச் சம

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1974 மார்ச் 9

யத்தில் தாங்கள் ஒரு முடிவு கொடுத்தீர்கள். அரசாங்கத்தின் பேரிலே நம்பிக்கையில்லை என்று சொன்னால் இந்த அரசாங்கத்தின் பேரிலே நம்பிக்கையில்லை என்று மட்டும் தீர்மானம் கொடுக்கலாமே யொழிய என்ன என்ன காரணங்கள் என்று கொடுப்பதில்லை என்று குறிப்பிட்டீர்கள். நான் அதிகமாக அந்த விதிகளை எல்லாம் வாசிக்க விரும்பவில்லை. நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவருவதற்கு இருக்கக்கூடிய விதி resolution expressing want of confidence in the Council of Ministers' என்ற ஒரு பகுதியும் 'disapproval of policy, என்ற ஒரு பகுதியும் இருக்கிறது. டில்அப்ரூவல் ஆப் பாலிஸி என்று வருகின்றபொழுது அந்தக் குறிப்பிட்ட பாலிஸியிலே என்ன அபிப்பிராய பேதங்கள் இருக்கின்றன என்பதைக் குறிப்பிட வேண்டும். அந்த முறையிலே பொதுவாக நம்பிக்கையில்லையென்ற தீர்மானம் கொண்டு வரலாம் அல்லது குறிப்பிட்ட சில கொள்கைகளின் பேரில் நம்பிக்கையில்லை என்று கொடுப்பதும் வழக்கமாக இருக்கிறது.

ஆனால், சபாநாயகரோ அல்லது துணை சபாநாயகரோ நீக்கப் படவேண்டுமென்றால் நம்முடைய விதிகளிலே சில விஷயங்களைச் சொல்லிவிட்டால் மட்டும் கட்டுப்படுத்தாது, அரசியல் சட்டத்தை வகுத்தவர்கள் நாடாளுமன்ற சபாநாயகரோ அல்லது துணை சபாநாயகரோ அல்லது பல மாநிலங்களிலே உள்ள சபாநாயகரோ அல்லது துணை சபாநாயகரோ இப்படிப்பட்ட பதவிகளிலே உள்ளவர்களுக்கு அந்தப் பதவிகளுக்கு தனி அந்தஸ்து கொடுத்திருக்கிறார்கள். சாதாரணமாக நமக்கு இருக்கக்கூடிய விதிமுறைகளின் படி தீர்மானத்தை வாய்ஸ் ஓட்டு முறை மூலம் நிறைவேற்றி விடலாம் என்று இருந்தாலும்கூட அரசியல் சட்டப்படி சபாநாயகர், துணைச் சபாநாயகர்—அது நாடாளுமன்றத்திலும் சரி அல்லது நம்முடைய சட்டமன்றத்திலும் சரி—நீக்கப்படவேண்டுமென்றால் அந்த ஆபீசில் அவர் இருக்கக்கூடாது என்றுதான் போடப்பட்டிருக்கிறது. ஆபீசில் அவர் இருக்கும்பொழுது அந்த ஆபீசிலே இருக்கக்கூடியவர் செய்வதற்கு மாறுகச் செய்தார், அல்லது சரியாகச் செய்யவில்லை என்று சுட்டிக்காட்டப்பட வேண்டுமென்பதற்காகத்தான் அவர்கள் அப்படிப் போட்டிருக்கி

1974 மார்ச் 9] [திரு கே. டி. கே. தங்கமணி]

ரூர்கள். இதைச் சுட்டிக்காட்ட வேண்டுமென்றுதான் 'ரிமூவல் ஆப் ஸ்பீக்கர்' என்று தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். அப்படி,

'If a notice has to be given for removal of the Speaker, 14 clear days' notice should be given.'

இது கான்ஸ்ட்டியூஷனில் இருக்கிறது. கான்ஸ்ட்டியூஷனில் 14 நாட்கள் என்று இருந்தாலும்கூட விதியில் 10 நாட்கள் போதும் என்று போட்டால் அது செல்லுபடியாகுமா? அது அரசியல் சட்டத்திற்கு விரோதமாகும். நம்முடைய விதிமுறையைப் பொறுத்தவரையில் சரியென்று ஏற்றுக்கொள்ளலாம். அரசிய லமைப்புச் சட்டம் 212-லே நம்முடைய நடைமுறையைப் பொறுத்தவரையில் கோர்ட் கேள்வி கேட்கக்கூடாது என்று இருந்தாலும் அரசியலமைப்புச் சட்டத்திற்கு விரோதமாக இருந்தால் அதைக் கேள்வி கேட்கும் பொறுப்பு கோர்ட்டுக்கும், மத்திய சர்க்காருக்கும் உண்டு என்ற நிலே ஏற்படும். ஆகவே, டெப்டி ஸ்பீக்கரை ரிமூவ் செய்ய வேண்டுமென்ருல் 14 நாட்கள் நோட்டீஸ் கொடுக்க வேண்டும். அப்படிக் கொடுத்த அந்த நோட்டீஸை உறுப்பினர்களுக்குத் தெரிவிக்க வேண்டும்.

ஆனல் நான் இந்த நேரத்தில் ஒரு விஷயத்தைச் சொல்வதால் தாங்கள் வருத்தப்படக்கூடாது என்று தெரிவித்துக்கொள்கிறேன். ஏற்கனவே ஸ்பீக்கர் பேரில் ஒரு ரிமூவல் நோட்டீஸ் கொடுக்கப் பட்டது. அந்த நோட்டீஸ் கொடுக்கப்பட்ட முறை சரியல்ல என்பதால், இனிமேல் ரிமூவல் நோட்டீஸ் கொடுத்தால் அந்த நோட்டீஸை எல்லோருக்கும் கம்யூனிகேட் செய்து விட வேண்டும். 'This will have to be communicated to the Members' என்று சொன்னேம். அதன்பேரிலே அண்ணு நிராவிட முன்னேற்றக் கழக உதவித் தலைவர் திரு. எட்மண்ட் அவர்களும், ஆளும் காங்கிரஸ் கட்சியின் உதவித் தலைவர் திருமதி அனந்தநாயகி அவர்களும், நானும் ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொடுத்திருந்தோம். கொடுத்தது சரியா, தப்பா என்பது வேறு விஷயம். ஆனல் கொடுத்தோம் என்பது நம்முடைய உறுப்பினர் களுக்குச் சொல்லப்பட்டதா?

Was it ever communicated to any of the Member?

பிறகு 14-ஆம் நாளன்று எடுத்துக்கொள்ளும் நேரத்தில் . . .

[1974 மார்ச் 9

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 14-ஆம் நாளிலே எடுத்துக் கொள்ளலாம் என்று விதியிருப்பதைப் போல நோட்டீஸ் கொடுத்தவுடனே அங்கத்தினர்களுக்குத் தெரிவிக்க வேண்டுமென்று விதியில்லை.

THIRU K. T. K. TANGAMANI: A different practice was adopted in this particular case. When a notice was given by Thiru Kandappan, it was promptly communicated to all the Members. But when a similar notice was given by Thiruvalargal Thangamani and Edmund and Thirumathi Anandanayaki against the Speaker or Deputy Speaker, it was carefully kept away from the Members. Why this kind of practice?

அது இனிமேல் வரக் கூடாது என்று சொல்கிறேன். உங்களை 'ப்ரவோக்' செய்ய வேண்டுமென்பதற்காகச் சொல்லவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் 'ப்ரவோக்' ஆகவில்லை. திரு. கந்தப்பன் கொடுத்த தேதி என்னவென்று பாருங்கள், உறுப்பினர்களுக்கு அறிவிக்கப்பட்ட தேதி என்னவென்று பாருங்கள். எப்படியோ அது வெளியே வந்துவிட்ட பிறகு உறுப்பினர்களுக்குத் தெரிவிக்காமல் இருப்பது முறையல்ல என்பதால் உறுப்பினர்களுக்குத் தெரிவிக்கும் நிலை உண்டாயிற்று. ஆகவே, முன்பு தெரிவிக்கவில்லை, இப்பொழுது தெரிவிக்கப்பட்டது என்று உள்நோக்கம் கற்பிக்க வேண்டியதில்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி: குறிப்பிட்ட தேதியிலே திரு. கந்தப்பன் அவர்கள் நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்கள் என்று நாங்கள் எங்கள் தொகுதியிலேயிருக்கும்பொழுது அனுப்பப் பட்டது. எதற்காக என்று சொன்னால், காரணம் புரிகிறது. அந்தத் தேதியிலிருந்து 14-ஆம் நாள் எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்பதற்காக. இதேபோல் நாங்களும் நோட்டீஸ் கொடுத்திருந்தோம். அதையும் தெரிவித்திருந்தால் 14-ஆம் நாளன்று எடுத்துக்கொள்ளப்படுமா என்று கணக்கிட்டு இருப்பார்கள் அல்லவா? அன்றைக்கே கூட நாங்கள் வாபஸ் வாங்கிக் கொண்டிருப்போம், அதை வற்புறுத்தாமல் வாபஸ் வாங்கி விட்டோம். ஆனால் அம்மாதிரி நோட்டீஸ் கொடுக்கப்பட்டிருந்தது என்று உறுப்பினர்களுக்குத் தெரிவிக்கப்படவில்லை.

1974 மார்ச் 9]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதற்கு முன்னால் இந்த அவையிலே திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்க் கட்சியாக இருந்த நேரத்தில் அப்பொழுது பேரவைத் தலைவராக இருந்தவர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொடுக்கப்பட்டு, அது வற்புறுத்தப்படாமல் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டது. அதுகூட அந்த நேரத்தில் உறுப்பினர்களுக்கு அறிவிக்கப்பட வில்லை. 14 நாட்களுக்குப் பிறகு எடுத்துக்கொள்ள வேண்டும் என்று சொல்லப்பட்டிருப்பதைப் போன்று இத்தனை நாட்களில் உறுப்பினர்களுக்கு அறிவிக்க வேண்டுமென்று சொல்லப்பட வில்லை.

திரு. கந்தப்பன் நோட்டீஸ் கொடுத்த தேதி வேறு, அதற்கு 6, 7 நாட்களுக்குப் பிறகுதான் அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஓரளவு வெளியே வந்துவிட்டது. அப்படி நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொடுக்கப்பட்ட செய்தி வந்ததற்குப் பிறகு உறுப் பினர்களுக்குத் தெரிவிக்காமல் இருப்பது முறையல்ல என்பதால் தெரிவிக்கப்பட்டது. ஆகவே, இப்பொழுது தெரிவிக்கப்பட்டது, அப்பொழுது தெரிவிக்கப்படவில்லை என்று உள்நோக்கம் கற்பிக்க வேண்டாம்.

திரு. கே. டி. கே. தங்கமணி: ஒரு விஷயத்திற்காகச் சொல் கிறேன். பிறகு இந்த விதிகளைப் பொறுத்தவரையில்

'The Speaker shall have the right to speak in and otherwise take part in the proceedings of the Legislative Assembly if such a resolution is moved'

என்று இருக்கிறது. ஆனால்

'The Deputy Speaker shall have the right'

என்று இல்லை. இதிலே குறிப்பிட்ட பிரச்னையில் சென்ற ஆண்டு பிப்ரவரி மாதம் 5-ஆம் தேதி இதேமாதிரி தீர்மானத்தை நாங்கள் கொடுத்திருந்தோம். அப்பொழுது பக்குவமாகத்தான் கொடுத் திருந்தோம். இன்றைக்குக் கேட்கலாம், நீ, கந்தப்பன் தீர்மானத்தைப் பொறுத்தவரையில் முறையாக இல்லை என்று

[திரு கே. டி. கே. தங்கமணி] [1974 மார்ச் 9

சொன்னீயே, நீ அன்றைக்கு முறையாகக் கொடுத்தாயா என்று கேட்கலாம். நான் முறையாகக் கொடுத்திருக்கிறேன். என்னுடைய தீர்மானத்தில்,

This House resolves to remove the Deputy Speaker from his Office for his undemocratic and unconstitutional acts on the 2nd of December 1972'

என்று ஸ்பெசிஃபிக்காகக் குறிப்பிட்டு, அன்றைக்கு டெப்டி ஸ்பீக்கராக இருந்தவர் சரியான முறையில் நடந்துகொள்ளவில்லை என்று எடுத்துச் சொல்லியிருக்கிறேன்.

அந்த நேரத்தில் திரு. பொன்னப்ப நாடார் அவர்கள், டெப்டி ஸ்பீக்கர் மீது இம்மாதிரி ஒரு தீர்மானம் வந்தால் அவருக்குப் பதில் சொல்ல உரிமை இருக்கிறதா என்று கேட்டார்கள். டெப்டி ஸ்பீக்கருக்கு விசேஷத் தன்மை இருக்கிறது. ஸ்பீக்கர் ஆகிய தாங்கள் திடீரென்று இங்கே வந்து குறிப்பிட்ட சப்ஜெக்டில் விவாதத்தில் கலந்துகொள்ள முடியாது. ஆனால் டெப்டி ஸ்பீக்கர் சபையிலே உள்ளபொழுது அவரும் ஒரு உறுப்பினர்தான். அவர் பேசலாம், விவாதத்திலே பங்கு கொள்ளலாம். அந்த அளவிற்கு ஸ்பீக்கருக்கு இல்லாத அளவில் டெப்டி ஸ்பீக்கருக்கு என்று தனி அந்தஸ்து இருந்தாலும், அங்கத்தினருக்கு உள்ள முழு அந்தஸ்தும் பெற்றிருக்கக்கூடியவர் அவர். ஆகவே, டெப்டி ஸ்பீக்கருக்கு பேச உரிமை உண்டு என்று சொன்னார்கள்.

அப்படி வரும்பொழுது சில மரபுகள் இந்த நாட்டிலே இருப்பதைப்பற்றி நான் சொல்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன். நம்முடைய முன்னவர் அவர்கள் சென்ற வருஷம் பிப்ரவரி மாதம் 5-ம் தேதி நான் கொண்டுவந்த தீர்மானத்தின் பேரில் அவர் பேசும்பொழுது சில தவறான கருத்துக்களைச் சொன்னார்கள். அது திருத்தப்பட வேண்டுமென்று நான் நினைக்கிறேன். ஏனென்றால், அன்றைக்கு ஸ்பீக்கராக இருந்த மௌலாங்கர் பேரிலே யாரோ ஒருவர் நம்பிக்கையில்லை என்று சொல்ல ஆரம்பித்து, அதை வெளியே கொண்டு வர வேண்டுமென்று சொல்லி, சபையிலே இடம் பெற முடியாத அளவிற்குப் போய்விட்டது.

1974 மார்ச் 9] [திரு. கே. டி. கே. தங்கமணி]

Probably he was wrongly briefed.

1954-ல் ஒருவர் மட்டுமல்ல, எதிர்க்கட்சியிலுள்ள 14, 15 பேர்கள், திரு. கிருபளானி, மூரே, கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் எல்லோரும் சேர்ந்து மௌலாங்கர் பேரிலே, for his removal தீர்மானம் கொடுத்து அதைப்பற்றி விவாதம் நடத்த வேண்டுமென்று கோரி அந்தத் தீர்மானம் விவாதத்திற்கு வந்தது.

இந்தத் தீர்மானத்திற்கு இங்கே நாம் நம்முடைய விதியிலே சிறு மாறுதலைச் செய்திருக்கிறோம். நம்முடைய விதியிலே தீர்மானத்தைப் பிரேரித்தவுடனே 15 சதவிகிதம் பேர்கள் ஓட்டுப் போட வேண்டுமென்று வைத்திருக்கிறோம். அதற்கு உரிமை இருக்கிறது. 20 சதவிகிதம் என்றுகூட வைத்துக்கொள்ளலாம். சில இடங்களில் 10 சதவிகிதம் என்று வைத்துக்கொள்ளலாம்.

For getting the leave of the House here we have limited the number to 15 per cent.

15 சதவிகிதம் இருக்க வேண்டுமென்று இருக்கிறது. அப்படி வரும் பொழுதுதான் கடுமையான விவாதம் எந்தது. அந்த விவாதத்திலே சொம்பத் தெளிவாகச் சொன்னார்கள். இப்படிப்பட்ட ஒரு தீர்மானத்தைக் கொண்டுவர வேண்டுமென்றால், அதுவும் ஸ்பீக்கர் பேரிலே கொண்டுவரவேண்டும் என்றால் அன்றைக்கே, இந்த உதவி சபாநாயகர்மீது கொண்டு வந்த அன்றைக்கே, விவாதத்தை எடுத்துக்கொண்டிருக்கலாம். இப்படி என்ன குற்றச்சாட்டு என்று சொல்லாமல் கொண்டுவருவது நியாயம்தானே?

We have not taken the House into confidence.

இம்மாதிரி காரியங்களை சட்டமன்றத்தில் செய்யக்கூடாது என்பதைத் தெளிவாகச் சொல்கிறேன். ஆகவே, இப்படிப்பட்ட விஷயங்கள் வரும்பொழுது உதவி சபாநாயகராக இருந்த பொழுது இந்தக் குற்றத்தைச் செய்திருக்கிறார் என்று தெளிவாக சொல்ல வேண்டும்.

நாங்கள் அன்றைக்குக் கொண்டுவந்தபொழுது டிசம்பர் 2-ம் தேதி அவர் நடந்துகொண்ட முறை அரசியலமைப்புச் சட்டத்திற்கு, ஜனநாயகத்திற்கு விரோதம் என்பதாகச் சொன்ன முறை இருக்கிறது. ஆகவேதான் அப்படிப்பட்ட ஒரு காரணத்

[திரு கே. டி. கே. தங்கமணி] [1974 மார்ச் 3

தால்தான் இது இந்த முறைக்கே தப்பாக இருக்கிறது என்று அன்றைக்குச் சொன்னேன். பொதுவாக இதற்குச் சில உதாரணங்கள்கூடச் சொல்லலாம்.

1925 ஆம் வருஷம் வெட்ஜ்வுட் பென் கேஸின் பேரிலே செய்ததைக் காண்கிறோம்.

It was more in the nature of a censure.

என்ன காண்கிறோம் என்றால்,

'That in view of the express provisions of Standing Order No. 26, for the protection of the rights of minorities, this House regrets the action of Mr. Speaker on the 29th May 1925, when contrary to recent precedents, he granted the closure at 11-45 p.m. on the first day's Debate in the Motion for the Second Reading of the Finance Bill.'

(முற்பகல் 11-00)

சாதாரண ப்ரொசீஜரை மீறிப் போய்விட்டார் என்பதற்காகக் கண்டிக்கிறோம் என்று ஒரு தீர்மானத்தை வெகு தெளிவாகக் கொடுத்திருந்தார்கள். அதே மாதிரித்தான் இதையும் கொடுத்திருக்கவேண்டுமென்று ஆட்சேபித்தேன். அந்த ஆட்சேபனையை இன்றைக்கும் வற்புறுத்துகிறேன். இன்றைக்கு ஒரு தீர்மானத்தைக் கொடுத்து நீங்கள் அங்கீகரித்த பிறகு அதை ஆட்சேபிக்க முடியாது.

1957-ம் ஆண்டு லோக் சபாவில் நடந்த விவாதத்தில் அன்றைக்கு சபையில் விற்றிருந்த ஸ்பீக்கர் திரு. அனந்தசயனம் அவர்கள் ஆட்சேபனை எழுப்பிய பிறகு, பலரும், விவாதித்த பிறகு ஸ்பெசிபிக்காக காரணம் கொடுத்துக்கொண்டு வந்திருக்க வேண்டும் —

Charges must be secified and concrete என்று சொன்னவுடனே அந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்தவர்கள் 'எங்களுக்கு ஒரு வாரம் கொடுத்தால் இதை கரெக்ட் பண்ணிக் கொடுக்கிறோம்' என்று சொன்னார்கள். ஆனால், ஜவஹர்லால் நேரு அவர்கள் 'பரவாயில்லை; தீர்மானம் வந்து விட்டது; விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளலாம்' என்று சொல்லிவிட்டார்கள்.

1974 மார்ச் 9] [திரு கே. டி. கே. தங்கமணி]

வருங்காலத்தில் ஸ்பீக்கர் பேரிலோ, டெபுடி ஸ்பீக்கர் பேரிலோ ரிமூவலுக்காகத் தீர்மானம் கொண்டு வரக்கூடிய காலத்திலே திட்டவட்டமாக ஸ்பீக்கர் என்ற முறையிலும், டெபுடி ஸ்பீக்கர் என்ற முறையிலும் இன்னின்ன தவறுகள் செய்திருக்கிறார் என்ற முறையில் வந்தால்தான் 'ஆபீஸ் ஆப் தி ஸ்பீக்கர்; ஆபீஸ் ஆப் தி டெபுடி ஸ்பீக்கர்'-க்கு சரியான அந்தஸ்து இருக்கும் என்பதை மீண்டும் ஒரு முறை வலியுறுத்திச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். டெபுடி ஸ்பீக்கர் பேரில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்ததைப்பற்றி அவை முன்னவர் சொல்கிறபோது—சார்லஸ் 4 பேரைக் கைது செய்ய வேண்டுமென்று சபை உள்ளே வந்த போது ஸ்பீக்கர்—

I have no eyes to see; I have no ears to hear, except what I am commanded by the House. என்று கூறியதாகக் கூறினர்.

இங்கு யார் இருக்கிறார்கள் என்று தெரியாது; நான்கு பேரைக் கைது செய்ய வேண்டுமென்று சொல்லுகிறீர்கள். ஆனால், எனக்குத் கண்ணே தெரியவில்லை என்று கூறி அந்த மாபைக் காப்பாற்றினர் அந்த ஸ்பீக்கர்.

ஸ்பீக்கர் என்று சொல்லக் கூடியவர்கள் சபையில் இருக்கக் கூடிய சகலரையும் பாதுகாக்க வேண்டியவர்கள். இன்றைக்கு எதிர்க்கட்சியில் இருப்பவர்களைக் கைது செய்ய வேண்டுமென்று வந்தவுடனே கைது செய்யலாம் என்று சொல்வீர்களா? ஆளும் கட்சியில் இருப்பவர்களைக் கைது செய்ய வேண்டாமென்று சொல்வீர்களா? அப்படி எல்லாம் நீங்கள் சொல்ல மாட்டீர்கள்.

நான் நாடாளுமன்றத்தில் 1957 முதல் 1962 வரை இருந்தேன். அப்போது சபாநாயகராக திரு. அனந்தசயனம் அய்யங்கார் அவர்கள் இருந்தார்கள். அவர்கள் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த வர்கள். உதவி சபாநாயகராக எதிர்க்கட்சியைச் சார்ந்த ஹுக்கும்சிங் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் காங்கிரஸ் கட்சியில் இல்லை. அகாலிதள கட்சியில் இருந்தார். அவர் டெபுடி ஸ்பீக்க ராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். டெபுடி ஸ்பீக்கர் பதவி ஸ்பீக்கர் இல்லாத நேரங்களில் சபையை நடத்திச் சென்றாலும், மற்ற நேரங்களில் எல்லா விவாதங்களிலும் பங்கெடுத்துக் கொள்ள முடியும். அதற்காகவே, ஹுக்கும் சிங் கேள்வி நேரத்தில் உப

[திரு கே. டி. கே. தங்கமணி] [1974 மார்ச் 9

கேள்விகள் கேட்பார். முக்கியமான விவாதங்கள் வருகிற நேரத்தில், அகாலி தள கட்சியின் சார்பில் பஞ்சாபைப் பற்றிய பிரச்சினைகள் வருகின்ற நேரத்தில் பங்கெடுத்துக் கொள்வார். ஆகவே, அப்படிப்பட்ட மாபு ஏற்பட்டிருக்கிறது. பின்னர் அவர் காங்கிரஸ் கட்சிக்குப் போய்விட்டார். அதற்குப் பிறகும்கூட துணைச் சபாநாயகர் எதிர்க்கட்சியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டார். இன்றைக்குக் கூட உதவி சபாநாயகராக எதிர்க்கட்சியைச் சேர்ந்த ஸ்வெல் இருக்கிறார். சபாநாயகர் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவராக இருந்தாலும் கட்சிக்கு அப்பாற்பட்டு இருக்க வேண்டும். (குறுக்கீடு)

We are not going to succeed in removing the Speaker or Deuty Speaker was not a Congressman; that is my point.

ஸ்வெல் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர் அல்ல என்று சொன்னேன்.

இங்கு கூட 1967 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்தவுடனே, அன்றைக்கு முதல்வராக இருந்தவர்கள் முதல்வர் என்ற ஹோதாவில் 'டெபுடி ஸ்பீக்கர் பதவியை எதிர்க் கட்சிக்குக் கொடுக்கிறேன்; அதை நீங்கள் ஏற்றுக்கொள்ளத் தயாரா' என்று கேட்டார்கள். அன்றைக்கு பிரதான எதிர்க் கட்சியாக இருந்த, ஒரே காங்கிரசாக இருந்த காங்கிரஸ் கட்சி ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லையென்று சொல்லிவிட்டார்கள். ஆனால், இந்த மாபு காப்பாற்றப்பட வேண்டுமென்று இதே சட்ட மன்றத்திலே முதலமைச்சர் அவர்கள் எழுந்து நின்று பேசிய விஷயங்களை ரெக்கார்டுகளைப் பார்த்தால் புரிந்துகொள்ள முடியும்.

இன்றைக்கு நான் கேட்டுக் கொள்கிறேன். இவர் ஏற்கெனவே உதவிசபாநாயகராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட சமயத்தில் ஆளும் கட்சியைச் சார்ந்தவராக இருந்தார். அப்போது அதை எதிர்க் கட்சியைச் சார்ந்தவர்களுக்குக் கொடுத்திருக்கலாம். கொடுப்ப தற்கான முயற்சிகள் எடுத்திருக்கலாம். 1967-ல் எடுக்கப்பட்டது. எதிர்க் கட்சியைச் சார்ந்தவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. 1971-ல் அந்த மாதிரியான முயற்சி எடுத்ததாகத் தெரியவில்லை. இப்போது நல்ல சந்தர்ப்பம் அவர்களுக்குக் கிடைத்திருக்கிறது. உங்கள் கட்சியில் இருப்பார் என்று தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் இன்று

1974 மார்ச் 9] [திரு கே. டி. கே. தங்கமணி]

எதிர்பாராத விதமாக எதிர்க்கட்சிக்கு வந்திருக்கிறார். 1967-ல் இந்தப் பதவியை எதிர்க்கட்சிக்குக் கொடுப்போம் என்று சொன்னீர்கள்; 1971-ல் நீங்கள் சொல்லாமல் போனாலும் இன்றைக்கு அதைத் திருத்திக் கொள்வதற்கு உங்களுக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது.

இன்றைக்கு இந்தத் தீர்மானம் ஆளும் கட்சித் தரப்பிலிருந்து கொண்டுவரப்பட்டிருக்கிறது. சபாநாயகர் பேரிலோ, உதவி சபாநாயகர் பேரிலோ இந்த மாதிரித் தீர்மானங்களை எதிர்க் கட்சியின் சார்பாகத்தான் 'எதிர்க் கட்சியிலிருப்பவர்களுக்குச் சரியான பாதுகாப்புக் கொடுக்கவில்லை; கொண்டுவரக்கூடிய ஒத்தி வைப்புத் தீர்மானங்களைச் சரியானபடி அனுமதிக்கவில்லை; எதிர்க் கட்சியினர் பேசிய முக்கியமான விஷயங்கள் அழிக்கப்பட்டு விட்டன' என்பது போன்று காரணங்களைச் சொல்லிக் கொண்டு வருவது முறை.

We are not going to succeed in removing the Speaker or Deputy Speaker.

அரசியல் சட்டம் ரொம்பத் தெளிவாகச் சொல்கிறது. சும்மா வாய்ஸ் ஓட் எடுத்து முடிவு செய்ய முடியாது. டிவிஷன் எடுக்கப்பட வேண்டும். 234 பேரில் 118 பேராவது ரிமூவ் பண்ண வேண்டுமென்று உறுதியாக ஓட்டுப் போட்டால்தான் ரிமூவ் பண்ண முடியும். இதுவும் அரசியல் சட்டத்தில் இருக்கிறது. அரசியல் சட்டத்தை மீறி எதுவும் செய்துவிட முடியாது. இந்த அவைக்குப் பாதுகாப்புக் கொடுக்கப்பட்டிருப்பது எதற்காக என்றால்—திடீரென்று எதிர்க்கட்சி சார்பில் ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்து நோட்டீஸ் கொடுத்து சபாநாயகரை ரிமூவ் பண்ணிவிடக் கூடாது என்பதற்காகத்தான் வைத்திருக்கிறார்கள்.

ஆனால், இப்போது நிலைமை எப்படி இருக்கிறது?

The boot is on the other leg. A resolution which is normally moved by Opposition is sought to be moved by the Ruling Party. That is the peculiar situation.

1972-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 2-ம் தேதி—

An extraordinary situation arose which required an extraordinary remedy என்று கல்வி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்.

[திரு கே. டி. கே. தங்கமணி] [1974 மார்ச் 9

இன்றைக்கும் எக்ஸ்ட்ராடினரி சிச்சுவேஷனு? எக்ஸ்ட்ராடினரி சிச்சுவேஷன் மறுபடியும் மறுபடியும் தோன்றக்கூடாது. எப்போதாவது ஒரு தடவை வரலாமே தவிர வருஷா வருஷம் எக்ஸ்ட்ராடினரி சிச்சுவேஷன் வந்து கொண்டிருக்க முடியாது. It would not be an extraordinary situation அந்த மாதிரியான நிலைமை வந்திருக்கிறது.

திரு. கந்தப்பன் அவர்கள் நாடாளுமன்றத்தில் இருந்தவர்கள். ப்ரொசீஜர் சம்பந்தமாக நன்கு அறிந்தவர் என்று ஹிரேன் முகர்ஜியே சொல்லியிருக்கிறார். இந்த நோட்டீஸைப் பற்றிப் பத்திரிகையில் பார்த்தவுடன் நம்முடைய போடி சட்டமன்ற உறுப்பினர் இதைக் கொண்டு வரப் போகிறார் என்று எதிர்பார்த்தேன். அவர் நோட்டீஸ் கொடுத்தாரா, கொடுக்கவில்லையா என்று எனக்குத் தெரியாது. 'நானே நோட்டீஸ் அனுப்பி விட்டேன்' என்று அவரே கூறியதாகப் பத்திரிகையில் பார்த்தேன். திரு. கந்தப்பன் போன்றவர்கள் கொண்டு வந்தால்—

I thought some light would be thrown on the resolution

என்று நினைத்தேன். ஆனால், எனக்கு எந்தவிதமான 'லைட்'டும் கிடைக்கவில்லை. ஆகவே, எதற்காக இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்பதை நாமேதான் ஊகித்துக் கொள்ள வேண்டும். அப்படி ஊகிக்கும் போது ஓரிரு விஷயங்களைச் சொல்லலாம் என்று நினைக்கிறேன்.

உதவி சபாநாயகர் அவர்கள் காமன்வெல்த் பார்லிமெண்ட் டெலிகேஷனோடு இங்கிலாந்துக்குப் போயிருந்தார். சென்று வந்தவர் எங்களை எல்லாம் கூட்டி வைத்து தன்னுடைய அனுபவங்களை எல்லாம் எடுத்துச் சொல்லுவார் என்று நாங்கள் எல்லாம்கூட எதிர்பார்த்தோம். சாதாரணமாக, நாடாளுமன்றத்தில் அவ்வாறு செய்வதுண்டு. பிரதம மந்திரியோ, சபாநாயகரோ இப்படிச் சென்றுவிட்டு வந்தால் எல்லோரையும் கூட்டி வைத்து தாங்கள் பெற்ற அனுபவங்களைச் சொல்வதுண்டு. 'இன்ஃபார்மலாக'க் கூட்டியாவது சொல்வதுண்டு. ஜவஹர்லால் நேரு அவர்கள் சுற்றுப் பயணம் சென்று விட்டு வந்தால் அப்படிச் செய்வதுண்டு. நம்முடைய சீனிவாசன் அவர்கள் அப்படிக் கூப்பிட்டு வைத்துப் பேசி ஏற்பாடு செய்வார்கள் என்று நினைத்தேன். ஆனால், ஒரு பத்திரிகையில் ஒன்று வந்தது.

1974 மார்ச் 9] [திரு கே. டி. கே. தங்கமணி]

'விகடன்' பத்திரிகையில் ஒரு விஷயம் வந்தது. அதைப் பார்த்த வுடனேயே இவருக்கு ஆபத்து ஆரம்பமாகிவிட்டது என்று நினைத்தேன். 'விகடன்' எழுதியிருந்த அந்தக் கருத்தை யாரும் மறுக்க முடியாது. மறுக்க முடியாத கருத்து அது.

"அரசியலின் பெயரால் நடைபெறும் விழாக்களில் யாருக்கு தன்மை? மகாராஜாக்கள் காலத்தில் இல்லாத அளவு, இக் காலத்திலே தனி மனிதர் வழிபாடு பெருகி வருகிறது. அரசியல், கோவில், சினிமா இந்த மூன்று துறைகளில் நம் மக்கள் மீளமுடியாத அளவு மூழ்கி இருக்கிறார்கள். எனக்குத் தெரிந்த வரையில் வேலையில்லாத் திண்டாட்டந்தான் காரணம். இதை மாற்றுகிற முழுப் பொறுப்பு ஆளும் பொறுப்பில் உள்ளவர்கள் கையில்தான் இருக்கிறது. 25 ஆண்டுகளாகத் தோல்வி, மக்களைக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்".

அவர்களுக்கு இந்தக் கருத்து ஏற்பட்டது. அவர்கள் இங்கிலாந்து போய் வந்தார். அங்கு இதுமாதிரி கோவில்களுக்கு போய்க் கொண்டிருக்கிறார்களா? அங்குள்ள தலைவர்களை யெல்லாம் அவர்கள் துதி பாடிக் கொண்டிருக்கிறார்களா? ஒவ்வொரு விழாவிற்கும் அமைச்சர்கள் வரவேண்டுமென்று சொல்லிக் கொண்டிருக்கிறார்களா? இம்மாதிரி நிலை அங்கே இல்லை. அங்குள்ள ஒரு பார்ட்டி தாங்கள் செய்த முடிவை அமல் செய்ய முடியாமல் இருந்தால் உடனடியாக சட்டசபையை அவர்கள் டிஸால்வ் செய்து விடுகிறார்கள்.

Immediaely Parliament is dissolved. During the first week, Parliament is dissolved. During the last week, election is held. Very quickly, a new Government is formed. அந்த முறையில் அங்கு பார்லிமென்டரி ஜனநாயக முறையை வைத்திருக்கிறார்கள்.

பார்லிமென்டரி ஜனநாயக முறைப்படி பெர்மனென்ட் அண்டர் செகரட்டரீஸ் அல்லது ஒரு நல்ல பெர்மனன்ட் சிவில் சர்வீஸை வைத்திருக்கிறார்கள். மந்திரிகள் மாறலாம். யார் மாறினாலும் கூட அந்த ஸ்ட்ரக்சர் அவ்வளவு அருமையாக இருக்கிறது, எனக்குத் தெரியும். ஒரு உதாரணத்திற்காகச் சொல்கிறேன். ஒரு எல்.டி.ஸி., யு.டி.ஸி. ஆவதற்குப் பதிலாக அவருக்கு அவுட் ஆப் டோர்ன் ப்ரமோஷன் வந்தது என்று ஒரு காரியத்தை

[திரு கே. டி. கே. தங்கமணி] [1974 மார்ச் 9

லேபர் மெம்பர் சொன்னவுடன் அதன் அமைச்சர், தான் ராஜி நாமா செய்யத் தயாராயிருக்கிறேன் என்று சொன்னார்கள். அந்த அளவிற்கு அவர்கள் நிர்வாகத்தை அங்கு ஒழுங்குபடுத்தியிருக்கிறார்கள். அங்கு தலையீடு என்பதே இல்லை. அங்கு அமைச்சர்களின் தலையீடு இல்லை, அல்லது சட்டமன்ற உறுப்பினர்களின் தலையீடு இல்லை. அதை காமன்வெல்த் பார்லிமென்டரி அஸோஸியேஷன் சார்பாக சென்று வந்த சீனிவாசன் அவர்கள் சொன்னார்கள். யாராக இருந்தாலும் சரி, அம்மாதிரியாகத்தான் பேசியிருப்பார்கள். இப்படி அவர்கள் பேசியிருக்கிறார்கள் என்பதால் அரசியல் காழ்ப்பு ஏற்பட்டிருக்கலாம்.

நான் இன்று ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். சபாநாயகர் ஆனாலும்சரி அல்லது உதவி சபாநாயகர் ஆனாலும்சரி அவர்களை நீக்குவது என்றால் எப்படி அரசியலமைப்புச் சட்டத்தில் அதற்குக் கடுமையான விதிகள் வைத்திருக்கிறார்களோ அந்த முறையில் இருக்கவேண்டும்.

எனக்கு ஒரு வருத்தம் உண்டு. டிஸம்பர் 2-ம் தேதி ஒரு சம்பவம் நடைபெற்றது. அன்றிருந்த சபாநாயகர் நீக்கப்பட்டார். அன்று நாங்கள் எல்லோரும் சொம்பவும் வேதனைப்பட்டோம். வேதனைப்பட்டது என்றால் அவர்கள் எங்கள் ப்ரென்டாக இருந்தார் என்பதற்காக அல்ல. நாம் ஜனநாயக முறைப்படி செயல் படுகிறோம். நாம் பார்லிமெண்டரி ஜனநாயகத்தை வைத்துக் கொண்டிருக்கிறோம். இந்த முறைதான், இதுதான் உயர்ந்த ஜனநாயகம் என்று நான் சொல்லவில்லை. பார்லிமென்டரி ஜனநாயக முறைப்படி நாம் சில முறைகளை வகுத்துக்கொண் டிருக்கிறோம். அவை பாதுகாக்கப்பட வேண்டும்.

டிஸம்பர் 2 ஆம் தேதி அன்று நடந்தது அரசியல் சட்டத்திற்கு விரோதமானது, ஜனநாயகத்திற்கு விரோதமானது. பொறுப் புள்ள உறுப்பினர்கள் என்ற முறையில், நான், திருமதி அனந்த நாயகி அவர்கள், திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் எல்லாம் அன்று இங்கு நடந்தது என்ன என்பதைப் பற்றி பிரமாண வாக்குமூலம் கொடுத்திருக்கிறோம். அது ஹைகோர்ட் டில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. அப்படிப் பதிவு செய்யப் பட்டதற்குப் பின்னால்—இங்கே ஓட்டளிக்கவில்லை—

There was no division. ஓட்டுக்குப் போடவில்லை

1974 மார்ச் 9] [திரு. கே. டி. கே. தங்கமணி]

என்பதைக் கண்ணுல் பார்த்திருக்கிறோம் என்று சொன்னுல்— ஸ்பீக்கருக்கு சான்ஸ் இல்லே என்பது வேறு விஷயம்—ஓட்டு எடுக்கப்படவில்லே என்பது நாங்கள் கண்ணுல் கண்ட விஷயம். நாங்கள் கடைசி வரையில் உட்கார்ந்திருந்தோம். கடைசியாக ஹைகோர்ட்டில் இருந்து ஓட்டு எடுத்ததாகத் தீர்ப்பு வந்தது. அந்தத் தீர்ப்பைப் பற்றி, அது தவறு என்று நான் சொல்லவில்லே. கோர்ட்டில் இருந்து இதுகுறித்து ஒரு தீர்ப்புப் பெற விரும்பினேம். இதுபற்றிக் கேள்வி எழுப்ப எண்ணினேம் இங்கு. பப்ளிக் அக்வவுன்ட்ஸ் கமிட்டி அல்லது செலக்ட் கமிட்டி போன்ற கமிட்டிகளாக இருந்தாலும், சட்டத்தைப் பாதிப்பது என்றுல் அமைச்சர்கள் என்று மட்டுமல்ல தனிப்பட்ட உறுப்பினர்களையும் கேள்வி கேட்கலாம்.

ஆயிரம் விளக்குத் தொகுதி உறுப்பினர் பேரில் ஒரு கேள்வி எழுப்பியிருந்தேன். இம்மாதிரி சுப்ரீம் கோர்ட்டுக்கு நீங்கள் அப்பீல் செய்தீர்களா, அதன் நிலேமை என்ன, என்று கேட்டு எழுப்பியிருந்தேன். இது அரசாங்கத்தைப் பொறுத்த ஒரு விஷயமாக இருப்பதால் லா மினிஸ்ட்டர் அவர்களிடமும் ஒரு கேள்வி கேட்டிருந்தேன். ஆனுல் இந்த இரண்டு கேள்விகளையும், அனுமதிக்க முடியாது என்று தாங்கள் சொல்லிவிட்டீர்கள். நான் அதைப்பற்றி குறை சொல்ல முடியாது. சபாநாயகர் அல்லது உதவி சபாநாயகரை நீக்குவது என்று சொன்னுல் முறைப்படி நீக்கவேண்டும். அப்படி நீக்குவது முறைகேடாக நடக்கும் என்று சொன்னுல் அதைத் தடுத்து நிறுத்துவதற்கு, அதுகுறித்து வாதாடுவதற்கு ஒரு இடம் வேண்டுமென்ற முறையில்தான் சுப்ரீம் கோர்ட்டை எதிர்பார்த்தோம். என் அபிப்பிராயம்— அவர்கள் சுப்ரீம் கோர்ட்டுக்குச் சென்றிருந்தால் விவரங்களே எல்லாம் கூறியிருக்க முடியும். நாங்கள் இங்கு ஹைகோர்ட்டில் அபிடவிட் கொடுத்திருக்கிறோம். அரசியல் சட்டத்தில் உள்ளபடி அமல்படுத்தப்படவில்லே என்று சொல்லியிருக்கிறோம். இவர்கள் 100. 150 பேர்கள் கவுண்டர் அபிடவிட் போட்டு, It is a made-up thing என்று சொல்லி எங்களுக்கு வாய்ப்பில்லாமல் போய்விட்டது.

டிஸம்பர் 2-ம் தேதி நடைபெற்றது நம்முடைய ரிக்கார்டில் இடம் பெறவேண்டுமென்று அன்று உதவி சபாநாயகர் அவர்கள் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொடுத்திருந்தோம்.

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1974 மார்ச் 9

நான் கொடுத்திருந்தேன், திருமதி அனந்தநாயகி அவர்கள் கொடுத்திருந்தார்கள், திரு. எம். ஜி. ஆர். அவர்கள் கொடுத்திருந்தார்கள், திரு. ஜேம்ஸ் அவர்கள் கொடுத்திருந்தார்கள், டாக்டர் ஹாண்டே அவர்களும் கொடுத்திருந்தார்கள். நாங்கள் ஐந்து பேர்கள் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொடுத்திருந்தோம். அதற்கு நாங்கள் 35 பேர்கள் எழுந்து நின்றோம், 24 பேர்களே போதும் என்றிருந்தாலும், விவாதத்திற்கு எடுத்துக் கொள்வோம் என்று சொன்னார்கள். அன்று நடந்தது என்ன? ரிக்கார்ட்ஸைப் பார்த்தால் அமளி, ஏக கூச்சல் என்றிருக்கிறது. ஆகவே 2-ம் தேதி நடந்த விஷயங்களை, எதிர்க்கட்சியில் இருப்பவர்கள் பார்த்துப் புரிந்து கொண்ட விஷயங்களை எடுத்துச் சொல்ல வேண்டுமென்ற முறையில் பெப்ரவரி 5-ம் தேதி உதவி சபா நாயகர் அவர்கள் மீதான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவந்தோம். அரசாங்கத்தைச் சார்ந்தவர்கள் சொல்கிறார்கள் என்பதற்காக அதற்கு ஒரு கருவியாக அன்று அவர்கள் செயல்பட்டார்கள். அதைக் கண்டிக்கும் விதத்தில்தான் அத் தீர்மானம் கொண்டு வரப்பட்டது. டிசம்பர் 2-ம் தேதி நடந்தது என்ன என்பதைப்பற்றி எங்களுக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி ஓளவிற்கு நாங்கள் பேசியிருக்கிறோம். சட்டமன்ற முன்னவர் அவர்களும் பேசியிருக்கிறார்கள். சீனிவாசன் அவர்களை ஆதரித்து அவர்கள் பேசியிருக்கிறார்கள். இரண்டாம் தேதி நடந்ததை, குறிப்பில் உள்ளதை, ஓளவை கரெக்ட் செய்து விட்டார்கள். பிறகு இன்று அவர்கள் நங்கள் கட்சிக்கு எதிராக இருக்கிறார், விரோதமாக இருக்கிறார் என்ற காரணத்தால் இப்படிச் சொல்கிறார்கள். நான் இத்தீர்மானத்தைக் கொண்டு வந்தவரைக் கேட்கிறேன். சட்டமன்றத்தில் அவர்கள் உதவி சபாநாயகராக இருக்கிறபோது உரிய முறையில் நடக்கவில்லையா? நான் உண்மையில் பெருமை அடைந்தேன்.

Here is a young man coming up. He is a model Speaker என்ற ஓளவிற்குப் பல காரியங்களைச் செய்திருக்கிறார்கள். அன்று அவர்கள் மாடல் ஸ்பீக்கர் என்றுதான் நீங்களும் சொன்னீர்கள். முன்னவர் அவர்களும் சொன்னார்கள். அன்று மாடல் ஸ்பீக்கராக இருந்தவரை ரிமூவ் செய்ய வேண்டுமென்று சொன்னபோது நீங்கள் அதை எதிர்த்தீர்கள். இன்று அவர்களை நீக்க வேண்டு மென்று நீங்கள் சொல்கிறீர்கள்.

1974 மார்ச் 9] [திரு. கே. டி. கே. தங்கமணி]

Is it not a contradiction மூன்பட்ட நிலை இருக்கிறது. முன்பு உதவி சபாநாயகர் அவர்களை ஏ டு இஸ்ட் நீங்கள் டிபன்ட் செய்திருக்கிறீர்கள். ஏ டு இஸ்ட் இப்போது இல்லை என்று நீங்கள் சொல்லவேண்டும். அன்று அவர்களை டிபன்ட் செய்தது முழுவதையும் அழித்துவிட்டு இன்று சில தடுமாற்றங்கள் ஏற்பட்டு விட்டன என்று சொல்லுங்கள். அன்று நாங்கள் டெப்டி ஸ்பீக்கரை ரிமூவ் செய்யவேண்டும் என்று சொன்னபோது காரணம் கூறிச் சொன்னோம். அன்று கூறப்பட்ட காரணம் அரசியல் காரணம். அன்று ஆளும் கட்சியைச் சார்ந்தவர்கள் தங்களுடைய மெஜாரிட்டி பலத்தை வைத்துக்கொண்டு சில காரியங்களைச் செய்யவேண்டுமென்று நினைத்தார்கள். அன்று திரு. மதியழகன் அவர்கள் தவறு செய்துவிட்டார்கள் என்று குறிப்பிட்ட ஒரு தவறைச் சொல்லி ரிமூவ் செய்யவேண்டுமென்று தீர்மானம் கொண்டுவந்தார்கள் என்றிருந்தால் அதைப் பற்றி யோசித்திருக்கலாம். ஆனால், மனதில் எதையோ வைத்துக் கொண்டு தங்கள் அதிகாரத்தைப் பயன்படுத்திக்கொண்டு, மெஜாரிட்டி பலத்தைப் பயன்படுத்திக்கொண்டு அரசியல் சட்டத்தைத் தூக்கி எறிவோம், பார்லிமென்டரி ஜனநாயக முறைகளை நாங்கள் கடைப்பிடிக்க மாட்டோம் என்ற அளவிற்கு வந்திருக்கிறார்கள் என்பதுதான் என் குற்றச்சாட்டு. உதவி சபாநாயகர் அவர்கள் என்ன தவறு செய்தார்கள் பிப்ரவரி 5-ம் தேதிக்குப் பிறகு? அவர்கள் என்ன தவறு செய்திருக்கிறார்கள் என்பதை இந்தத் தீர்மானத்தைக்கொண்டு வந்திருப்பவர் சொல்ல வேண்டும். அவர்கள் அந்தமாதிரி எந்தத் தவறையும் செய்த தாக எனக்குத் தெரியவில்லை. சபையை விட்டு யாரையும் அவர் வெளியே போ என்று சொல்லவில்லை. அதிகாரத்தைப் பயன் படுத்திக் கொண்டு எந்தவிதத் தவறும் செய்ததாகத் தெரியவில்லை. இத் தீர்மானத்தைக் கொண்டு வந்தவர் அல்லது அதற்கு ஆதர வாகப் பேசுகிறவர்கள் சொல்லவேண்டும் அவர் என்ன தவறு செய்துவிட்டார் என்று. இந்தத் தீர்மானம் அரசாங்கத்தால் கொண்டு வரப்பட்டது. கந்தப்பன் அவர்கள் தனியாகக் கொண்டு வந்தார் என்று சொல்ல முடியாது. காரணம் இந்தத் தீர்மானத் தைக் கொண்டு வர அனுமதி வேண்டுமென்று கேட்டபோது ஆளும் கட்சியைச் சார்ந்த அனைவரும் எழுந்து நின்றனர்.

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1974 மார்ச் 9

எதிர்க்கட்சிக்காரர்களைப் பொறுத்தவரையில் இதிலே ஒருநிலை எடுக்கவில்லை. திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் சொன்னது போல், இதை ஆதரிக்கவும் இல்லை, எதிர்க்கவும் இல்லை. ஆனால் ஆதரித்து, எப்படியாவது அவர்களை வெளியேற்றி விடவேண்டு மென்று தீர்மானம் கொண்டு வருவதில் முழுமையாக இருப்பது ஆளும் கட்சி தான். ஆகவே, ஆளும் கட்சி தான் அவர்கள் செய்யும் தவறுகளையும், ஆளும் கட்சிக்கு ஏற்படக்கூடிய சில கோளாறுகளையும் சொல்லவேண்டும். ஆளும் கட்சி செய்யக்கூடிய தவறுகளிலே மிகப்பெரிய தவறு இது தான். அரசியல் தவறு செய்தால், தவறுகளைத் திருத்திக்கொள்ளலாம். ஆனால் அரசியல் சட்டத்திற்கு விரோதமாக, இந்த மாதிரி சட்டமன்ற விதி களுக்குப் புறம்பாக, எங்களுக்குத்தான் மெஜாரிட்டி இருக்கிறது என்ற வகையில் நடந்துகொண்டு போவீர்களானால்

It will certainly amount to subversion of Constitution and Assembly is a creature of Constitution and State Government is a creature of the Constitution. Where will it lead to?

இப்படி நாங்கள் அரசியல் சட்டத்தை மதிக்க மாட்டோம் என்று சொன்னால்—இந்த சட்டமன்றம் உருவானதே அரசியல் சட்டத்தால் தான். அந்த அரசியல் சட்டம் இல்லாமல் எப்படி சட்டமன்றம் வந்தது? தேர்தல் வந்தது? எங்களைப் பொறுத்தவரையில் அரசியல் சட்டத்தில் இருக்கும் முக்கியமான சில கோட்பாடுகளைக்கூட நீங்கள் நிராகரிக்கும் தன்மை எற்படுகிறது. இந்தத் தீர்மானத்தை அரசே கொண்டுவரத் தூண்டியிருக்கிறது என்ற குற்றச்சாட்டை நான் கூறி, அரசே இதில் தவறு செய்து இருக்கிறது என்று கூறி என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவரவர்களே, இந்த முக்கியமான தீர்மானத்தில் எங்கள் கட்சியின் சார்பாக ஒரு சில கருத்துக்களைக் கூறுவதற்கு முற்படுகிறேன்.

இந்தத் தீர்மானத்தைப் பொறுத்தவரையில் இது ஒரு தக்க காரமான தீர்மானம் என்று சொன்னால் மிகையாகாது. ஏனென் றால், ஆளும் கட்சித் தரப்பிலிருந்து இப்போது உதவி சபாநாயகர் அவர்களை நீக்குவதற்காகத் தீர்மானத்தைக் கொண்டுவந்து இருக் கிறார்கள். தீர்மானத்தை முன்மொழிந்த திரு. கந்தப்பன் அவர்கள் அதற்கு வேண்டிய காரண காரியங்களை விளக்குவார்கள்

1974 மார்ச் 9] [திரு. ஆர். பொன்னப்ப நாடார்]

என்று நான் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். ஆனால் அவர் பேசியதிலிருந்து உதவி சபாநாயகர் மீது என்ன குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது என்பதை நான் ஆராய்ந்து பார்க்கிறபோது அதிலே உருப்படியான குற்றச்சாட்டு, ருசுவான குற்றச்சாட்டு ஏதும் இல்லை என்று நான் திட்டவட்டமாகக் கூற விரும்புகிறேன். அவர்களுடைய நோக்கம் இந்த உதவி சபாநாயகர் அவர்களை நீக்கி விடவேண்டும்.

கட்சி நோக்கு இல்லாமல் இதைக் கவனிப்பது சாலச் சிறந்ததாக இருக்கும் என்று கருதுகிறேன். சபாநாயகராக இருந்தாலும் சரி, உதவி சபாநாயகராக இருந்தாலும் சரி அவர்களைத் தேர்ந்தெடுத்த பிறகு அவர்கள் கட்சிக்கு அப்பாற்பட்டவர்கள் என்று இருப்பது ஜனநாயக மரபு. அந்த ஜனநாயக மரபு இங்கே நடந்து கொண்டிருக்கிறதா என்றால் இல்லை என்று திட்டவட்டமாக, தெளிவாகக் கூற நான் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

இன்று மார்ச் மாதம் 9-ம் தேதி சனிக்கிழமை இந்த நிகழ்ச்சி நடக்கப் போகிறது. முன்பு டிசம்பர் மாதம் 1972-ம் ஆண்டில் சனிக்கிழமையன்று இதே மாதிரி காரியம் செய்து முன்னாள் சபாநாயகராக இருந்த மதியழகன் அவர்களை வெளியேற்றினார்கள். அந்த நிகழ்ச்சி இன்றையதினம் நடக்கப் போகிறது என்பது எனக்கு நன்றாகத் தெரியும். ஏனென்றால் அதிக பெரும்பான்மையுள்ள ஆளும் கட்சியினர் இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றுவதற்கு ஆற்றல் பெற்று இருக்கிறார்கள். வலுப் பெற்று இருக்கிறார்கள் என்பதை உணருகிறேன். இருப்பினும், எங்கள் கட்சியின் சார்பில் என் மனதில் பட்ட ஒரு சில கருத்துக்களைக் கூறாமல் இருக்க முடியாது.

மதிப்பிற்குரிய சீனிவாசன் அவர்களைப் பொறுத்தவரையில், அவர்கள் உதவி சபாநாயகராக இருந்த நேரத்தில் நல்ல முறையில் நடந்து கொண்டார்கள் என்பதை நான் மனப்பூர்வமாகச் சொல்லிக்கொள்கிறேன்—ஒரு தினம் தவிர அதாவது டிசம்பர் 2-ம் தேதி 1972 என்பதை மட்டும் நான் வலியுறுத்திக் கூறக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். அன்று இந்த மன்றத்தில் ஜனநாயகம் கொலை செய்யப்பட்டது. அரசியல் சட்டம் தாறுமாறுக்கப்பட்டது என்ற குற்றச்சாட்டை நாங்கள் பல மணி நேரம் எழுந்து நின்று இந்த மன்றத்தில் கூறினோம். ஆனால்

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1974 மார்ச் 9

அதிகார பூர்வமாக அச்சிட்டுத் தந்து இருக்கும் புத்தகத்தைப் பார்த்தால், எல்லாம் கூச்சல் குழப்பம் நடந்தது என்று கூறியிருக்கிறார்கள். அதற்கு உடந்தையாக ஒரு சில அதிகாரிகள் இருந்தார்கள். அதற்கு இன்று பரிசும் பெற்று இருக்கிறார்கள் என்பதை நாம் கண்கூடாகக் கண்டு கொண்டிருக்கிறோம். அதை யெல்லாம் நாம் மறந்திடலாகாது. அத்தகைய நிகழ்ச்சி இன்று நடக்காமல் இருப்பதைப் பார்த்து மெத்த மகிழ்ச்சி அடைகிறேன். அந்த மாதிரி நிகழ்ச்சி—யாராக இருந்தாலும் சரி—நடப்பது விரும்பத்தக்கது அல்ல, வெறுக்கத்தக்கது என்பதை நான் கூறக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அடுத்தபடியாக இந்தத் தீர்மானத்திலே பாராளுமன்ற சட்ட நுணுக்கங்களைப் பற்றி யெல்லாம் எனக்கு முன்பு பேசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. தங்கமணி அவர்கள் எடுத்துக் கூறினார்கள்.

உதவி சபாநாயகர் அவர்களுக்கு இந்தத் தீர்மானத்திலே பேசுவதற்கு வாய்ப்பு உண்டா இல்லையா என்ற ஒரு ஒழுங்கு முறையை முன்பு எடுத்துக் கூறினேன். அப்போது இந்த சபையின் தலைவராக இருந்த பழனிவேல் ராஜன் அவர்கள், ஒரு உறுப்பினர் என்ற முறையில் இந்த வாதத்தில் அவர் கலந்து கொள்ளலாம் என்ற தீர்ப்பை வழங்கியிருக்கிறார்கள். ஆதலால் அந்தப் பிரச்சினைக்கு நான் போகவேண்டுமென்று நினைக்கவில்லை.

ஆளும் கட்சியிலிருந்து அவர்கள் கட்சி மாறி விட்டார்கள் என்ற காரணத்திற்காக இந்தத் தீர்மானம் கொண்டு வந்து இருக்கிறார்களே தவிர, வேறு எந்தவிதமான குற்றச்சாட்டையும் நான் காணவில்லை. இந்த மன்றமும் காண முடியாது என்பதை மறு முறையும் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, சபாநாயகர், உதவி சபாநாயகர் எல்லாம் எப்படி இருக்கவேண்டும் என்ற பல அறிவுரைகளை நான் பல புத்தகங்களில் படித்து இருக்கிறேன். நம்முடைய சட்டமன்றத்தைப் பொறுத்தவரையில் சீரோடும், சிறப்போடும், பேரோடும், புகழோடும் செயலாற்றி வருகிறோம் என்று நாம் பெருமைப் பட்டுக்கொண்டிருக்கிறோம். ஆனால் டிசம்பர் 2, 1972-ம் தேதி ஏதேனும் ஒழுங்காக நடந்து இருக்கிறதா என்றால், அன்று நடக்க

1974 மார்ச் 9] [திரு. ஆர். பொன்னப்ப நாடார்]

வில்லை என்பதை மறந்து விடமுடியாது என்று சொல்லிக்கொள் கிறேன். அன்று ஒரு மர்ம நாற்காலியானது இந்த மன்றத்தில் தோன்றியது. அதை நம்முடைய சபை முன்னவர் அவர்கள் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். அந்த மர்ம நாற்காலி இன்று இல்லையே என்று நான் சந்தோஷப்படுகிறேன். மார்ச் மாதம் என்று சொன்னாலே உலக வரலாற்றிலே மிகவும் முக்கியமானதாக இருக்கிறது. மார்ச் 15-ம் தேதி என்று கருதுகிறேன்—இட்ஸ் ஆப் மார்ச்—ஜூலியஸ் சீசரை அவர்களுடைய நண்பர்கள் என்ன செய்தார்கள், புரூட்டஸ் போன்றவர்கள் என்ன செய்தார்கள் என்பதையெல்லாம் ஷேக்ஸ்பியர் நாடகங்களில் படித்திருக்கிறேன். அந்த மாதிரி நாடகம் இன்றைக்கு நடக்கப்போகிறதோ என்ன வோ தெரியவில்லை. புரூட்டஸ் இருக்கிறார்களா, கேசியஸ் இருக்கி றார்களா என்ற கருத்தினுள் நான் போக விரும்பவில்லை. lean and hungry look என்று ஷேக்ஸ்பியர் சொல்லியிருக்கிறார். அது மாதிரி பல புரூட்டஸ் வரலாம், கேசியஸ் வரலாம்.

ஆனால், பெரிய பதவியில் இருப்பவர்கள் சட்டத்தை நல்ல முறையில் வழி நடத்திச் செல்ல வேண்டுமென்று இந்தச் சந்தர்ப் பத்தில் நான் கூறிக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். நம் முடைய பாராளுமன்றத்தில் பெரிய சபாநாயகராக இருந்தவர் களைப் பற்றியெல்லாம் நாம் படித்திருக்கிறோம். விட்டல் பாய் பட்டேல் அவர்களை நாம் மறக்க முடியாது. அதற்குப் பிறகு மௌலங்கர் அவர்கள் வந்தார்கள். அவர்களைப் பற்றியெல்லாம் நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். சபாநாயகர் அவர்களைப் பதவியில் இருந்து நீக்கவேண்டுமென்று சொன்னால் அதற்கு காரண காரியங் களைச் சொல்ல வேண்டுமா, வேண்டாமா என்பதைப்பற்றி நம்மு டைய விதிமுறைகளிலே தெளிவாகக் காணப்படவில்லை. ஒரு வேளை ஒரு வேளை தீர்மானம் நிறைவேற்றி விடலாம் என்று இருந்தாலும். இந்தத் தீர்மானத்தில் காரண காரியங்களைக் காட்டாத காரணத்தால். இதுபற்றி விவாதிக்கத் தேவையில்லை என்ற கருத்தையும் நான் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஸ்பீக்கர் அல்லது, டெபுடி ஸ்பீக்கர் எந்த முறையில் இருக்க வேண்டுமென்பதற்கு ஒரு சில சான்றுகளை மேஜைட்டுப் பெரியவர் கள் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அதிலே ஒரு சில கருத்துக்களை

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1974 மார்ச் 9

இந்த மன்றத்தில் கூறுவது எனக்குக் கடமையாக இருக்கிறது என்று கருதுகிறேன். உங்களுடைய அனுமதியின் பேரில் அந்த வாசகங்களை நான் இங்கே படிப்பதற்கு முற்படுகிறேன்.

The Speaker is above sectional interests and immune from party influences. Fom the moment of his appointment, he withdraws completely from political activity and ceases to belong to any party.

அதாவது, ஒருவர் சபாநாயகராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு எப்படி இருக்கவேண்டும். அவர் கட்சிப் பணியிலிருந்து தன்னை அப்பாற்படுத்திக்கொண்டு, இந்த நாட்டின் பணிக்குத் தன்னை அற்பணித்துக்கொள்ள வேண்டும். இது உதவி சபாநாயகர் அவர்களுக்கும் பொருந்தும் என்று கருதுகிறேன். உதவி சபாநாயகராக இருந்த சீனிவாசன் அவர்கள்—நாங்கள் எதிர்க் கட்சியில் இருந்தபோதிலும்—பல தடவைகளில் நியாயமாக நடந்துகொண்டார்கள், டிசம்பர் 2-ம் தேதி நடந்த நிகழ்ச்சியின் போது தவிர, என்பதை மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன். அப்போதும் அவர்கள் கட்சிப்பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள் என்பது எங்களுக்குத் தெரியும். ஆதலால்தான் தீர்மானமானது இன்று மன்றத்திற்கு வந்திருக்கிறது என்பதையும் நாம் நோபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்.

அடுத்தபடியாக

(முற்பகல் 11-30)

The Speaker is not only to be impartial but he should also seem to be impartial. He is the friend of every member, yet he must avoid close friendships with individual members lest he might appear to favour some members over others.

அதாவது ஸ்பீக்கர் ஆனவர் நடுநிலைமையாளராக இருக்க வேண்டும் என்பது மட்டுமல்லாமல், இந்த மன்றத்திலும் அவர்கள் நடு நிலைமையாளராக இருக்கிறார்கள் என்பது வெளிப்படையாகத் தெரியவேண்டும். ஆங்கிலத்தில் சொல்வார்கள்

Justice should not only be done but it should also appear to be done.

என்று நீதி மன்றத்தைப் பொறுத்த அளவில் சொல்வார்கள். அதே மாதிரி இந்த மன்றத்தைச் சிரோடும், சிறப்போடும் நடத்த

1974 மார்ச் 9] [திரு. ஆர். பொன்னப்ப நாடார்]

வேண்டும். அந்த மரபைக் கட்டிக் காத்திட நமது சபாநாயகரும், உதவி சபாநாயகரும் அதை மரபாக வைத்துக் கொள்ளவேண்டும் என்பதையும் நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, மூன்றாவது ஒரு கருத்தினையும் நான் கூற முற்படுகிறேன்.

The office of Speaker does not demand rare qualities. It demands common qualities in a rare degee.

அதாவது, அவர்களுக்குப் பொது அறிவு நல்ல முறையிலே இருக்கவேண்டும், அதுவும் அதிகமான அளவிலே இருக்கவேண்டும் என்ற கருத்துதான் இதில் கூறப்பட்டிருக்கிறது.

நாம் எடுத்துப் பார்த்தால் மேல் நாடுகளில் பாராளுமன்றங்களில் வழக்கறிஞர்கள்தான் ஸ்பீக்கர்களாக இருக்கவேண்டுமென்ற நியதி அங்கே இல்லை. நல்ல வழக்கறிஞர்களும் அங்கே ஸ்பீக்கராக இருந்து சிறப்பாகச் செயலாற்றியிருக்கிறார்கள். இந்த மன்றத்தில் பல வழக்கறிஞர்கள் ஸ்பீக்கராக இருந்தார்கள், டாக்டர்கள் ஸ்பீக்கராக இருந்தார்கள். அவர்களெல்லாம் தங்களுடைய பணியைச் சிறப்போடு ஆற்றியிருக்கிறார்கள்.

அதே மாதிரி திரு. சீனிவாசன் அவர்களும் ஒரு வழக்கறிஞர். இளமைத் துடிப்பு உடையவர். அவர் இந்த மன்றத்தை சரியான முறையிலே நடத்திச் சென்றிருக்கிறார்கள். அதற்கு நாங்கள் ஆட்சேபனை சொல்லவில்லை.

ஆனால், வேறு ஒரு கருத்தினை நான் இங்கே வலியுறுத்த விரும்புகிறேன். டெப்யூடி ஸ்பீக்கர் பதவியை எதிர்க் கட்சியினருக்குக் கொடுப்பதற்கு 1967-ல் அன்று ஆளும் கட்சி எங்களுக்கு சந்தர்ப்பம் தந்ததாகவும், நாங்கள் அதை நிராகரித்ததாகவும் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் எடுத்துக் கூறினார்கள். நான் ஒன்று கூற விரும்புகிறேன். எதிர்க்கட்சிக்கு டெப்யூடி ஸ்பீக்கர் பதவி வேண்டும் என்று யாரும் விரும்பவில்லை என்ற கருத்தினை இந்தச் சந்தர்ப்பத்திலே கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். எனென்றால், இன்று இருக்கக்கூடிய முறையில் ஆளும் கட்சியினுடைய அனுதாபம் இல்லாமல், டெப்யூடி ஸ்பீக்காராலும் சரி, ஸ்பீக்காராலும் சரி, இருக்க முடியாது என்பதை இந்த மன்றமே நிரூபித்து இருக்கிறது. ஆதலால் அந்த விஷயத்தினை நான் அலச முன்வரவில்லை.

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1974 மார்ச் 9

இன்னொரு விஷயத்தையும் நான் இங்கே கூறவேண்டுமென்று நினைக்கிறேன். 'நீங்கள் அன்று டெப்யூடி ஸ்பீக்கர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்துவிட்டு, இப்பொழுது நடுநிலைமையில் இருக்கிறீர்களே' என்று ஒரு வேளை கேட்கக்கூடும். எங்களைப் பொறுத்தவரையில் இந்தத் தீர்மானம் இந்த மன்றத்திலே நிச்சயம் நிறைவேறப்போகிறது என்பது தெரியும். கட்சி விப் கூட ஒரு வேளை கொடுத்திருக்கிறார்கள் என்று நான் கருதுகிறேன். ஆதலால் இந்தத் தீர்மானம் எங்களைப் பொறுத்தவரையில் முடிந்துபோன ஒரு முடிவாக இருக்கின்ற காரணத்தினால், நாங்கள் இதில் நடுநிலைமையில் இருக்கிறோமே தவிர வேறு ஒன்றுமில்லை.

அது அல்லாமல் இந்த நாட்டில் ஜனநாயகத்தைக் கட்டிக் காப்பதற்கு இந்த அரசியல் அமைப்புச் சட்டத்தில் நாம் எல்லோரும் நம்பிக்கை உடையவர்களாக இருக்கவேண்டும் என்ற காரணத்தினால், நாம் எல்லோரும் இந்த அரசியல் அமைப்புச் சட்டத்தின் கீழே பிரமாணம் எடுத்துக்கொண்டு இந்த மன்றத்திற்கு வந்திருக்கிறோம். ஆதலால் அரசியல் அமைப்புச் சட்டம் தான் மிகவும் பொருத்தமானது, சிறந்தது. அதுதான் நம்மை ஆளவேண்டும். அது அல்லாமல் நம்மை நம்முடைய உணர்ச்சிகள் ஆள்க்கூடாது என்பதை இந்த நேரத்தில் எடுத்துக்கூறி, என்னுடைய வார்த்தைகளை இத்தோடு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. க. உரொ. எட்மண்ட்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்மீது கொண்டுவரப் பட்டிருக்கிற நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின்மீது எனது கட்சியின் சார்பில் சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

இங்கே பேசிய மாண்புமிகு இந்திய கம்யூனிஸ்டு கட்சித் தலைவர் திரு. தங்கமணி அவர்கள் சொன்னதைப் போல, பேரவைத் துணைத் தலைவர்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொடுத்திருக்கிற நண்பர் கந்தப்பன் அவர்கள், அந்தத் தீர்மானத்தில் அதற்கு உண்டான காரணங்களை சொல்லவில்லை என்றாலும் கூட, 14 நாட்களுக்கும் பின்னால் இன்றையதினம் இந்த மன்றத்தில் இந்தத் தீர்மானத்தை முன்மொழிந்து பேசுகின்ற நேரத்தில் பேரவைத் துணைத் தலைவரை நீக்குவதற்கு உண்டான காரண

1974 மார்ச் 9] [திரு. க. உரொ. எட்மண்ட்]

காரியங்களை இந்த மன்றத்தில் எடுத்துச் சொல்வார்கள் என்று நான் எதிர்பார்த்தேன். ஆனால் எந்தக் காரணத்தையும் அவர்கள் சொல்லாதது எங்களுக்கு இரண்டு வகையிலே ஐயத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

ஒன்று, ஏறத்தாழ மூன்று ஆண்டு காலமாக இந்த மன்றத்திலே துணைத் தலைவராக இருந்து தன்னுடைய பொறுப்புகளையும், கடமைகளையும் எதிர்க்கட்சியைச் சார்ந்த நாங்களும்கூட பாராட்டுகின்ற வகையில் திறமையான முறையில் நம்முடைய பேரவைத் துணைத் தலைவர் மாண்புமிகு சிவிவாசன் அவர்கள் சாதித்திருக்கிறார்கள் என்ற காரணத்தினாலும், மூன்று ஆண்டு பதவி காலத்திற்குள் அவர்கள் எந்தவிதமான தவறையும் செய்யவில்லை என்பதை மறைமுகமாகச் சொல்கின்ற வகையிலேயும் அவர்கள் எந்தக் காரணத்தையும் காட்டவில்லை என்று நான் நினைக்கிறேன்.

மற்றொன்று, அவர்கள் தி.மு.க.-விலிருந்து விலகி அண்ணா தி.மு.க.-வில் தன்னை இணைத்துக் கொண்டதாக அறிக்கை விட்டவுடன் எந்தவிதமான காரணத்தையும் தேடிக் கண்டுபிடிக்க முடியாமல், அதற்கான அவகாசம் இல்லாத சூழ்நிலையில், இந்தத் தீர்மானத்தை அவர்கள் அனுப்பியிருக்கிற காரணத்தினால், அவர்களைப் பதவியிலிருந்து விலக்குவதற்கு எந்தக் காரணத்தையும் தெரிவிக்கவில்லை என்பதையும் எங்களால் உணர முடிகிறது.

ஆனால், ஒரு காரணத்தை அவர் மறைமுகமாக இந்த மன்றத்தில் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். 174 பேர்களுக்கு அவர் மீது நம்பிக்கையில்லை என்ற கருத்தை நம்முடைய கந்தப்பன் அவர்கள் சொல்லிய நேரத்தில், இந்த மன்றத்தில் 174 பேர்களுக்கு அவர் மீது நம்பிக்கையில்லை என்றால், 'எங்களோடு இருந்தவர் இன்றைக்கு எதிர்க்கட்சிக்குப் போய் விட்டார்கள், தி.மு.க.-வில் உறுப்பினராக இதுவரையில் இருந்தவர் அண்ணா தி.மு.க. வில் சேர்ந்துவிட்டார்' என்கின்ற காரணத்தினால்தான் என்பதை அவர் இங்கே சூசகமாக காட்டிக் காட்டியிருக்கிறார்கள். நான் ஒன்றை மாத்திரம் இந்த மன்றத்திற்கு வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். நம்முடைய சம்பிரதாயம், விதிமுறைகள் படி, இந்திய அரசியல் அமைப்புச் சட்டமாக இருந்தாலும் சரி, தமிழ் நாடு சட்டமன்ற விதிமுறை

[திரு. க. உரொ. எட்மண்ட்] [1974 மார்ச் 9

களாக இருந்தாலும் சரி, போவைத் தலைவராக இருப்பவர்தான் கட்சிக்கு அப்பார்ப்பட்டவராக இருக்கவேண்டும், ஆனால் போவைத் துணைத் தலைவராக இருப்பவர் கட்சியில் ஈடுபாடு உள்ளவராக இருக்கலாம். நான் கூட இந்த மன்றத்தில் இரண்டு ஆண்டு காலம் துணைச் சபாநாயகராகப் பணியாற்றியிருக்கிறேன். அந்த நேரத்தில்கூட சபாநாயகராக இருப்பவர்தான் அரசியல் பொதுக் கூட்டங்களில் பேசக் கூடாது என்கின்ற விதிமுறை இருந்ததே தவிர, துணைச் சபாநாயகராக இருப்பவர் தான் எந்தக் கட்சியைச் சார்ந்தவராக இருந்தாலும், அந்தக் கட்சியின் பொதுக் கூட்டங்களில் பேசுவதற்கு உரிமை இருந்திருக்கிறது.

அதைப் போலவேதான் நம்முடைய துணைச் சபாநாயகர் சீனிவாசன் அவர்கள் கூட தி.மு.க.வில் இருக்கும்பொழுது தி.மு.க. பொதுக் கூட்டங்களில் பேசியிருக்கிறார்கள். தேர்தல் பிரசாரத்தில் கலந்துகொண்டிருக்கிறார்கள். அதைப்போலவே, அவர் அண்ணு தி.மு.க.-வுக்கு வந்ததற்குப் பின்னாலே எங்கள் கட்சியைச் சேர்ந்த தேர்தல் கூட்டங்களில் பேசியிருக்கிறார்கள்.

இதையெல்லாம் எதற்காக எடுத்துக் கூறுகிறேன் என்றால், துணைத் தலைவராக இருப்பவர் கட்சி மாச்சர்யங்களுக்கு அப்பார்ப்பட்டவராக இல்லை. அவர் எந்தக் கட்சியிலும் இருக்கலாம். இன்னும்கூட உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், இந்திய அரசியல் அமைப்புச் சட்டப்படி, தமிழ் நாடு சட்டமன்ற விதிமுறைகள் பிரகாரம் போவைத் தலைவர் இல்லாத நேரத்தில் துணைச் சபாநாயகர் சபையினுடைய கூட்டத்திற்குத் தலைமை வகிப்பார்.

சபாநாயகர், துணைச் சபாநாயகர் இல்லாத நேரத்தில், சபா நாயகரால் அப்பாயிண்ட் செய்யப்பட்ட பானெல் ஆஃப் சேர்மன் இந்த மன்றக் கூட்டங்களுக்குத் தலைமை வகிக்கிறார்கள். பானெல் ஆஃப் சேர்மன் போடும்பொழுது ஆளும் கட்சியில் இருப்பவர்களை மட்டும் அல்லது உங்களோடு உடந்தையாக இருந்து தோழமைக் கட்சியில் உள்ளவர்களை மட்டும் போடுவது இல்லை. எதிர்க்கட்சிகளிலிருந்துகூட பானெல் ஆஃப் சேர்மன் போடுகிறார்கள். இப்பொழுதுகூட எங்கள் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் குழ. செல்லையா அவர்கள் பானெல் ஆஃப் சேர்மனில் இருக்கிறார். சென்ற கூட்டத்திலேகூட நான் பேனல் ஆஃப்

1974 மார்ச் 9] [திரு. க. உரொ. எட்மண்ட்]

சேர்மனில் இருந்திருக்கிறேன். யாரைப் போடுகிறார்களோ அவர் சபைக் கூட்டத்திற்குத் தலைமை வகிக்கும்பொழுது எந்தக் கட்சியைச் சேர்ந்தவராக இருந்தாலும் சரி, சபையை நியாயமான முறையில் நடத்தவேண்டும் என்ற சம்பிரதாயத்தைப் பின்பற்றும் வகையில் பேனல் ஆஃப் சேர்மன் போடும்பொழுது ஆளும் கட்சியிலிருந்தும் போடுகிறார்கள், எதிர்க்கட்சியிலிருந்தும் போடுகிறார்கள். சில நேரத்தில் எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்கள் தலைமை வகிக்கிறார்கள். எங்கள் கட்சியைச் சார்ந்த திருச்சி செளந்தரபாண்டியன்கூட பேரவைத் தலைவர், துணைத் தலைவர் இல்லாத நேரத்தில் இந்த மன்றத்திற்குத் தலைமை தாங்கி கூட்டங்களை நடத்தியிருக்கிறார்கள்.

ஆகவே, துணைச் சபாநாயகராக இருப்பவர் எந்தக் கட்சியிலும் இருக்கலாம். அவர்கள் கொண்டு வந்திருக்கிற நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் வேறு எந்தக் காரணமும் இல்லாமல், அவர் செய்திருக்கிற தவறு எது என்பதைச் சொல்ல முடியாத நிலையில் தி.மு.க. விலிருந்து அண்ணு தி.மு.க. வுக்குப் போய்விட்ட காரணத்தை அடிப்படையாக வைத்துத்தான் இன்றைக்கு நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஒரு மாதம் கழித்துக் கொண்டு வந்திருந்தாலும், திரு. சீனிவாசன் அவர்கள் தி.மு.க. விலிருந்து விலகி அண்ணு தி.மு.க.வில் சேர்ந்த பிறகு இப்பொழுது சட்டமன்றத்தினுடைய தொடர் கூட்டம் நடந்து கொண்டிருக்கிறது, இந்தச் சட்டமன்றக் கூட்டத்தில் அவர் எப்படி நடந்து கொள்கிறார்கள், நியாயமான தீர்ப்புகளை வழங்குகிறார்களா, நியாயத்திற்குப் புறம்பான தீர்ப்புகளை வழங்குகிறார்களா என்பதையெல்லாம் பொறுத்திருந்து பார்த்துவிட்டு, அதற்குப் பிறகு நடைமுறையில் சரியில்லை என்று சொன்னால், நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவருவதில் நியாயம் உண்டு. எதற்காகச் சொல்கிறேன் என்றால், எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் பானல் ஆஃப் சேர்மனில் வருவதைப் போல துணைச் சபாநாயகரும் வருவதிலே எந்தவிதமான ஆட்சேபனையும் இருக்க முடியாது.

சபாநாயகருடைய இருக்கையில் உட்கார்ந்துகொண்டு, சபையின் நடவடிக்கைகளை நடத்தும்போது, சபாநாயகர் தீர்ப்பு கொடுக்கும்போது நியாயமான முறையிலே நடந்துகொள்ள

[திரு. க. ஒரொ. எட்மண்ட்] [1974 மார்ச் 9

வேண்டுமென்ற சம்பிரதாயத்தை நாம் பெற்றிருக்கிறோம். அந்த சம்பிரதாயங்களை மீறக்கூடாது. இன்னும்கூட சபாநாயகருக்கு அதிகாரம் இருக்கிறது. துணைச் சபாநாயகர் அல்லது 'பானல் ஆஃப் சேர்மன்" இருக்கிறார்கள். அவர்கள் சபை நடவடிக்கைகளுக்குத் தலைமை தாங்கி நடத்தும்போது ஏதாவது தீர்ப்புகள் தெரிந்தோ, தெரியாமலோ, வேண்டுமென்றோ, கொடுத்துவிட்டால் கூட, பேரவைத் தலைவருக்கு அந்தத் தீர்ப்பை மாற்றி அமைப்பதற்கு அதிகாரம் இருக்கிறது.

நான் இரண்டாண்டு காலம் இந்த மன்றத்திலே துணைச் சபாநாயகராக இருந்தபோதுகூட ஒரு நிகழ்ச்சி நடைபெற்றது. நான் காலையிலே ஒரு தீர்ப்பைக் கொடுத்தேன். அப்போதும் நீங்கள் தான் சபாநாயகராக இருந்தீர்கள். உங்களுக்குக் கீழே நான் துணைச் சபாநாயகராக இருந்தேன். நான் காலையில் கொடுத்த தீர்ப்பை தவறு என்று கருதி, அன்று மாலையிலே நீங்கள் அந்தத் தீர்ப்பை மாற்றி அமைத்திருக்கிறீர்கள். ஆகவே, துணைத் தலைவர் கட்சியை விட்டு மாறிவிட்டார் என்பதற்காக நீங்கள் அவர்மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தைக் கொண்டு வருகிறீர்கள் என்றால். நாங்கள் அதை ஏற்றுக் கொள்ள முடியாது. அவர் செய்த தவறு என்ன என்று யாரும் சொல்லவில்லை.

எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் பொன்னப்ப நாடார் அவர்கள் சொன்னதுபோல, இந்திய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் சொன்னதுபோல, இந்தத் தீர்மானத்தை டிசம்பர் மாதம் 3-ம் தேதியே கொண்டு வந்திருக்க வேண்டும். அந்த 2-ந் தேதியன்று என்ன நடந்தது என்று எல்லோருக்கும் தெரியும். சபை நடவடிக்கைக் குறிப்பில்தான் வரவில்லையே தவிர, இந்தச் சபையிலே இருக்கின்ற 234, 235 உறுப்பினர்களுக்கும் என்ன நடந்தது என்று தெரியும்.

சபாநாயகரைப் பற்றி இந்திய அரசியல் சட்டத்திலும் சொல்லியிருக்கிறார்கள்; தமிழ்நாடு சட்டமன்ற விதிகளிலும் சொல்லியிருக்கிறார்கள். இந்திய அரசியல் சட்டம் ஆர்ட்டிக்கிள் 181-ல் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். சபாநாயகர் மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வரும்போது அந்தத் தீர்மானத்தை

1974 மார்ச் 9] [திரு. க. உரொ. எட்மண்ட்]

விவாதத்திற்கு விடவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். யார் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்படுகிறதோ அவருக்கு விவாதத்தில் கலந்துகொண்டு பதில் சொல்ல உரிமை இருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. வாக்கெடுப்பு நடத்த வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் அன்றைக்கு என்ன நடந்தது? சபாநாயகர் மதியழகன் மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வரப்பட்டது. ஆனால் விவாதம் நடைபெறவில்லை. இன்றைக்கு துணை சபாநாயகர் மீது கொண்டு வந்திருக்கிற நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தைப் பற்றி விவாதிப்பதற்கு இரண்டு மணி நேரம் ஒதுக்கியிருக்கிறீர்கள். ஆர்ட்டிக்கிள் 181-லே துணைத் தலைவரை அப்புறப்படுத்துவதற்குத் தீர்மானம் கொண்டு வருகிறபோது, அதை விவாதத்திற்கு விடவேண்டுமென்று சொல்லப்படவில்லை. துணைத் தலைவர் விவாதத்திலே கலந்துகொள்ளலாம் என்று சொல்லப்படவில்லை. வாக்கெடுப்பு நடத்தவேண்டுமென்று சொல்லப்படவில்லை. ஆர்ட்டிக்கிள் 181-பி யில் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

திரு. பெ. சீனிவாசன்: அப்படி இல்லை. சபாநாயகருக்கு உள்ள விதி டிபுடி ஸ்பீக்கருக்கும் உண்டு.

THIRU G. R. EDMUND : No. No. Very carefully I have read it. At any sitting of the Legislative Assembly while any resolution for the removal of the Speaker from his office is under consideration, or while any resolution for the removal of the Deputy Speaker from his office is under consideration, the Deputy Speaker, shall not, though he is present, preside

என்றுதான் போடப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இரண்டும் ஒன்றுதான். அதை விட்டுவிட்டு வேறு விவாதத்திற்கு வாருங்கள்.

(திரு. என். கணபதி எழுந்தார்.)

திரு. க. உரொ. எட்மண்ட்: நான் குறிப்பிடுவது, சபாநாயகர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் வந்தபோது விதிப்படி விவாதத்திற்கு இடம் கொடுக்கவில்லை; ஆனால் இன்றைக்கு தாராளமாகக் கொடுத்திருக்கிறார்கள் என்பதுதான்.

[1974 மார்ச் 9

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஆர்ட்டிக்கிள் 179-ஐப் படித்து விட்டு 181-ஐப் படியுங்கள், சரியாகத் தெரியும்.

(திரு. என். கணபதி எழுந்தார்.)

திரு. க. உரொ. எட்மண்ட்: 179-க்கு கீழேதான் 181 வருகிறது, ஸ்பீக்கர், டிபுடி ஸ்பீக்கர் என்று தனித்தனியாகப் போட்டிருக்கிறார்கள்.

At any sitting of the Legislative Assembly, while any resolution for the removal of the Speaker from his office is under consideration, the Speaker, or while any resolution for the removal of the Deputy Speaker from his office is under consideration, the Deputy Speaker, shall not, though he is present, preside, and the provisions of clause (2) of Article 182 shall apply in relation to every such sitting as they apply in relation to a sitting from which the Speaker or, as the case may be, the Deputy Speaker, is absent.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: துணைத் தலைவர் பேசுவதற்கு உரிமை இருக்கிறது. தலைவருக்கு அந்த உரிமை இல்லை. ஆகையால் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள்.

திரு. க. உரொ. எட்மண்ட்: மேற்கொண்டு விவாதிக்க நான் தயாராக இல்லை. 1972 டிசம்பர் 2-ந் தேதி இருந்த ஸ்பீக்கர் மதியழகனை நீக்கத் தீர்மானம் கொண்டுவந்தபோது இந்த மன்றத்திலே விவாதம் நடக்கவில்லை. அவர் ஆசனத்தை விட்டு கீழே இறங்கி உட்காரவில்லை. அவரைப் பேச அனுமதிக்கவில்லை. வாக்கெடுப்பு நடத்தவில்லை. சம்பிரதாயப்படி எதுவும் இல்லாமல் தூக்கி எறிந்துவிட்டார்கள். ஆனால் இன்றைக்குத் துணைச் சபாநாயகர் மீது கொண்டு வந்திருக்கும் தீர்மானத்தின் மீது விவாதம் நடத்துவதற்கு அனுமதித்திருக்கிறது. அது குறித்து மகிழ்ச்சியடைகிறேன்.

சுதந்திராக் கட்சித் தலைவரவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். விவாதம் தேவைதானா? நேரத்தை வீணாக்க வேண்டுமா? சீனிவாசனே ராஜினாமா செய்துவிடலாமே என்று சொன்னார்கள். ராஜினாமா செய்யக்கூடிய அளவுக்கு நீங்கள் சூழ்நிலையை உருவாக்கித் தரவில்லையே! அவர் ராஜினாமா செய்ய வேண்டு

1974 மார்ச் 9] [திரு. க. உரொ. எட்மண்ட்]

மென்று சென்னையிலே சொல்லப்பட்டபோது சீனிவாசன் அவர்கள் கோவையிலே பிரச்சாரம் செய்துகொண்டிருந்தார்கள். அன்றைக்கு மாணவர்கள் என்ற பெயரிலே சில ரௌடிகள், காவல் துறையினர், அரசாங்க அதிகாரிகள் சீனிவாசன் வீட்டு முன்னால் போய் ஆர்ப்பாட்டம் செய்தார்கள். காவல்துறை அதற்கு உடந்தையாக இருந்தது. சீனிவாசன் வீட்டு முன்னால் நடந்திய ஆர்ப்பாட்டத்தைப்பற்றி 24—2—1974 ஞாயிற்றுக்கிழமை அலை ஓசை பத்திரிகையில் புகைப்படம் வந்திருக்கிறது. அந்த புகைப் படத்திலே ஒருவர் இருக்கிறார். அவர் பெயர் சண்முகநாதன். பப்ளிசிட்டி டிப்பார்ட்மென்டில் அசிஸ்டென்ட்டாக இருப்பவர் அவர். ஒரு அரசாங்க அலுவலர். அவர் எதற்காக அங்கே போக வேண்டும்? இதெல்லாம் எதைக் காட்டுகிறது என்றால், சீனிவாசன் கட்சி மாறியவுடனே, இப்படிப்பட்ட ஆர்ப்பாட்டங்கள் நடத்தி, அவரைப் பயமுறுத்தி, மீண்டும் திராவிட முன்னேற்றக் கழகத் திற்குக் கொண்டு வந்து விடவேண்டும் என்று திட்டமிட்டு செய்யப் பட்டதுதான் என்பதைக் காட்டுகிறது. ஆகவேதான் சொல் கிறேன், அவர் பதவியை ராஜிநாமா செய்யவேண்டுமென்று சொல் வதை நாங்கள் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை என்று. அவருக்குப் பேச உரிமை இருக்கிறது. எங்களுக்குக் கருத்துக் களைச் சொல்ல வாய்ப்பிருக்கிறது. அவர் எதைப்பற்றிப் பேசுவார், என்ன பேசப் போகிறார் என்பதைப்பற்றி எங்களுக்கு ஒன்றும் தெரியாது.

இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருப்பதன் நோக்கம் என்ன என்பதைப் பற்றி ஒன்றை மட்டும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். துணைத் தலைவராக இருக்கிற சீனிவாசன், ஒரு கட்சியிலே இருந்து இன்னொரு கட்சிக்கு மாறிவிட்ட ஒரே காரணத்திற்காக இந்தத் தீர்மானம் கொண்டுவரப்பட்டிருக் கிறது. அவர் இந்தப் பொறுப்பை வகித்த 3 ஆண்டுக் காலத்திலே பண்போடும் பொறுப்போடும், நீதியோடும் நேர்மையோடும் நடந்திருக்கிறார். அப்படிப்பட்டவர்மீது இப்படிப்பட்ட ஒரு தீர்மானத்தைக் கொண்டுவந்திருப்பதை அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் வன்மையாகக் கண்டிக்கிறேன். கண்டிக்கிறேன் என்று கூறி விடைபெறுகிறேன்.

[1974 மார்ச் 9

திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி: தலைவரவர்களே, அவை முன்னால் கொண்டு வந்திருக்கிற இந்தத் தீர்மானத்தை ஒரே ஒரு காரணத்திற்காக ஆதரிக்கிறேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நேரத்தில் என்னுடைய நண்பர் சீனிவாசன் அவர்களுக்குச் சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

நம்முடைய அவையிலே நண்பர் சீனிவாசன் அவர்கள், தான் ஏற்றுக் கொண்டிருந்த துணைச் சபாநாயகர் பொறுப்பை நீதியோடு, நேர்மையோடு நிர்வகித்தார் என்பதிலே அவருடைய உற்ற நண்பர் என்ற முறையிலே நான் பெருமைப்படுகிறேன். இந்த அவையிலே நீங்கள் எப்படி நடந்துகொண்டிருக்கிறீர்கள் என்பதைப்பற்றி இந்த அவையில் இருக்கும் எல்லோரும் நன்றாக அறிவார்கள். நீங்கள் எவ்வளவு பெருமையோடு நடத்தி வந்தீர்கள் என்பதிலே எல்லோரும் ஒரே கருத்து கொண்டிருக்கிறார்கள், இரண்டுவித கருத்திற்கு இடமில்லை என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

எனக்கு முன்பு பேசியவர்கள் எல்லாம் 1972 டிசம்பர் 2-ந் தேதி சம்பவத்தைக் குறிப்பிட்டார்கள். இதிலே எந்தக் கருத்து வேறுபாடு இருந்தாலும் நீங்கள் உங்கள்மீது கட்சி கொண்டிருந்த நம்பிக்கையை எந்த அளவுக்குப் பாதுகாத்து வந்தீர்கள் என்பதை நினைக்கும்போது நான் பெருமைப்படுகிறேன். ஒரு பெரிய கட்சி அந்த அளவுக்கு உங்கள்மீது நம்பிக்கை வைத்திருக்கிறது. அதைப்போலவே எங்கள் கட்சிமீது ஆளும் கட்சி வைத்திருக்கிற நம்பிக்கையைக் காப்பாற்றுவதற்காக--நீங்கள் எப்படி நடந்து கொண்டீர்களோ அதைப்போலவே--நாங்களும் நடந்துகொள்ள வேண்டியிருக்கிறது. ஆகவே, இந்த அவை முன்னால் வந்திருக்கிற இந்தத் தீர்மானத்தை ஆதரித்துப் பேசுகிறேன். 'நான் இந்த அவையிலே 4 ஆம் தேதியே என்னுடைய ராஜிநாமாவைக் கொடுத்திருப்பேன்' என்று சொன்னீர்கள். நீங்கள் நிச்சயமாக அப்படிச் செய்திருப்பீர்கள். உங்களுடைய உணர்ச்சி, வேகம் எல்லாம் எனக்கு நன்றாகத் தெரியும். என்ன இருந்தாலும், நீங்கள் உங்கள் தனிப்பட்ட உணர்ச்சிக்கு ஆளாகாமல் இந்தக் காரியத்தைச் செய்திருக்க வேண்டும். நான் உங்களது உண்மை நண்பன் என்ற முறையில் உங்களோடு பேசுவதற்குச் சந்தர்ப்பம் கிடைத்திருந்தால் அதைத்தான் நான் உங்களிடம் சொல்லியிருப்பேன்.

1974 மார்ச் 9] [திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி]

இப்போது இந்தத் தீர்மானம் இங்கே வந்திருக்கிற நேரத்தில் நாங்கள் நிச்சயமாக அதை ஆதரிக்கத்தான் கடமைப்பட்டிருக்கின்றோம். நீங்கள் எப்படி அந்தக் கட்சியில் இருந்தபோது, அந்தக் கட்சி உங்கள் மீது வைத்த நம்பிக்கையைக் காப்பதற்காக நடந்து கொண்டீர்களோ அதைப்போலத்தான் இதுவும்.

குறிப்பாக நீங்கள் உதவி சபாநாயகராக பொறுப்பில் இருந்த காலத்தில் நடந்து கொண்ட முறைகளுக்கு நான் பாராட்டுகிறேன். நீங்கள் திறமையாக, நடுநிலைமையோடு, கட்சி உங்களிடம் வைத்த நம்பிக்கைக்குப் புறம்பே போகாமல் நடந்துகொண்ட முறை பாராட்டத்தக்கதாகும். அதுவும் கடந்த தேர்தல் நேரத்தில் நடந்த ஒரு சம்பவத்தைப்பற்றிச் சொல்ல ஆசைப்படுகிறேன். 'எங்கள் தொகுதியில் நீங்கள் பேச வரவேண்டாம் என்பதற்காக, என் தொகுதியைச் சேர்ந்த ஒரு பல் அதிபர் உங்களுக்கு 25 ஆயிரம் ரூபாய் கொடுக்க முன்வந்தும் கூட, நீங்கள் அதனை ஏற்காமல் கட்சியின் மீது பற்றுக் கொண்டு, எவ்வளவு உண்மை ஊழியராக, அந்தத் தொகுதியில் வந்து பிரச்சாரம் செய்தீர்கள் என்பதை யாரும் மறந்துவிட முடியாது. ஆரம்பத்தில் பேசியவர் சொன்னதுபோல நீங்கள் ஒரு மாடல் ஸ்பீக்கராகவே இருந்திருக்கிறீர்கள்.

டிசம்பர் 2 ஆம் தேதி சம்பவத்தைப் பற்றிச் சொன்னார்கள். டிசம்பர் 2 ஆம் தேதி நீங்கள் எத்தனைத் திறமையாக கட்சி உங்களிடம் வைத்த பெரும் நம்பிக்கைக்கேற்ப நடந்து கொண்டீர்கள் என்பது எல்லோருக்கும் தெரியும். உங்கள்மீது எவ்விதத் தவறும் சொல்ல முடியாது என்பதை அறிவோம். பிறகு உதவி சபாநாயகராக இந்த அவையில் நீங்கள் பணியாற்றிய காலத்திலும் மிக அருமையான ஸ்பீக்கராக, மாடல் ஸ்பீக்கராக நடந்து வந்திருக்கிறீர்கள் என்பதற்கு என்னுடைய பாராட்டுதல்களைச் சொல்லிக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி: பேரவைத் தலைவர் அவர்களே, இன்று துணைச் சபாநாயகராக இருக்கும் திரு. சீனிவாசன் அவர்கள் மீது கொண்டுவரப்பட்டுள்ள பதவி நீக்கத் தீர்மானத்தின் பேரில் என் கட்சியின் சார்பில் சில கருத்துக்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திருமதி த. ந. அனந்தநாயகி] [1974 மார்ச் 9

இதுவரை அகில இந்தியாவிலும் தமிழக சட்டசபை சபாநாயகர் ஒரு தீர்ப்புக் கொடுத்தார் என்றால் அதற்கு ஒரு மதிப்பு இருந்தது. அப்பேர்ப்பட்ட ஒரு நிலைமை 1967 இல் இருந்து மாறுபட்டுவிட்டது. 1967 இல் இருந்து அந்தப் பதவிக்கு எத்தனை ஆபத்துக்கள் வரமுடியுமோ அவ்வளவு ஆபத்துகள்— அவரது ஆயுள் எப்போது முடியுமோ என்கிற அவல நிலை ஏற்பட்டுவிட்டது. (குறுக்கீடு) நான் அவரது பதவியைத்தான் சொல்கிறேன். நானும், நீங்களும் அவர்களைக் க்ளோஸ் பண்ண முடியுமா? 1967-ல் இருந்து இன்றுவரை சபாநாயகர், துணைச் சபாநாயகர் என்பவர்கள் கட்சிக் கண்ணோட்டத்தோடு, கட்சி மாச்சரியங்களுக்கு இழுத்து வரப்படுவதும், வெளியேற்றப் படுவதுமாகத்தான் இருக்கிறது.

சபாநாயகர் என்பவர் ஒரு கட்சியில் இருந்துதான் தேர்ந்தெடுக்கப்படுகிறார் என்றாலும், தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு நீதிபதியைப் போன்று ஒரு நடுநிலை ஸ்தானத்தை வகித்து வருபவர். அவரைக் கட்சி மாச்சரியங்களுக்கு இழுக்கக்கூடாது என்கிற மாபு இங்கே உடைக்கப்பட்டுவிட்டது. 1967-க்குப் பிறகு எந்த ஒரு சபாநாயகராவது ஐந்து வருடம் ஆசனத்தில் அமர்ந்திருந்தார் என்று உண்டா? கிடையாது. அந்த அளவுக்கு ஜனநாயகம் படுகொலை செய்யப்பட்டிருக்கிறது என்பதற்கு இதைவிட எடுத்துக்காட்டு வேறு வேண்டாம்.

திரு. இராம அரங்கண்ணல்: பாயின்ட் ஆப் ஆர்டர் சார். நான் இந்தத் தீர்மானத்தின் மீது அவர்கள் பேசுவதற்கு பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்பவில்லை. ஆனால் விவாதத்தில் பேரவைத் தலைவர்களை இழுக்கக்கூடாது என்பது சபையின் ஒழுங்கு விதியாகும்.

திருமதி த. ந. அனந்தநாயகி: நான் மரபுகளைச் சொல்கிறேன். இங்கிலாந்தில் சபாநாயகருக்கு எதிர்ப்பே கிடையாது. ஒரு முறை சபாநாயகராக இருந்து, அவர் தேர்தலுக்கு நின்றால் அவருக்கு எதிராக எந்தக் கட்சியும் வேட்பாளரை நியமிப்பது இல்லை. அந்த நிலை இங்கே இல்லையென்றாலும் தேர்தலுக்கு நின்று மீண்டும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்த பிறகு, அவரையே சபாநாயகராகத் தேர்ந்தெடுத்துக் கொள்வது என்கிற அந்த

1974 மார்ச் 9] [திருமதி த. ந. அனந்தநாயகி]

மரபைக் கூடப் பின்பற்றவில்லை. பேரவைத் தலைவர் அவர்களே, உங்களையே வெளியில் வைத்து இருந்தார்கள். மரபுகளுக்கு மதிப்புக் கொடுப்பதில்லை, இந்தக் கட்சி என்பதைத்தான் எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

திரு. என். கணபதி: இங்கிலாந்து நாட்டு மரபுகளைச் சொல்கிறார்கள். ஒரு கட்சியில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட சட்ட மன்ற உறுப்பினர் இன்னொரு கட்சிக்கு மாறிவிடுகிறபோது, அவர் தமது பதவியை ராஜிநாமாச் செய்துவிடுவார்களே, அந்த மரபுகள் இங்கே பின்பற்றப்படுகின்றதா என்று சொல்வார்களா?

திருமதி த. ந. அனந்தநாயகி: எல்லாக் கட்சிகளும் செய்தால் செய்யத்தான் வேண்டும். நான் மாறினாலும் இந்தக் கட்சியிலேயே தான் இருக்கிறேன். ஒன்றும் வித்தியாசம் கிடையாது. உங்களுக்குப் புரிந்துகொள்ளத் தெரியவில்லை என்றால் வருத்தப் படுகிறேன்.

இந்த அவையில் சபாநாயகர் பதவி நீக்கம் என்ற பெயரால் டிசம்பர் 2 ஆம் தேதி நடந்த நிகழ்ச்சிகள் ஜனநாயகத்திற்குப் புறம்பானவை என்பதை மறந்துவிடக்கூடாது. அப்போது சபாநாயகருக்குப் பேச வாய்ப்புக் கொடுக்கப்படவில்லை. 184 பேர்கள் இருக்கிறோம் என்கிற நினைப்பில் சபாநாயகர் தூக்கி எறியப்பட்டார். அவரது கண்ணடி எடுத்து விசிறப்பட்டது. எல்லாம் அன்செரிமோனியல். அவருக்குப் பெரிய மனது—மறந்து விட்டார். மன்னித்து விட்டார்கள். உங்கள் பக்கமே வந்து அமர்ந்தும் விட்டார். அவ்வளவு பெரிய மனிதரைப் பார்ப்பது கஷ்டம். வழக்கு நீதிமன்றம் வரை சென்றது. சுப்ரீம் கோர்ட்டில் கேசை எடுத்துக்கொள்வதற்குள் கட்சி மாறிவிட்டார். அங்கே ஒரு நியாயம் கிடைக்கும் என்று நினைத்தோம். அதுவும் இல்லாது போய்விட்டது. கட்சிக்கு உட்பட்டவர்கள் தான், கட்சிக் கண்ணோட்டத்தோடு நடந்து கொள்பவர்கள்தான் இன்றைக்கு அந்தப் பதவியில் உட்கார முடியும் என்கிற நிலையை உண்டாக்கிக்கொண்டு வருவது நல்லதல்ல. இந்தப் பதவிக்கு சரியான மரியாதை தருகிறார்களா என்பது சந்தேகத்திற் குரியதாகிவிட்டது.

[திருமதி த. ந. அனந்தநாயகி] [1974 மார்ச் 9

(நண்பகல் 12-00)

இன்றைக்குத் துணைச் சபாநாயகர் மீது பதவி நீக்கத் தீர்மானம் கொண்டு வந்திருக்கிறார்களே, அதிலே ஏதாவது காரணம் காட்டியிருக்கிறார்களா என்றால் இல்லை. அரசாங்கத்தின் மீது எவ்விதக் காரணமும் சொல்லாது ஒரு வரியில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரலாம். ஜாயின்ட் செஸ்பான்சிபிலிடி என்கிற முறையில் காரணம் சொல்வது—அங்கே சிறு கதையைப் போல, தொடர் கதையைப்போல ஆகிவிடும். ஆனால் உதவி சபாநாயகர் மீது கொண்டுவரும்போது, அவர் இன்ன குற்றத்தைச் செய்தார், இதற்காகக் கொண்டுவரப்பட்டிருக்கிறது என்று தெளிவாகச் சொன்னால்தான் அவர் அதற்குப் பதில் சொல்ல வாய்ப்பு ஏற்படும். அப்படி தீர்மானத்திலேதான் எழுதத் தெரியவில்லை. இங்கேயாவது நீங்கள் பேசக் கூடாதா? இங்கே வந்து பேசினார்களா? சொம்பப் பரந்த மனப்பான்மையோடு நம்பிக்கை இழந்து விட்டார்கள், நம்பிக்கை இழந்து விட்டார்கள் என்று சொல்கிறார்கள். எதற்காக நம்பிக்கை இழந்து விட்டார்கள். நீ நெட்டையாக இருந்தாய், குட்டையாகி விட்டாய், நம்பிக்கை இழந்து விட்டாய்; நீ குட்டையாக இருந்தாய், நெட்டையாகி விட்டாய், நம்பிக்கை இழந்து விட்டாய் என்று சொல்வது மாதிரி, அவர்மேல் நம்பிக்கை இழப்பதற்கான காரணத்தை தீர்மானத்தில்தான் போடவில்லை, இங்கேயாவது சொன்னீர்களா? இப்படி இப்படி நம்பிக்கை இழந்து விட்டார்கள், இந்த ஒத்திவைப்பு தீர்மானத்திலே இப்படி நடந்து கொண்டார்கள், இந்த கால் அட்டென்ஷன் மோஷனிலே இப்படி நடந்து கொண்டார்கள், சட்டசபை வேலைகளை எல்லாம் தூக்கி எறிந்து விட்டு வேறு வேலை பார்த்து வந்தீர்கள் என்று இப்படி காரணங்கள் கொடுத்திருந்தால், எங்களுக்கும் நிலைமை புரியும், அவரும் பதில் சொல்வதற்கு நிலைமை புரியும், மற்றவர்களுக்கும் நிலைமை புரியும்.

மௌலாங்கரை நீக்க முற்பட்டபொழுது லோக் சபாவிலே என்ன சொன்னார்கள்?

Unless the charges are specific and of which due notice has been given, the resolution is clearly out of order' என்று சொன்னார்கள்.

1974 மார்ச் 9] [திருமதி த. ந. அனந்தநாயகி]

திட்டவட்டமாக, இந்த இந்தக் குற்றங்களுக்காக நீக்க வேண்டுமென்று நாங்கள் வற்புறுத்துகிறோம் என்று தீர்மானத்திலே சொல்லவில்லை என்றால், இந்தத் தீர்மானத்திலே சொல்வது மாத்திரமல்ல, அதைச் சொல்வதற்கு நோட்டீசும் கொடுக்க வேண்டும்—அதற்காக இத்தனை நாட்கள் கொடுக்கிறோம், பதிலைத் தயாரித்துக் கொள்ளுங்கள் என்ற முறையில் காரணங்களைக் கொடுத்தால்தான் தீர்மானமாக இருக்கும் என்று திட்ட வட்டமாகச் சொல்லியிருக்கிறார்கள்.

அது மாத்திரமல்ல, அன்றைக்கிருந்த டெபுட்டி ஸ்பீக்கர் என்ன சொல்லியிருக்கிறார்? அந்தக் குற்றச்சாட்டுகள் எப்படி இருக்க வேண்டுமென்றால், இங்கே சட்டசபையிலே துணைச் சபாநாயகராகப் பதவி வகிக்கும்போது இந்த இந்த முறையிலே, கட்சிப் பாகுபாடோடு நடந்து கொண்டார், இந்த இந்தக் கேள்விகள் கேட்க அனுமதி அளிக்கவில்லை, இந்த இந்தக் காரியங்களில் மக்களுக்குப் புறம்பாக தூக்கி எறிந்துவிட்டார் என்று லோக் சபா அங்கத்தினர்களுக்கு வரையறுத்தும் வைத்திருக்கிறார்கள். அதன் பேரிலேதான் நீங்கள் பேசலாமே தவிர, இதுமாதிரி நீங்கள் பேசுவது முறையல்ல.

துணைச் சபாநாயகரைப் பதவியிலிருந்து நீக்க வேண்டுமென்று சொல்லியிருந்தும் கூட, இங்கே பேசப்பட்ட தீர்மானத்திலே ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள்—இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்தவர்கள் என்ன காரணங்கள் என்பதைச் சொல்லவே இல்லை. இதுவரையிலும் சொல்லவே இல்லை. எப்படிச் சொல்வார்கள்? இது ஒரு எக்ஸ்டிராரினரி சிட்யூவேஷன். நடக்கக் கூடாதவை எல்லாம் நடக்கின்றன என்று சொல்வதற்கு இது ஒரு உதாரணம். இந்த மாதிரித் தீர்மானங்களை எதிர்க் கட்சிகள்தான் கொண்டு வரும். இங்கு ஆளும் கட்சியே இருமுறை கொண்டு வந்திருக்கிறது. முன்பு சபாநாயகரை நீக்க வேண்டுமென்று கொண்டு வந்தது, இப்பொழுது துணைச் சபாநாயகரைப் பதவி நீக்கம் செய்ய வேண்டுமென்று தீர்மானம் கொண்டு வந்திருக்கிறது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, சபாநாயகர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரும்போது, ஏதாவது ஒரு காரணம் சொல்ல வேண்டுமென்று

[டாக்டர் மு. கருணாநிதி] [1974 மார்ச் 9

திரு. தங்கமணி அவர்களும் வாதிட்டார்கள், அம்மையார் அவர்களும் வாதிடுகிறார்கள். தங்கமணி அவர்கள் குறிப்பிட்டார்களே, தங்கள் மீது இப்பொழுது சபாநாயகராக இருக்கிற புலவர் கோவிந்தன் அவர்கள் மீது, நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப்பட்டபோது, அப்பொழுது ஏதாவது காரணம் சொல்லப்பட்டதா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி: அந்தக் காரணத்தை விவாதத்திலே சொல்லியிருப்போம். நீங்கள் அதைக் கூடச் சொல்லவில்லை.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நீங்கள் கொடுத்த தீர்மானத்தில்

'This House expresses want of confidence in Hon. Pulavar K. Govindan and resolves to remove him from the Office of Sppeakership of the Tamil Nadu Legislative Assembly'

என்றுதான் நீங்களும் கொடுத்திருக்கிறீர்கள். அதைக் குறிப்பிட்டேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி: அந்தத் தீர்மானத்தில் பேசும் போது அந்தக் காரணத்தைச் சொல்லியிருப்போம். (ஒரு குரல்: பேசுவதற்குத் தைரியம் இல்லாமல் வாபஸ் வாங்கிவிட்டீர்கள்). தைரியமா, பம்பா என்று உங்களுக்குத் தெரியுமே.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இந்தத் தீர்மானத்திலேயே காரணம் குறிப்பிடப்பட வேண்டுமென்பதற்காக நீண்ட விளக்கங்களை திரு. தங்கமணி அவர்கள் அளித்தார்கள். தாங்கள் இதுவரையில் அளித்தீர்கள். ஆகவே, முன்னால் கொடுக்கப்பட்ட தீர்மானத்திலே எந்தக் காரணமும் அளிக்கப்படவில்லையென்று சொன்னேன். அவ்வளவுதான்.

திருமதி த. ந. அனந்தநாயகி: அந்தத் தவறைக்கூட இனிமேல் செய்யமாட்டோம். ஆனால், ஒரு முறைக்கு இரு முறை தீர்மானம் கொண்டு வந்தவர்கள் காரணம் சொல்லியிருக்கிறார்களா என்றால் இல்லை. இப்படிக் காரணம் கொடுக்காததற்காக நான் மிக மிக வருந்துகிறேன் என்றுதான் நான் சொல்ல ஆசைப் படுகிறேன்.

1974 மார்ச் 9] [திருமதி த. ந. அனந்தநாயகி]

அன்றைக்கு சட்டசபையிலே, 2 ஆம் தேதி, சபாநாயகரை நீக்கியது நீங்கள். இப்பொழுது அவர் உங்கள் பக்கம் வந்துவிட்டார். இப்பொழுது அவசரத்தோடு துணைச் சபாநாயகரை நீக்குகிறீர்கள். நாளை என்ன நடக்குமோ, எங்களுக்குத் தெரியவில்லை. ஏன் இவ்வளவு அவசரமாகச் செய்ய வேண்டும்? உங்கள் சபாநாயகர் உங்கள் பக்கம் இருக்கும்போது, கட்சி மாறிவிட்டார் என்ற ஒரே காரணத்திற்காக, 174 பேர் நம்பிக்கை இழந்துவிட்டார்கள் என்ற ஒரே காரணத்திற்காக மீண்டும் அவசரத்திலே செய்கின்ற வேலையாகத்தான் இது இருக்கப் போகிறது என்பதையும் இந்த அமைச்சரவைக்கு, இந்த கட்சிக்குச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

சபாநாயகர், துணைச் சபாநாயகர் பதவியில் இருப்பவர்கள் கட்சிகளுக்கு அப்பாற்பட்டவர்களாக இருக்க வேண்டும், நேர்மையானவர்களாக இருக்க வேண்டும். அனைத்தினர்களுடைய நம்பிக்கையைப் பெற்றவர்களாக இருக்க வேண்டும். அப்படிப் பார்க்கும்போது, 1971-ஆம் ஆண்டிலிருந்து பார்க்கும்போது, திருவாளர் சிவிவாசன் அவர்கள்தான், எல்லா குணங்களும் பெற்ற, எல்லா கட்சிகளின் நம்பிக்கைக்கும் பாத்திரமான வராக இருந்தார், டிசம்பர் 2 ஆம் தேதி தவிர. ஏனென்றால், 2 ஆம் தேதி உங்கள் கட்சியின் கருவியாக மாறினார், ஜனநாயகத்துக்குப் புறம்பாக என்ன என்ன செய்ய வேண்டுமோ அத்தனையையும் செய்தார். அன்றையதினம் செய்த ஜனநாயகப் படுகொலையிலே அவருக்கும் பங்கு இருந்தது.

ஆனால், அன்றைய தினம் தவிர, அவர் இங்கே சபாநாயகராக அமர்ந்திருந்தபொழுது, சட்ட அறிவின் உதவியினாலே, பாரபட்சமில்லாமல், தகுந்த முறையிலே, நல்ல முறையிலே, நேர்மையான முறையிலே, அவையை நடத்தி வந்தார் என்பதை யாரும் மறுக்க முடியாது. நல்ல முறையிலே சபையை நடத்தி வந்த துணைச் சபாநாயகர் கட்சி மாறிவிட்டார் என்பதற்காக, என் நீங்கள் பயப்பட வேண்டும்? லோக் சபாவிலே அடுத்த கட்சிக்காரர்கள் டெப்புட்டி ஸ்பீக்கராகவும், ராஜ்ய சபாவிலே டெப்புட்டி சேர்மனாகவும் இருந்து நடத்திக் கொண்டு வருகிறார்கள். ஆனால், இங்கு உங்கள் கட்சிக்கு அப்படி

[திருமதி த. ந. அனந்தநாயகி] [1974 மார்ச் 9

என்ன பயம்? அவர் அ.தி.மு.க.வில் இருந்தால், இருந்து விட்டுப் போகட்டுமே. அவர் வேலையை ஒழுங்காகச் செய்கிறாரா என்று தான் பார்க்க வேண்டும். அதையும் பார்த்துவிட்டோமே.

உதாரணமாக, 6-ம் தேதி கூட இங்கே சபாநாயகர் இருக்கையில் அமர்ந்திருந்தார்கள். கட்சி மாறியும் கூட, இங்கே அமருகின்ற ஒரு வாய்ப்பு கிடைத்தபோது, அவ்விருக்கையில் உட்கார்ந்த பொழுது, சட்டசபை அங்கத்தினர்களுக்கு நல்ல முறையிலே தன்னுடைய கடமையை ஆற்றி, அப்பதவிக்கு வகித்தார்கள். இப்படி நல்ல முறையிலே பதவியும் வகித்து, இத்தனை குணங்களையும் பெற்று, இங்கே இருக்கக்கூடிய பணிகளைச் செவ்வனே செய்து, கட்சி மாச்சரியங்களுக்கு அப்பாற்பட்டு, எதிர்க் கட்சிகளுக்கெல்லாம் நம்பிக்கை ஏற்படக்கூடிய அளவிலே, நடந்து கொள்ளக்கூடிய துணைச் சபாநாயகரை, கட்சிக் கண்ணோட்டத்தோடு நீக்குவது என்பது ஜனநாயகத்திற்குப் புறம்பான முறைகளையெல்லாம் நீங்கள் ஏற்படுத்திக் கொண்டிருக் கிறீர்கள் என்று ஆகும்.

The Seakers or the Deputy Speakers should be above active party politics.

ஆளும் கட்சிக்காரர்கள் அந்த முறையிலே இருக்கக் கூடாது. ஆட்சிக்கு வந்ததும் எல்லோருக்காகவும் ஆட்சி நடத்துகிறோம். இன்றைக்கு, சபாநாயகர் பதவியில், கட்சிக்கு அப்பாற் பட்டவர்களை வைத்து நடத்த முடியும் என்ற முறையில் நடத்திக் காட்டினால்தான் ஜனநாயகத்தில் ஆளும் கட்சிக்கு நம்பிக்கை இருக்கிறது என்று காட்ட முடியுமே தவிர, அவர் அ.தி.மு.க.வில் இருக்கிறார், துணைச் சபாநாயகர் பதவியில் இருக்கக் கூடாது என்று மாற்றினால் அது சரியல்ல.

இவ்வளவு மிருக பலம் இருந்தும்கூட, தி.மு.கழகத்தினுடைய ஆலிவிதி, 1967-லிருந்து அடிக்கடி இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நடந்து, ஒழுங்காக யாரும் சபாநாயகர் பதவியை வகிக்க முடியாமல், துணைச் சபாநாயகர் பதவியை வகிக்க முடியாமல், கேள்விக்குரிய மாதிரி, உங்கள் கட்சியினுடைய மிருக பலத்தை வைத்துக் கொண்டு, ஸ்பீக்கர் யாருமே 'வித்தவுட் ஃபியர் ஆர் ஃபேவர்', பயமில்லாமல், நேர்மையான முறையிலே தங்களுடைய கடமையைச் செய்வது முடியாத காரியமாகும் என்பதைத்தான் இது சுட்டிக்காட்டுகிறது.

1974 மார்ச் 9] [திருமதி த. ந. அனந்தநாயகி]

நீங்கள் இப்படி நடந்துகொண்டால், இங்கு அமருபவர்கள் நியாயமற்ற முறையிலே, பாரபட்சத்தோடு நடந்து கொள்ள வழி ஏற்படும். இதில், உங்களுடைய கட்சி பலத்தைக் காட்டக் கூடாது. இங்கு தமிழ் நாடு சட்டசபையிலே, இப்படி நடப்பது சாதாரணமாகிவிட்டது. பாரபட்சமற்ற முறையிலே ஒரு சபாநாயகரோ, துணைச் சபாநாயகரோ இருக்க விரும்பினால், நேர்மையான முறையிலே இருக்க விரும்பினால், ஒழுங்கான முறையிலே வேலை செய்ய விரும்பினால், அது நீங்கள் ஆட்சியிலே இருக்கும்வரை முடியாத காரியம் என்று தமிழக மக்கள் புரிந்து கொண்டார்கள். இந்த அவையில் இத்தீர்மானத்தை நீங்கள் கொண்டு வந்ததற்கு எங்கள் கட்சியின் சார்பாக வன்மையாகக் கண்டித்து, எங்களுடைய ஆதரவற்ற நிலையைத் தெரிவித்து. அவசரப்பட்டு, ஆத்திரப்பட்டு, ஆதாரமில்லாமல் கொண்டு வருவது ஜனநாயகத்தை நீங்கள் படுகொலை செய்துவிட்டீர்கள் என்பதைத்தான் காட்டுகிறது என்று கூறி அமர்கிறேன்.

*** திரு. எம். ஏ. லத்தீப்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கந்தப்பன் அவர்களால், துணைத் தலைவரவர்களை நீக்கக் கோரி, கொண்டு வரப்பட்டிருக்கிற இந்தத் தீர்மானத்திலே கலந்துகொண்டு பேசுவதிலே நான் தனிப்பட்ட முறையிலே மெத்த துக்கமும் வருத்தமும் கொள்கின்றேன்.

துணைச் சபாநாயகர் அவர்களைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே பேசியகிலிருந்து, தம்முடைய பதவிக் காலத்தில், டிசம்பர் 2 ஆம் தேதி தவிர, வேறு எல்லா நாட்களிலும் மிகவும் ஜனநாயக முறையிலே, ஜனநாயக மரபுகளைக் காக்கின்ற வகையிலே, அவர்கள் நடந்து கொண்டார்கள் என்பது தெரிய வரும். அவர்கள் சபாநாயகராக, துணைச் சபாநாயகராகப் பணியாற்றிய காலத்தில், நம்முடைய உறுப்பினர்கள் எல்லாம் டிசம்பர் 2 ஆம் தேதி என்று குறிப்பிட்டார்கள், நான் ஏற்றுக் கொள்கிறேன். அவர்கள் அண்மைக் காலம் வரையிலே மிகத் தீவிரமாக, சபாநாயகர் ஆசனத்தைப் பற்றி மட்டுமே சிந்தனை செய்துகொண்டு, நம்முடைய பணியை மிகவும் சிறப்பாகவும், பாரபட்சமற்ற முறையிலேயும் நடத்தி வந்தார் என்பதிலே யாருக்கும் கருத்து வேற்றுமை இல்லை. அருணாசலம் இருந்தார், அவர் உலகத்திலே இருந்த எல்லா மக்களையும் விட்டுவிட்டார், ஆனால் சோணாசலத்தை மட்டும்தான் கொலை செய்தார் என்று

[திரு. எம். ஏ. லத்திப்] [1974 மார்ச் 9

சொல்வதைப்போல் அம்மையார் அவர்கள் அவர் காக்க வேண்டிய மரபுகளையெல்லாம் காத்திருக்கிறார், டிசம்பர் இரண்டாம் தேதியைத் தவிர, அன்று தான் ஜனநாயகத்தைக் கொலை செய்தார் என்று சொன்னார்கள். அவர்கள் ஒரு வழக்கறிஞர், அந்த அவர்கள்தான் முடிவு செய்ய வேண்டும்.

துணைச் சபாநாயகர் அருமை நண்பர் சினிவாசன் அவர்களை கடந்த பத்துப், பதினேழு ஆண்டுக் காலமாகவே தெரியும். என்னுடைய சகா—கல்லூரி நண்பர், கல்லூரித் தோழர். பல நிகழ்ச்சிகளிலே நாங்கள் இருவரும் பங்கு கொண்டிருக்கிறோம்; மிகச் சிறப்பான குணங்களை உடையவர் அவர்; ஆனால் அரசியலிலே எக்ஸ்ட்ராடினரி சிட்சுவேஷன் பல எதிர்பாராத மாறுதல்கள் ஏற்படும்; அரசியலில் எதிர்பாராத சில எண்ணங்களும், சில மரபுகளும் ஏற்படுகின்றன. எதிர்பாராத எண்ணங்களும் தேவையில்லாத மரபுகளும் வருகின்ற நேரத்தில் அவர்கள் ஏற்றுக்கொள்ளாத சில மாற்றங்களுக்கு உள்ளாகி விட்டார்கள் என்பதை நினைக்கும்பொழுது நான் உள்ளபடியே மெத்த வருத்தப்படுகிறேன்.

நாம் சில உண்மைகளைப் புரிந்து கொள்ள வேண்டும். எதிர்க் கட்சியினருக்குத் துணைச் சபாநாயகர் பதவி கொடுத்தால் என்ன என்று கேட்கிறார்கள். முதலில் தேர்தல் நடக்கும்பொழுதே, தேர்ந்தெடுக்கும்பொழுதே எதிர்க் கட்சியினருக்கு அந்தப் பதவியைக் கொடுக்க வேண்டுமென்று சொல்லி தேர்ந்தெடுக்கப் பட்டு இருந்தால் அப்படிக் கொடுப்பதிலே ஆட்சேபனை இருக்க முடியாது, தவறு என்று அதைச் சொல்ல மாட்டேன். சபாநாயகர் ஆளுங் கட்சியிலிருந்து திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாகத் தொகுதியிலிருந்து போட்டியிட்டுத் தேர்ந்தெடுக்கப்பட்டார் என்பது நாடறிந்த உண்மை. அப்படித் தேர்ந்தெடுக்கப்பட்டு ஆளுங்கட்சி வரிசையிலே அமர்ந்திருந்தார் என்பதும் நாடறிந்த உண்மை. சபாநாயகராக ஆளுந் கட்சியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு இந்த மன்றத்திலும் மக்கள் மன்றத்திலும் பணியாற்றினர் என்பதும் நாடறிந்த உண்மை. அவர்களைத் தேர்ந்தெடுத்த பிறகு, சபாநாயகர் நாற்காலியில் அவர் அமர்த்தப்பட்ட பிறகுதான் அவர் அரசியல் ஆசாபாசங் களுக்கு, காழ்ப்புணர்ச்சிகளுக்கு இடம் கொடுக்காமல் இந்தச் சபையின் நடவடிக்கைகளை உயர்ந்த முறையிலே அரசியல் சட்டத்திற்குட்பட்டு எந்த விதத்திலும் பாரபட்சம் இல்லாமல்

1974 மார்ச் 9] [திரு. எம். ஏ. லத்தீப்]

நடத்துவார் என்ற நம்பிக்கை ஏற்படுகிறது. அவரிடமிருந்து எந்தவிதமான பாரபட்சமும் எதிர்பார்க்க முடியாது. காரணம் அவர் பொதுச் சொத்தாக மாறிவிடுகிறார். துணைச் சபாநாயகர் ஒரு கட்சியில் இருக்கிறார், அந்தக் கட்சியிலிருக்கின்றபொழுது அவர் துணைச் சபாநாயகராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, தேர்ந்தெடுக்கப்பட்டதற்குப் பிறகு அவர் பொதுச் சொத்தாக மாறிவிடுகிறார், ஆனால் சபாநாயகர் அல்லது துணைச் சபாநாயகராக இருந்துகொண்டு, நான் இந்தக் கட்சியிலிருந்து அந்தக் கட்சியில் சேர்ந்துவிட்டேன் என்று அறிக்கை விட்டால் அது எந்த ஜனநாயகத்தைச் சேர்ந்தது?

உத்திரப் பிரதேச மாநிலத்திலே எல்லாம் கூட அங்கே தேர்தல் பிரச்சாரம் நடந்து கொண்டிருந்தது, பத்திரிகைகளிலே மிகப் பெரிய தலைப்பிட்டு "Tamil Nadu Deputy Speaker defects"! என்ற தலைப்பிட்டு அவர்கள் செய்தியை வெளியிட்டார்கள். கடைசியிலே "exclamatory mark" ஒரு பெரிய ஆச்சரியக் குறியைப் போட்டுப் பிரசுரித்திருக்கிறார்கள். நான் கூட அப்பொழுது நைனிடாலிலே அதைப் பார்த்தேன்.

"Tamil Nadu Deputy Speaker defects" என்று போட்டு ஆச்சரியக் குறி போட்டிருக்கிறார்கள். அங்கே நேஷனல் ஹெரால்டு என்ற பத்திரிகையிலே நான் பார்த்தேன்.

துணைச் சபாநாயகர் ஒரு கட்சியிலிருந்து இன்னொரு கட்சிக்கு மாறுகிறார் என்ற பிரச்னை இங்கே வருகிறது என்றால் நான் எதிர்க் கட்சி நண்பர்களைக் கேட்டுக் கொள்கிறேன், பெய்யூலியர் சிட்சுவேஷன் வருகிறபொழுது, அவர்கள் அன்றைக்கு எதிர்க்கலாம், இன்றைக்கு ஆதரிக்கலாம் அல்லது அன்றைக்கு ஆதரிக்கலாம், இன்றைக்கு எதிர்க்கலாம்; இப்படிப்பட்ட விசித்திரமான நிலைமைகள் ஏற்படலாம். இப்படிப்பட்ட விசித்திரத்தை உருவாக்குவதற்குத்தான் நாம் அரசியலை நடத்திக் கொண்டு இருக்கிறோம். இன்றைய அரசியலிலே நாம் விசித்திரத்தை மட்டுந்தான் பார்த்துக் கொண்டிருக்கிறோம். இந்த நிலைமை எவ்வளவு சீக்கிரம் மாறுகிறதோ அவ்வளவு சீக்கிரம் நாட்டுக்கு நல்லது.

[திரு. எம். ஏ. லத்தீப்] [1974 மார்ச் 9

சபாநாயகர் அரசியல் சட்டத்தினுடைய படைப்பு, துணை சபாநாயகர் அரசியல் சட்டத்தினுடைய படைப்பு. அவர்களுக்கு இருக்கிற கேரக்டரிஸ்டிக்ஸ் பற்றிச் சொன்னார்கள். காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த திரு. பொன்னப்ப நாடார் அவர்கள், சபாநாயகர் அல்லது துணைச் சபாநாயகர் அல்லது இந்த மன்றத்திலே தலைமை தாங்கி நடத்துகின்ற உறுப்பினர்கள் எந்த எந்தக் குணங்களோடு இருக்க வேண்டுமென்பதைப் பற்றி எடுத்துக் காட்டினார்கள். மேஸ் பார்லிமெண்டரி நடைமுறையில் அதைப்பற்றித் தெளிவாக எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். இரண்டு குணங்கள் முக்கியமாகத் தேவை என்று சொல்லப் பட்டிருக்கிறது. சபையினுடைய ஒட்டுமொத்தமான ஒபிடியன்ஸ், சபையினுடைய ஒட்டுமொத்தமான மரியாதையைப் பெற்றவராக இருக்கவேண்டும், அது முதல் குணம், கம்ப்ளீட் இம்பார்ஷியாலிடியுடன் உணர்ச்சிகள், காழ்ப்புணர்ச்சிகளுக்கு இடம் கொடுக்காமல், பாரபட்சம் இல்லாமல் சபையின் பொதுச் சொத்தாக இருக்கக் கூடியவர். சபையின் நடவடிக்கைகளை, பேச்சுக்களைப் பாரபட்சமில்லாமல் நடத்துபவராக இருக்க வேண்டும். இந்த இரண்டு குணங்களும் இருக்க வேண்டும் என்று ஜனநாயகத்தை நாட்டிற்கு அறிமுகம் செய்த 'மே'-யின் கருத்துக்கள் இருப்பதைப் பார்க்கிறோம்.

நான் இந்த நேரத்திலே சொந்த ஆசாபாசங்களுக்கு இடம் கொடுக்கவில்லை. திரு. சீனிவாசன் என்னுடைய நண்பர். அவருக்கும் எனக்கும் நல்ல நட்பு உண்டு. நட்புக்கு நட்பைத் தரலாம், ஆனால் ஜனநாயகத்தையும் மனச்சாட்சியையும் தந்து விடுவது கூடாது. துணைச் சபாநாயகரை நீக்க வேண்டுமென்பதற்குக் காரணம் ஒரே ஒரு காரணம்தான், தி.மு.க.-விலிருந்து அண்ணா தி.மு.க.-விற்குச் சென்றுவிட்டார் என்ற கருத்தைச் சொன்னார்கள். இது ஒரு சாதாரணக் காரணமா? இந்தக் காரணம் போதிய காரணமாக இல்லாமல் தெரிகிறதா? சபாநாயகராக இருக்கிறவர், 'நான் தி.மு.க.-விலே தொடர்ந்து இருக்கிறேன், தி.மு.க.வின் கொள்கைகளை நிறைவேற்றுவதற்காக நான் இங்கே இருக்கிறேன்' என்று சொன்னால் எங்களைப் போன்றவர்கள் எல்லாம் சொல்லுவோம், 'சபாநாயகர் அவர்களே, நீங்கள் உங்கள் நாற்காலியை விட்டு இறங்குங்கள்' என்று சொல்வோம். தி.மு.க.விலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு

[1974 மார்ச் 9] [திரு. எம். ஏ. லத்தீப்]

இந்த நாற்காலியிலே உட்கார்ந்து கொண்டு தி.மு.க.வுக்கு சாதகமாகவோ அல்லது பாதகமாகவோ இருந்தால் அவரை இறக்க வேண்டுமென்று சொல்வோம். ஆனால் தி.மு.க.-விலிருந்து வேறு கட்சிக்குத் தாவிவிட்டார் என்று சொல்லும்பொழுது . . .

திரு. பெ. சீனிவாசன்: தலைவர் அவர்களே, என்னுடைய அருமை நண்பர் திரு. லத்தீப் அவர்கள் என்னுடைய அதிகமாகப் பழகியவர் என்று எல்லாம் சொன்னார்கள். அவர் 'கட்சி தாவி விட்டார்' என்று சொல்லக் கூடாது. 'கட்சி தாவல்' என்பது தினத்தந்தி வாசகம், முறையான வாசகமாக, நாகரிகமான வாசகமாக அது இல்லை. ஆகவே தரம்கெட்ட வாசகம் அது என்பதை நான் அவர்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப்: தரத்தைப் பற்றித் தமிழிலே என்னை விட திரு. சீனிவாசனுக்கு அதிக அறிவு உண்டு என்பதை ஒப்புக் கொள்கிறேன். ஏனென்றால் சீனிவாசன் எம்.ஏ. தமிழிலே படித்தார், நான் பொருளாதாரத்திலே படித்தேன். எது தரம், எது தரமில்லை என்பது அவரவர்களின் மனோபாவத்தைப் பொறுத்தது. நான் நல்ல மனோபாவத்தோடுதான் சொன்னேன். ஆனால் திரு. சீனிவாசன் அதை எந்த வகையில் எடுத்துக் கொண்டாரோ தெரியவில்லை.

திரு. பெ. சீனிவாசன்: என்னுடைய மனம் புண்படுகிறது என்பதற்காகச் சொல்லவில்லை. தமிழ் நாட்டில் ஒரு வார்த்தையை குறிப்பிட்ட ஒரு மூகாம், குறிப்பிட்ட ஒரு முறையிலே பயன்படுத்தும் வார்த்தை. அந்த வார்த்தையை பார்லிமெண்ட்ரி முறையில் நீங்கள் பயன்படுத்தினால் உங்கள் தரத்திற்கு ஆபத்து வந்துவிடுமே என்றுதான் கவலைப் படுகிறேன்.

திரு. சௌடி சுந்தரபாரதி: திரு. சீனிவாசன் அவர்கள் இதை அவ்வளவு பெரிதாக எடுத்துக் கொள்ள வேண்டியதில்லை. ஆங்கிலத்திலே உள்ளதைத் தமிழிலே அவ்வளவாகப் புரிந்து கொள்ளாமல் சொன்னாரே தவிர, வேறு எந்த அளவிலும் அல்ல என்று எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[1974 மார்ச் 9

திரு. எம். ஏ. லத்தீப்: மாண்புமிகு துணைச் சபாநாயகரவர்கள் 'ஒருசில கோஷ்டியினரும், சில முகாம்களும் பயன்படுத்துகிற வார்த்தை' என்று சொன்னார்கள். நான் முகாம்களைத் தேடிக் கொண்டு அலைவதில்லை.

திரு. பெ. சீனிவாசன்: அரசியலில் திரு. லத்தீப் அவர்கள் சேர்ந்துள்ள இயக்கம் இன்றைக்கு எப்படி எப்படிக் குலைந்து போன முகாம்களுடைய காவலில் இருக்கிறது என்று தெரியும். நான் உருப்படியான முறையில் உருவாகின்ற ஒரு முகாமிலே சேர்ந்திருக்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப்: உருவைத் தேடிக்கொண்டு உருவை இழந்துவிடுபவன் நானல்ல. எங்களுக்கு என்று ஒரு உருவம் உண்டு. அந்த உருவத்திலே ஒரு எண்ணம் உண்டு. அதை நாங்கள் எப்பொழுதுமே எங்கள் வாழ்க்கையைவிட அதிகமாகப் பேணிக் காப்பவர்கள். நம்முடைய கட்சியைப் பற்றிச் சொன்னார்கள். நம்முடைய கட்சி குலைந்து கொண்டிருக்கிறது என்று சொன்னார்கள். அது குலைந்து கொண்டிருக்கிறதா என்று அவர்கள் நாளைக்கு அலைந்துகொண்டு பார்ப்பார். குலைந்து கொண்டிருக்கிறதா அல்லது வேறு விதத்திலே இருக்கிறதா என்று பார்க்க அலைந்து கொண்டிருப்பார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எங்களுடைய கட்சியைக் காப்பாற்று வதற்கு திரு. லத்தீப் மட்டும் பொறுப்பு அல்ல. இந்த நாட்டிலே யுள்ள அத்தனை இஸ்லாமிய சமுதாயத்தினருக்கு மட்டுமல்ல, இந்த நாட்டிலேயுள்ள அத்தனை சிறுபான்மை சமுதாயத்தினருக்கும், காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரையில் உள்ள அத்தனை சிறு பான்மை சமுதாயத்தினருக்கும் ஏகபோக ஸ்தாபனமாக இருப்பது இந்திய யூனியன் முஸ்லீம் லீக். இதைப்பற்றி அமிர்த சரசிலே இருக்கின்ற பொற்கோயிலில் வீற்றிருக்கக்கூடிய சீக்கிய குரு என்னிடத்திலே நேரிடையாகச் சொன்னார்கள். அப்பொழுது சில சட்டமன்ற உறுப்பினர்களும் இருந்தார்கள். இந்த முஸ்லீம் லீக் இஸ்லாமிய சமுதாயத்தினருக்கு மட்டுமல்ல, எல்லாவித சிறுபான்மை மக்களுக்கும் உரிமைக்குரல் எழுப்புகின்ற ஒரே ஸ்தாபனம், சிறுபான்மையினருக்கு ஏகப்பிரதிநிதித்துவம் வகிக்கும் ஸ்தாபனம் என்று சீக்கியர்களின் பொற்கோயிலில் உள்ள குரு அன்றைக்கு நற்சாட்சி வழங்கியிருக்கிறார்கள்.

1974 மார்ச் 9]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் வேறு முறையில் போகிறது.

திரு. பெ. சீனிவாசன்: திரு. லத்தீப் அவர்கள் தன்னைக் காப்பாற்றிக் கொள்வதற்காக ஒரு சமுதாயத்தை இழுக்க வேண்டாம். இஸ்லாமியர்களிடத்திலே எனக்கு உயர்ந்த மரியாதை உண்டு. அந்த இஸ்லாமிய சமுதாயத்தினருக்கும், இன்றைக்கு திரு. லத்தீப் இருக்கும் முகாமிற்கும் சம்பந்தமில்லை. அதற்கு நீங்கள் பிரதிநிதி என்று சொன்னால், தமிழ் நாடு முஸ்லீம் லீக் என்ற அமைப்பும் இருக்கிறது. அவர்களுக்கு இவர்களைவிட செல்வாக்கு அதிகமாக இருக்கிறது என்பதையும் மறந்துவிட வேண்டாம்.

திரு. எம். ஏ. லத்தீப்: திரு. சீனிவாசன் அவர்கள் இங்கே என்னுடைய வாதத்திற்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்திருப்பதைப்பற்றி மகிழ்ச்சியடைகிறேன். இன்றைக்கு எங்கேயோ உள்ள * * * ஏழெட்டு பேர் உட்கார்ந்து கொண்டு கட்சியின் பெயரால் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அவர்களைக் கூடச் சேர்த்துக்கொண்டு . . .

திரு. பெ. சீனிவாசன்: சட்டப் பேரவையில் அந்தத் தமிழ் நாடு முஸ்லீம் லீக் இல்லை. ஒரு அரசியல் கட்சியைப்பற்றி இம்மாதிரி விமர்சனம் செய்வது சரியல்ல. * * *

* *

THIRUMATHI T. N. ANANDANAYAKI: As a lady member I would like to point out to both hon. Members.

* அது இது என்பதை யெல்லாம் வெளியே போய்ப் பேசுங்கள். சட்டசபையில் பேசாதீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் வேறு விதத்திலே போய்க்கொண்டிருக்கிறதே. அவைமுன் இருக்கும் விவாதத்திற்கு வாருங்கள்.

திரு. எம். ஏ. லத்தீப்: என்னுடைய வழக்கத்திற்கும் மாறாக நான் மிகவும் கட்டுப்பாடுடன்தான் அடக்கிப் பேச ஆரம்பித்தேன். ஆனால் தமிழ்நாடு முஸ்லீம் லீக் என்ற பெயரில் இருப்

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

[திரு. எம். ஏ. லத்தீப்] [1974 மார்ச் 9

பதைப்பற்றி முதன் முதலில் நம்முடைய திரு. சீனிவாசன் அவர்கள் தான் இங்கே சொன்னார்கள். அவர்கள் சொல்லும்போது நான் அதற்குப் பதில் சொல்லக் கூடியவனாக இருந்தேன். தேர்தலிலே பார்த்துக்கொள்ளலாம் என்று சவால் விட்டார்கள். என்னுடைய கட்சிக்கும் விட்டார்கள். தேர்தலிலே பார்த்துக் கொள்வது என்பதெல்லாம், அந்த முறைகளெல்லாம் திரு. சீனிவாசனுக்கும், அவர்களைச் சேர்ந்தவர்களுக்கும் அதிகமாகத் தெரிந்திருக்கிறது என்பதை நான் மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்கிறேன். எனக்கு அந்த முறைகளெல்லாம் தெரிய வில்லை. எனக்குத் தெரிந்த தெல்லாம் கொள்கை. கொள்கையைப் பொறுத்துத் தானே தவிர, தேர்தலிலே அடைகின்ற வெற்றிகளைப் பற்றிக் கவலையில்லை. அமைச்சர் பதவிக்காக அலைந்து திரிந்து அது கிடைக்காவிட்டால் மனத்தாங்கல் ஏற்பட வேண்டுமென்பது என்னுடைய நோக்கம் அல்ல.

திரு. பெ. சீனிவாசன்: அவர்கள் சொல்வதால்தான் பதில் சொல்ல வேண்டியிருக்கிறது. நான் அமைச்சர் பதவிக்காக அலைந்து திரியவில்லை என்பது அமைச்சர் பதவிகளைக் கொடுக்கின்ற முதலமைச்சருக்குத் தெரியும். இடையிலே உள்ள எனைநானைக்களும், தரகு வேலை செய்பவர்களும் சொல்லக் கூடிய காரியம் அல்ல. இதே உதவி சபாநாயகர் பதவிக்காக எந்தெந்த மாடிப்படிகளை யெல்லாம் அவர் ஏறி இறங்கினர் என்பதும் நன்றாகத் தெரியும்.

திரு. எம். ஏ. லத்தீப்: இந்த நாட்டினுடைய முதலமைச்சர் பதவி கிடைப்பதாக இருக்கட்டும், அல்லது ஜனாதிபதி பதவி கிடைப்பதாக இருக்கட்டும். அதற்காக இப்படிக் கட்சிவிட்டுக் கட்சி மாறிச் செல்வதைவிட உயிரைக் கொடுப்பதற்கும் தயாராக இருக்கின்றவன். பட்டம் பதவிக்காக திரு. லத்தீப் அலைந்து கொண்டிருந்தால் அவன் முஸ்லிம் லீக்கிலே இருக்கக்கூடிய எமாளியாக இருக்க மாட்டான். பட்டம் பதவிக்காக இருப்பவன் என்றால் அவன் இப்படி எமாளியாக ஒருநாளும் இருக்கவே மாட்டான். முஸ்லிம் லீக்கிலே இருக்கிறான் என்றால் அவன் தியாகத்திற்காக, சமுதாய சேவைக்காகவே இருக்கிறான். நான் கட்சி மாறினால் பட்டம் பதவி பெற முடியுமென்று திரு. சீனிவாசனுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்படிப்பட்ட வார்த்தைகளை நான் அவரிடமிருந்து எதிர்பார்க்கவில்லை. அவர்களைப்பற்றி நான்

1974 மார்ச் 9] *[திரு. எம். ஏ. லத்தீப்]*

மிகவும் மரியாதை வைத்திருக்கிறேன். நான் எந்த மாடி ஏறி இறங்கினேன்? நான் பதவியைத் தூசாகக் கருதுபவன். நான் பதவியை விரும்பக் கூடியவனை இருந்தால் கட்சியை விட்டு கட்சி மாற முற்பட்டிருப்பேன். லத்தீப் பிறந்தது முஸ்லிம் லீக்கில், இருபது முஸ்லிம் லீக்கில், வாழ்வது முஸ்லிம் லீக்கில், இறப்பதும் முஸ்லிம் லீக்கில்தான். எனவே இன்றைக்கு திரு. சீனிவாசன் போன்றவர்கள் சொல்லும் இப்படிப்பட்ட குற்றச் சாட்டுகளுக்குக் காலம் பதில் சொல்லும், காத்திருங்கள் என்று அவர்களுக்கு எச்சரிக்கை செய்கிறேன். தயவு செய்து இம்மாதிரி பேச வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : அதை நீக்குங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதை நீக்க வேண்டுமென்பது பேரவைத் தலைவருக்குத் தெரியும். பிறகு பார்க்கலாம்.

THIRU V. M. ABDUL JABBAR : As a member I have got a right to demand expunction of it. You may refuse to admit my request.

திரு. எம். ஏ. லத்தீப்: திரு. சீனிவாசன் அவர்கள் அரசியலிலே இன்றைக்கு மறுபடியும் காலெடுத்து வைக்கப் போகிறவர்கள், அவர் சில பக்குவங்களைப் பெற வேண்டும். இன்றைக்குச் சொன்னார்கள், இதற்காகத்தான் அவர்களை நீக்கினார்கள் என்று சொன்னார்கள். அதை நான் ஏற்றுக்கொள்கிறேன். சபை நடவடிக்கைக்கு வித்தாக இருப்பது, அமைச்சரவைதான். அந்த அமைச்சரவை கொண்டுவரும் சில காரியங்களைச் சபையின் தலைவர் வேறுவிதமாக நடத்தி விடுவாரோ என்ற சந்தேகம் எழும்பொழுதும், சபை உறுப்பினர்களில் பெரும்பாலோரின் மதிப்பையும், மரியாதையையும் இழந்துவிடுவாரோ என்ற எண்ணமும் உருவாகும்பொழுதுதான் இத்தகைய ஒரு முறையினைக் கொண்டுவருவது அவசியமாகிறது என்பதை இந்த நேரத்தில் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

திரு. சீனிவாசன் அவர்கள் துணைச் சபாநாயகராகப் பணியாற்றிய காலத்தில் எல்லாவிதமான புகழுக்கும் உரிய முறையில், சிறப்புக்கும் உரிய முறையில் பாரபட்சம் இல்லாமலும், உயர்ந்த முறையிலேயும், இந்த மன்றத்தின் மரபுகளைக் காக்கின்ற

[திரு. எம். ஏ. லத்தீப்] [1974 மார்ச் 9

வகையிலேயும் பணியாற்றினர் என்பதை மனப்பூர்வமாகச் சுட்டிக் காட்டி அவர்கள் அம்மாதிரி நடந்து கொண்டதற்காகப் பாராட்டைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் அரசியல் சூழ்ச்சியிலே ஜனநாயக முறையில்லாத வழியைக் கடைப்பிடித்ததால்தான், ஒரு கட்சியிலேயிருந்து இன்னொரு கட்சிக்கு மாறி விட்டதாக அறிக்கை கொடுத்ததால், கட்சியின் தன்மையில் அவர்களுக்கு அரசியல் வர்ணம் பூசப்படுவதால் அவர்கள் இந்தப் பதவியில் நீடிப்பது இந்த மன்ற மரபுகளுக்கு, ஜனநாயகத்திற்கு நல்லது அல்ல என்ற முறையிலே இந்தத் தீர்மானத்தை ஆதரிக்கக் கூடியவனாக இருக்கிறேன்.

(பிற்பகல் 12-30)

அதை நான் ஆதரித்துத் தனிப்பட்ட முறையில் திரு. சினிவாசன் பேரில் எனக்கு எந்தவிதமான காழ்ப்புணர்ச்சியும் இல்லை, அவர்கள் வளர வேண்டும்; அவர்கள் மேலும் பல துறைகளில் சிறந்து விளங்க வேண்டும்; அதற்கு அவர்களுக்கு வேண்டிய பக்குவத்தை அவர் பெற்று வாழ வேண்டுமென்று நண்பன் என்ற முறையில் வாழ்த்தைத் தெரிவித்து அமர்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி: இரண்டு பேரும் குறுக்கிட்டுப் பேசுகையில் * * என்ற முறையில் பேசிக் கொண்டார்கள். அத்தகைய வார்த்தைகள் சட்டசபைக் குறிப்புகளில் இருப்பது சரியல்ல. அதைத் தயவுசெய்து நீக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(உட்கார்ந்து கொண்டே உறுப்பினர்கள் சிலர் உரத்த குரலில் குறுக்கிட்டனர்.)

I want it to be expunged. As a lady member I do not want such unwanted remarks to go on record. When I say this why should there be such shouting?

அந்த வார்த்தைகளை நீக்க வேண்டுமென்று சொல்லுகிறேன். அதைப்பற்றிச் சபாநாயகர் தீர்ப்புக் கூற வேண்டுமே தவிர இவர்கள் ஏன் கூச்சல் போட வேண்டும்?

---

* மாண்புமிகு போலைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பட்டது.

1974 மார்ச் 9]

THIRU R. PONNAPPA NADAR : I would also request that those words be expunged with due deference to the sentiments prevailing in this House. I would once again appeal to the Chair that those particular offensive words be expunged.

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அந்த வார்த்தைகளைச் சொல்ல எனக்கும் கூச்சமாக இருக்கிறது. ஆகவே, குறிப்பிட்ட அந்த வார்த்தைகளோடு * * என்ற வார்த்தையும் சேர்த்து அந்த மூன்று வார்த்தைகளையும் நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்த மூன்று சொற்றொடர்களும் அவை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. அவற்றைப் பத்திரிகைகளில் வெளியிட வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன்.

THIRU B. VENKATASWAMI : I would like to offer a few remarks on behalf of the Swantantra Party regarding the removal of the Deputy Speaker.

Thiru Kandappan has brought forward that resolution. But this motion has been brought forward without any reason. I think this motion should have been brought forward on December 3, 1972, because it was in December 2, 1972 the Speaker of the Assembly had been unconstitutionally removed. Now also this motion of removing the Deputy Speaker is being brought forward unconstitutionally, for the only reason for removal is because he had joined another party. There is no reason except this.

We must follow some principles. We must follow the Constitution. According to the Constitution we do not find any concrete reasons for removal of Deputy Speaker except some exchanges and counter-exchanges between sister parties like D.M.K. and A.D.M.K.

I raised a point of order that the Deputy Speaker has already exposed himself stating that he was willing to tender his resignation if any Member gave a no-confidence motion against him. That is why I raised the point of order and he was very angry

---

* *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பட்டது.*

[Thiru B. Venkataswami] [1974 மார்ச் 9

with me when I raised it. Why I asked that question is because of this. Actually he has already told like this: "Some people prosted and said that I would be removed from Deputy Speakership. So I am not going to resign". That is what has come from his mouth.

It is a dispute between D.M.K. and A.D.M.K. That is what is actually going on. This removal or no-confidence ought to have been brought when the Hon. Mr. Mathialagan was removed in an unconstitutional way from Speakership. Even now the Deputy Speaker is sought to be removed in an unconstitutional way. That is what the Swantantra Party feels. There is a proverb in Tamil which says "முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்" As a Deputy Speaker and as one belonging to the Ruling Party, he was there when the Speaker was removed. Now the Ruling Party is removing him, the Deputy Speaker. The same is repeating itself. It may repeat itself again against some other man. History repeats itself. We should not forget that.

On behalf of my party I want to say that we do not want to support this or that party. We will be neutral because such instances point out to the deterioration of democracy in the country. The Speaker and Deuty Speaker occupy the highest offices and are expected to keep themselves above party politics. Unfortunately we find that the present Deputy Speaker indulged in open political activities and floor crossing hitherto unprecedented in the annals of Legislature history. We have to treat this matter as a family feud between the Ruling Party and its sister party A.D.M.K. and this sort of thing is not going to help anybody. So, our opinion is that we shall be silent witnesses to this drama which will mar the history of Tamil Nadu. Thank you.

(Thiru V. Balasundaram in the Chair.)

THIRU K. S. KOTHANDARAMIAH: Mr. Chairman, Sir, I would like to say a few words on this no-confidence motion brought forward by the hon. Member Thiru Kandappan.

I do not belong to any political party. I do not want to criticise this or that party and support some other party. I want to be above all that.

1974 மார்ச் 9] [Thiru K. S. Kothandaramiah]

We have heard arguments for and against and a peculiar situation has been created. My anxiety is that we should protect and maintain the decorum and decency of this House and keep it as an ideal House for the rest of the country. I humbly appeal to Shri Kandappan and the Hon. Chief Minister to kindly withdraw this motion and set an ideal precedent for the House.

*மணலி திரு. சி. கந்தசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அங்கத்தினர் திரு. கந்தப்பன் அவர்கள் முன்மொழிந்துள்ள இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

இந்தத் தீர்மானம் வருந்தத்தக்கதாக இருக்கிறது என்று சொல்லலாம். இந்தத் தீர்மானத்தின் மீது நடந்த விவாதத்தில் பல்வேறு கருத்துக்கள் சொல்லப்பட்ட போதிலும்கூட இன்றைய தினம் பாராளுமன்ற ஜனநாயகத்தில் மிகவும் முக்கியமாக இருக்கக்கூடிய ஓர் அம்சம் மெஜாரிடி ரூல் என்று சொல்லக்கூடிய பெரும்பான்மைக் கட்சி ஆளுகின்ற ஜனநாயகத்தில் பெரும் பான்மைக் கட்சி சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்டு பதவி வகிக்கக் கூடியவர்கள் அந்தக் கட்சியை விட்டு வேறு கட்சிக்குப் போகக் கூடிய நிலைமை ஏற்பட்டால் தாங்களாகவே ராஜினாமாச் செய்து விட்டுப் போவதுதான் நல்ல ஜனநாயக அரசியல் என்பதை மிகப் பணிவோடு மதிப்பிற்குரிய நண்பர் சீனிவாசன் அவர்களுக்குக் கூறிக் கொள்ள விரும்புகிறேன். அதைச் செய்திருந்தால் அவர்களுடைய அந்தஸ்து பெரிய அளவுக்கு உயர்ந்திருக்கும். அவர் தனக்குப் பிடித்தமான கட்சிக்குப் போயிருக்கிறார். அந்தக் கட்சி தமிழகத்தில் நல்லதொரு பாரம்பரியத்தை, ஜனநாயகப் பாரம்பரியத்தை ஏற்படுத்துவதற்கு முன் முயற்சி செய்து அதன் மூலம் இந்த ஆட்சியை அகற்றி அந்த இடத்திற்கு வருவதற்கு முயற்சி எடுத்துக்கொள்வதில் நிச்சயமாக வெற்றி பெற முடியும்.

இன்றையதினம் ஆளும் கட்சியிலிருந்து ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்து இந்தச் சபையில் வேண்டாத விவாதத்தைத் கிளப்பி பல பேர் இதற்குக் காரணத்தைச் சொல்லியிருக்கக் கூடாதா என்றெல்லாம் பேசியிருக்கிறார்கள். காரணம் என்ன? தான் இருந்த கட்சியை விட்டு—பெரும்பான்மை கட்சியை விட்டுப் போய்விட்டார். ஆகவே, தானே விலகி

[மணலி திரு. சி. கந்தசாமி] [1974 மார்ச் 9

விடுவதுதான் ஜனநாயகத்தில் சிறந்த ஓர் அம்சமாக இருக்கும். மாண்புமிகு அம்மையார் அவர்கள்கூட காரணத்தை என் சொல்லவில்லை என்று கேட்டார்கள். வெறும் வாயையே மெல்லு கிறவர்களுக்கு இரண்டு அவலையும் கொடுத்து விட்டால் அது அப்படி அல்ல இப்படி அல்ல என்று பேச வேண்டி வரும்.' மாண்பு மிகு திரு. சீனிவாசன் அவர்களுடைய திறமையைப் பற்றி, சுறுசுறுப்பைப் பற்றி, தன்மையைப் பற்றி, தீர்ப்பு வழங்குவதைப் பற்றி இந்தச் சபையில் யாருக்கும் மாறுபட்ட அபிப்பிராயம் கிடையாது.

அதுவல்ல பிரச்னை. இன்று ஒரு கட்சி சார்பாக, மெஜாரிட்டி ரூல் என்ற அடிப்படையில் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக் கிறார்கள். அவர்கள் போகட்டும், அதைப் பற்றிக் கவலை இல்லை, நான் அவர்கள் போவதைப் பற்றிக் கவலைப்படவுமில்லை, சந்தோசப் படவுமில்லை. அவர்கள் முதல் அமைச்சர் அவர்களிடம் சென்று, உங்கள் கட்சி எனக்குப் பிடிக்கவில்லை, அநீதியாக இருக்கிறது, நான் நல்லதொரு கட்சிக்குப் போகிறேன், ஆகவே எனது பொறுப்புகளை உங்களிடம் ஒப்படைத்து விட்டுப் போகிறேன் என்று சொல்லியிருந்தால் இந்த வேதனை நமக்கு வந்திருக்காது. நம்பிக்கையில்லாத் தீர்மானம் வந்து அதில் பலர் பேசுவது, கோபதாபங்கள் ஏற்படுவது இவை எல்லாம் விரும்பத்தக்கவை அல்ல.

நீதி பற்றி, பாராளுமன்ற மரபுகள் பற்றி திரு. தங்கமணி அவர்கள் பல விஷயங்களைப் பற்றிச் சொல்கிறார்கள். நான் கேட்டுக்கொண்டுதான் இருக்கிறேன். நான் தேடித் தேடிப் பார்க்கிறேன், நீதி எங்கே இருக்கிறது என்று. நீதி ஒரு பக்கத் திலாவது இருந்தால் இன்னொரு பக்கத்தைக் குற்றஞ் சாட்டலாம். பிறர் மீது குற்றஞ் சாட்டுபவர்கள் தங்கள் மீதுள்ள குற்றங்களை மறைக்கிறார்கள். எப்படியாவது கலைஞர் அவர்களைப் போய் விடச் சொல்ல வேண்டும் என்கிறார்கள். தி.மு.க. ஆண்டால் கூடப் பாதகமில்லை, அவர் போய்விட வேண்டும் என்ற குறுகிய எண்ணம் பெரிய அளவில் அரசியலில் வந்திருக்கிறது என்பதைக் கண்ணால் பார்க்கிறேன். கற்பனையில் சொல்லவில்லை. இப்படிப் பட்ட துவேஷ மனப்பான்மை சரியல்ல.

பேரவைத் துணைத் தலைவரைப் பதவியிலிருந்து நீக்கக் கோரும் தீர்மானம் குறித்து

1974 மார்ச் 9] [மணலி திரு. சி. கந்தசாமி]

இப்படிப்பட்ட விரும்பத்தகாத ஒன்றைப் பற்றி விவாதிக்க ஒரு சந்தர்ப்பத்தை திரு. சினிவாசன் அவர்கள் கொடுத்திருக்க வேண்டியதில்லை. வேறு வழியில்லை. ஆகவே இதை ஆதரிப்பது தவிர வேறு வழியில்லை. ஆளும் கட்சிக்கு ஜாலரா அடிக்கிறார் என்று சொல்லலாம் சில பேர்கள். அநியாயமாக எதிர்க்கட்சிக்கு டமாரம் அடிப்பதைவிட ஆளும் கட்சிக்கு ஜாலராக அடிப்பது மிகவும் நல்லது. (ஆரவாரம்.) நியாய அடிப்படையில் ஜாலரா அடிப்பதை வரவேற்கிறேன். இன்று எதையும் சுத்தமாக ஏற்றுக் கொள்ள நான் தயாராயில்லை. நான் கூட கஷ்டப்பட்டு ஒரு நல்ல கட்சியைத் தொடங்க வேண்டுமென்று தொடங்கினேன். என் கட்சிக்கு ஒரு ஆள் கூட வரமாட்டேன் என்கிறார்கள். கவர்ச்சி இல்லை. ஒரு ஆள் கூட வரமாட்டேன் என்கிறார்கள். நான் யோக்கியதையாக அரசியல் நடத்து கிறவன். பல கஷ்டங்கள் பட்டிருக்கிறேன், பல தியாகங்கள் செய்திருக்கிறேன். மக்கள் நன்மையடைய வேண்டும் என்று பல இன்னல்களை அனுபவித்திருக்கிறேன். ஆனால் ஒரு ஆள் கூட நம் பக்கம் வரமாட்டேன் என்கிறான்.

நேர்மை வேண்டும். இன்று அது இல்லை. நேர்மை இல்லா விட்டால் சட்டம், விதிகள் இவற்றினால் என்ன பலன்? சட்டப்படி, விதிப்படி சட்டசபையை நடத்தினால் மட்டும் போதுமா? நேர்மை யும் வேண்டும். ஐந்தாண்டுகள் கழிந்து சட்டசபை ஒழுங்காக நடந்தது, நல்ல பல காரியங்கள் நடந்தன, பல உருப்படியான யோசனைகளைச் சொன்னார்கள், நல்ல காரியங்கள் நடைபெற்றிருக் கின்றன என்ற நற்பெயர் எடுக்கும் விதத்தில் சட்டசபையின் போக்கு மாற வேண்டும்.

* **திரு. பெ. சீனிவாசன்:** பேரவையின் மாற்றுத் தலைவர் அவர்களே, இங்கு இதுவரையில் எல்லாக் கட்சிகளைச் சார்ந்த தலைவர்களும் இத் தீர்மானத்தின் மீது அவர்களுடைய தெளிவான கருத்துக்களை இங்கு சொல்லியிருக்கிறார்கள்.

இங்கு நடப்பது என் மேல் நம்பிக்கை இல்லாமல் பதவி விலக வேண்டும் என்ற ஒரு தீர்மானமா அல்லது எனக்குத் தரப்படுகிற பிரிவு உபசார விழாவா என்று சந்தேகப்படக் கூடிய அளவிற்கு அத்துணைத் தலைவர்களும் மிகப் பெருந்தன்மையோடு பாராட்ட வேண்டிய நேரத்தில் என்னைப் பாராட்டியிருக்கிறார்கள். கண்டிக்க வேண்டிய நேரத்தில் கண்டித்துமிருக்கிறார்கள்.

[திரு. பெ. சீனிவாசன்] [1974 மார்ச் 9

இந்தத் தீர்மானத்தை முன்மொழிந்த என் அருமை நண்பர் மாண்புமிகு திரு. கந்தப்பன் அவர்கள் கூட மெஜாரிட்டி பலம் இல்லே, நீங்கள் மெஜாரிட்டியை விட்டு மைனரிட்டிக்குப் போய் விட்டீர்கள் என்ற ஒரு காரணத்தைத் தவிர வேறு தர்ம சங்கட மான சூழ்நிலையை உருவாக்கும் விவாதத்தை அவர்கள் எழுப் பாதது குறித்து அவர்களுக்கு முதலில் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தத் தீர்மானத்தின் மீது சட்டமன்றம் எடுக்கிற முடிவை யொட்டி நான் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதற்கு எனக்கு அனுமதி தந்த என் கட்சியின் தலைவர் மதிப்பிற்குரிய புரட்சித் தலைவர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களுக்கு நான் என் நன்றியை முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன். (ஒரு ஒலி கேட்டது.) திடீரென்று இப்படி ஒரு வலி வரக்கூடிய அளவிற்கு என்ன நடந்தது என்று தெரியவில்லே. அப்படிப்பட்ட ஓசையை எழுப்ப வேண்டாம். அது முறை அல்ல. அது தலைவருக்குக் கொடுக்கக்கூடிய மரியாதையும் அல்ல. ஆகவே தயவுசெய்து அமைதியோடு இருக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. எம். ஆர். கண்ணன்: இதுமாதிரி ஒருவர் புத்தி சொல்ல வேண்டிய அவசியமில்லே.

(கூச்சல், குழப்பம்.)

திரு. முனு ஆதி: எதற்கெடுத்தாலும் இப்படிச் சப்தம் போட்டால் என்ன செய்வது? தலைவர் அவர்கள் அதைக் கண்டிக்க வேண்டும்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை).

திரு. பெ. சீனிவாசன்: பேரவைத் தலைவர் அவர்களே, நான் பேசுகிறபோது யார் குறுக்கிட்டாலும் நான் அதைப்பற்றிக் கவலைப்படவில்லே. ஆனால் அந்த ஒலிகளே அழகான தமிழில், தமிழ் வார்த்தைகளில் வெளியிடாது இப்படி ஒலி எழுப்பினால் நான் பேசவில்லே. அப்படியில்லே என்றால் நான் என் வாய்ப்பை இழக்கக்கூடத் தயாராயிருக்கிறேன்.

1974 மார்ச் 9] [திரு. பெ. சீனிவாசன்]

இங்கு பேசிய திரு. வெங்கடசாமி அவர்கள் நான் ஏன் ராஜி நாமா செய்திருக்கக் கூடாது என்று சொன்னார்கள். பெரியவர். என் மதிப்பிற்குரிய மணலி அவர்களும் அந்தக் கருத்தைச் சொன்னார்கள்—எனக்கு அறிவுரை சொல்வதுபோல் எடுத்துக் கொள்கிறேன்—ஏன் ராஜிநாமா செய்திருக்கக் கூடாது என்று சொன்னார்கள். என்றைக்கு நான் ஆளும் கட்சியிலிருந்து விலகுவதற்கு முடிவு செய்தேனோ அன்றே இந்தப் பதவியில் நான் இருப்பதால் எந்தவிதமான அர்த்தமும் இல்லை என்று தெளிவாக நானே முடிவு செய்து கொண்டேன். இப்போது நான் ஆளும் கட்சியில் இருந்து விலகியிருக்கிறேன். எனவே இதில் ஒட்டிக் கொண்டிருக்க எண்ணம் எனக்குக் கொஞ்சம்கூட இல்லை என்பதை நிச்சயமாகச் சொல்லிக்கொள்கிறேன்.

6 ம் தேதி கூட சட்டசபைக்குள்ளே வரக் கூடாது என்றுதான் இருந்தேன். 6-ம் தேதி அன்று என் மீது விலகல் தீர்மானம் வந்து அன்றே நிறைவேறி விடும் என்று மிகவும் ஆவலோடு வந்தேன். ஆனால் அதை 12-ம் தேதிக்கு ஒத்திப்போட்டுப் பின்னர் பிஸினஸ் அட்வைசரிக் கமிட்டிக் கூட்டத்தில் 9-ம் தேதி என்று அதை மாற்றியிருக்கிறீர்கள். 6ம் தேதி அன்று இங்கே டாக்டர் ஹாண்டே அவர்கள் ஒரு ஒழுங்குப் பிரச்னையை எழுப்பினார்கள். நான் வெளியே கேட்டுக் கொண்டிருந்தேன். உதவி சபாநாயகர் அவர்களே இந்த நாற்காலியில் அமரக் கூடாது என்று ஆளும் கட்சியிலிருந்து ஏதாவது தடை சொல்லியிருக்கிறார்களா என்ற ஒரு பிரச்னையை எழுப்பியவுடன் அப்படி ஒரு பிரச்னையை எழுப்பவில்லை. யாரும் என்னைத் தடுக்கவில்லை என்பதை நிரூபிப்பதற்காகத்தான் நான் வந்து உட்கார்ந்தேன். நான் வந்து உட்கார்ந்த சிறிது நேரத்தில் நான் கட்சி மாறிய காரணத்தினால் என் நடுநிலைமையில் மாறவில்லை என்பதை இந்தப் பேரவைக்கு நான் நிரூபித்துக் காட்டியிருக்கிறேன்.

நான் நடுநிலைமை மாறவில்லை என்று கூறிய திரு. தங்கமணி அவர்கள் டெல்லியில் உதவி சபாநாயகர் அவர்கள் எதிர்கட்சியைச் சார்ந்தவராக இருக்கிறார்கள், அவர்கள் நேட்காமலேயே கொடுத்திருக்கிறார்கள், இப்போது ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். எனக்கு அந்தப் பதவி வேண்டியதில்லை,

[திரு. பெ. சீனிவாசன்] [1974 மார்ச் 9

அந்தப் பதவியை ஏற்க நான் விரும்பவில்லை என்பதை திரு. தங்க மணி கூறியதற்குப் பதிலாக நான் சொல்லிக் கொள்ள விரும்பு கிறேன்.

என் அருமை நண்பர் அருப்புக்கோட்டை உறுப்பினர் திரு. சௌடி சுந்தரபாரதி அவர்கள் மிக உருக்கமாகச் சொன்னார்கள். அவர்களுக்கு நான் தேர்தல் நேரத்தில் செய்ததைப்பற்றி அரைகுறையாக விட்டு விட்டார்கள். அதைச் சொல்வது எனது கடமை. அவரை எப்படியாவது தோற்கடிக்க வேண்டுமென்று கருதி ஒருவர் மட்டுமல்ல, மேல் மட்டத்தில் கூட பணியில் அவர்களை எப்படியாவது தோற்கடிக்க வேண்டுமென்று ஒரு முயற்சி நடந்தது. மாண்புமிகு மூதலமைச்சர் அவர்களின் சுற்றுப்பயணம் சுற்றிவிடப்பட்டு, புரட்சித் தலைவர் திரு. எம். ஜி. ஆர். அவர்களின் சுற்றுப்பயணம் வகுத்து விடப்பட்டு அவர் தொகுதியில் தக்க சமயத்தில் செய்யப்பட்ட உதவியைச் சுட்டிக்காட்டி அவர்கள் மிகக் களிவோடு பேசினார்கள். எந்த அளவிற்கு அன்பிருந்தால் கட்சிக் கட்டுப்பாட்டிற்காகச் செய்ததை அவர்கள் இங்கு எடுத்து விளக்கியுள்ளார்கள் என்பதை உணர்ந்து கொள்கிறேன்.

மெஜாரிட்டி என்ற பிரச்னையின் அடிப்படையில்தான் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. மெஜாரிட்டி எனக்கில்லை என்பதில் எந்தவிதமான சந்தேகமும் இல்லை. மெஜாரிட்டி இருப்பதினால்தான், மெஜாரிட்டி அடிப் படையில்தான் நம் பேரவையில் பல விசித்திரமான நிகழ்ச்சிகள் அல்லது அசாதாரண நிகழ்ச்சிகள், உறுப்பினர்கள் சொன்னது போல் நடந்தன. டிசம்பர் 2-ம் தேதி நடந்தது பற்றி இங்கு இன்று சொன்னார்கள். டிசம்பர் 2-ம் தேதி மறக்க முடியாத ஒரு நாள். டிசம்பர் 2-ம் தேதி நடந்ததை விமர்சனம் செய்த எதிர்க் கட்சியில் இருப்பவர்கள் எல்லாவற்றையும் பாராட்டிவிட்டு 2ம் தேதி செய்தது தவறு என்று சொன்னார்கள். ஆளும் கட்சியில் இருப் பவர்கள் டிசம்பர் 2ம் தேதி விவகாரத்திற்கு என்னை நிச்சயமாக யாரும் குறை கூறவில்லை. என்னைப் பொறுத்த வரையில் மதிப்பிற் குரிய கே. டி. கே. தங்கமணி அவர்களும், எதிர்க்கட்சித் தலைவர் திரு. பொன்னப்ப நாடார் அவர்களும் என் மீது கொண்டு வந்த விலக்கல் தீர்மானத்தைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். டிசம்பர்

1974 மார்ச் 9] [திரு. பெ. சீனிவாசன்]

2-ம் தேதி நடந்த நிகழ்ச்சிகள்—நான் என் கடமையைச் செய்தேன். அந்தக் கட்சியில் இருக்கிறவர்களின், மெஜாரிட்டியினரின் கட்டளையை நிறைவேற்றினேன்.

அந்தக் கட்சியினுடைய கட்டளையை நிறைவேற்றுவதில் நான் என்னுடைய கடமையை ஒழுங்காகச் செய்தேன். நான் அப்படிச் செய்தது தவறு, இல்லையா என்ற விவாதத்திற்குப் போவதற்கு அன்றைக்கு எனக்கு உரிமை கிடையாது. அதுபற்றிய வழக்கு நீதிமன்றத்திற்குச் சென்றது. செய்தது சரிதான் என்று நம்முடைய உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. சுப்ரீம் கோர்ட்டுக்குப் போய் இருந்தால் என்ன முடிவு வந்திருக்கும் என்று சொல்ல முடியாது. அந்த வழக்குப் பதிவு செய்யப்பட்ட வரலே திரும்பப் பெறப்பட்டு விட்டது. இரண்டாம் தேதி மெஜாரிட்டி அன்றைக்கு இருந்தது. அப்பொழுது அந்த மெஜாரிட்டி உண்மை. பேரவையினுடைய மொத்த உருவம் பேரவைத் தலைவரின் மேலோ, துணைத் தலைவரின் மேலோ அல்லது முதல் அமைச்சர் மேலோ அல்லது அவையின் முன்னவர் மேலோ இல்லை. பேரவையின் மொத்த உருவம் பேரவையிலுள்ள பெரும்பான்மையினர்களுடைய அபிப்பிராயத்தைப் பொறுத்து இருக்கிறது, பெரும்பான்மையினருடைய எண்ணத்தில் பேரவையின் மொத்த உருவம் இருக்கிறது என்று அன்றே சொல்லியிருக்கிறேன்.

அன்றைக்கு பேரவையினுடைய மொத்த உருவம் அப்படிச் செய்தது. அப்படிச் செய்தது சரியா, தவறு என்று நீதிமன்றத்திற்குப் போய்ப் பார்த்தோம். நீதிமன்றம் சரியென்று முடிவு தந்தது. மக்கள் மன்றத்தில் பார்த்தோம். மக்கள் மன்றத்தில் பார்க்க விரும்பியவர்களுக்கு மக்கள் மன்றம் அப்படிச் செய்தது தவறு என்று சொன்னது. மக்கள் மன்றத்தின் தீர்ப்பை ஒட்டித் நான் அரசியலில் என்னுடைய பாதை மாறியது. கட்சி தாவினேன் என்று எந்த அர்த்தத்தில் வேண்டுமானாலும் எடுத்துக்கொள்ளலாம். மக்கள் மன்றத் தீர்ப்பின் அடிப்படையில் எனது மன மாற்றம் அமைந்தது என்பதை இந்தப் பேரவையில் நான் எல்லோருக்கும் முன்னதாக மிகவும் பணிவோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

[திரு. பெ. சீனிவாசன்] [1974 மார்ச் 9

இந்தப் பதவி விலக்கல் தீர்மானம் கொண்டு வந்ததற்காக யார் மேலும் எனக்கு ஏந்தவிதமான கோபமும் கிடையாது. இது இயற்கையானது. நான் எதிர்பார்த்த ஒன்று. இன்னும் சொல்லப் போனால் இன்றைக்கு நடப்பது எனக்கு ஒரு முடி இறக்கு விழா. தமிழகத்தில் ஒரு பண்பாடு உண்டு. குழந்தைகளுக்கு முடி இறக்கு வார்கள். குழந்தைகளுக்கு முடி இறக்குவதன் காரணத்தினால், பழைய வியாதி, அல்லது எதாவது உடலில் இருக்கிற அசௌகரியம் போய், அந்தக் குழந்தை ஒரு புதுமைக் குழந்தையாகத் தோன்றும். அதுமாதிரி சொந்தக்காரர்கள் ஒன்று சேருவதைப் போல், இன்றைக்கு எல்லாக் கட்சித் தலைவர்களும் ஒன்று கூடி எனக்கு சம்பிரதாயபூர்வமான அந்த ஒரு விழாவை நடத்துகிறார்கள். ஒரு வேளை நான் ராஜினாமாச் செய்திருக்க வேண்டும் என்று எண்ணலாம். ஆளும் கட்சித் தலைவர்களுக்கு நான் தர்ம சங்கடத்தை உண்டாக்க விரும்பவில்லை.

நான் இந்த நேரத்தில் ஆளும் கட்சித் தலைவராக இருக்கிற நம்முடைய மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் அவர்களுக்கு ஒன்றைப் பணிவோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். நான் கட்சி விலகினேன். கட்சி விலகுவது என்பது தமிழ் நாட்டில், இந்திய அரசியலில் புதுமை அல்ல. கட்சி விலகியவர்கள் திரும்பி வருவதையும் நாம் பார்த்திருக்கிறோம். திருப்பி மாறுவதையும் நாம் கண்டிருக்கிறோம். இதெல்லாம் தனிப்பட்டவர்கள் விருப்பம். அரசியலில் எடுத்துக் கொள்கிற முயற்சி. ஆனால், அப்படிக் கட்சி மாறியவர்கள் மீது ஆளும் கட்சி கையாளுகின்ற முறையை மாற்றிக் கொள்ள வேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

கோவைத் தேர்தலில் நான் வேலை செய்து கொண்டிருந்த பொழுது என்னுடைய வீட்டிற்கு ஊர்வலம் ஒன்று வந்தது என்று திமுகவின் சார்பாக எழுதுகிற தினத்தந்தி பத்திரிகையில் செய்தி வந்திருந்தது. ஊர்வலத்தில் வந்தவர்கள் மாணவர்கள் என்று செய்தி போட்டிருந்தார்கள். உள்ளபடியே மாணவர்கள் வரவில்லை. அங்கு இருக்கிற படைப் படத்தைப் பார்த்தாலே தெரியும். அரசாங்கத்தில் வேலை செய்கின்ற 2, 3 பேர்களும் அதில் இருக்கின்றார்கள். அது மாத்திரமல்ல, அரசாங்க வேலைக்காக முயற்சி செய்து கொண்டிருப்பவர்கள் அதிலே இருக்கிறார்கள். அந்த முயற்சியின் மூலம் எந்த வகையில் என்னுடைய மனதை

1974 மார்ச் 9] [திரு. பெ. சீனிவாசன்]

திருப்பி மாற்ற முடியும்? அந்த முயற்சியின் மூலம் எந்த வகையில் எனக்கு ஒரு எதிர்ப்புச் சக்தியை உருவாக்கி, அதன் மூலம் எனது அரசியல் செல்வாக்கைக் குறைக்க முடியும் என்பதை தயவு செய்து, அதை எற்பாடு செய்தவர்கள் யாராக இருந்தாலும், ஏற்பாடு செய்தது தெரிந்தும் தெரியாது போல் இருந்தாலும், ஆளும் கட்சியில் உள்ள மதிப்பிற்குரிய தலைவர்கள் தயவு செய்து எண்ணிப் பார்க்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள் கிறேன்.

நான் ராஜினாமா செய்ய முடியாத ஒரு நிலையை உருவாக்கிய நிலையைச் சொல்லித்தான் ஆகவேண்டும். 17-ம் தேதி நான் கட்சி விலகினேன். 18-ம் தேதி அல்லது 19-ம் தேதி பத்திரிகையில் ஒரு செய்தி வந்தது. மதிப்பிற்குரிய சட்டமன்ற உறுப்பினர் திரு. சுருளிவேல் நேரடியாகக் கொடுத்திருக்கிறார்கள். சட்டமன்றத்தின் மரபு போவைத் தலைவர் அனுமதி இல்லாமல் இத்தகைய தீர்மானம் வெளியே பத்திரிகையில் முன்கூட்டியே வரக்கூடாது. ஆனால், அவர்கள் கொடுத்திருக்கிறார்கள் 'நான் தீர்மானத்தைத் தந் திருக்கிறேன்' என்று. அந்தத் தீர்மானம் தந்த முறை சரியல்ல. சட்ட விதிகளுக்கு உட்பட்டு இல்லை என்ற காரணத்தினால் அந்தத் தீர்மானத்தை நம்முடைய செயலாளர் ஏற்றுக் கொள்ளவில்லை. அதற்குப் பிறகு நம்முடைய மதிப்பிற்குரிய கந்தப்பன் அவர்கள் இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்தார். அது ஏற்றுக்கொள்ளப் பட்டது. நமது சட்டமன்றத்தில் நடந்த நிகழ்ச்சி பற்றி வெளியிலே பத்திரிகையில் வந்ததன் மூலம் எனக்கு எந்தவித மான நஷ்டமும் இல்லை. ஆனால் எந்த ஒரு வகையிலாவது அதனால் தேர்தலில் சாதக பாதகம் ஏற்பட்டிருக்கலாம். இப்படி அவர் அவசரப்பட்டு, ஆத்திரப்பட்டுச் செய்திருக்க வேண்டிய தில்லை என்பதை நான் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

நானாகவே ராஜினாமாச் செய்திருப்பேன். அதிலே எந்தவித மான சந்தேகமும் இல்லை. நான் இதே பதவியில் இருந்து கொண்டு எனக்குச் சட்டமன்றத்தில் பேசக்கூடிய வாய்ப்பை இழக்க வேண்டும் என்ற எண்ணம் இல்லை. நான் சார்ந்திருக்கிற கட்சியிலே மைனாரிட்டியாக 13 பேர்கள்தான் இருக்கிறோம். பதின் மூன்று பேர்களுக்குப் பேசுவதற்கு நிறைய நேரம் இடைத்தது. அந்த நேரத்தை எடுத்துக் கொண்டு நான் சட்ட மன்றத்திலே

[திரு. பெ. சீனிவாசன்] [1974 மார்ச் 9

ஆற்ற வேண்டிய கடமையைச் செய்வேனே தவிர, பேசுவேனே தவிர, இந்தப் பதவியில் இருந்து கொண்டு அந்த வாய்ப்பை நான் நிச்சயம் இழக்கமாட்டேன். அப்படி நான் பதவியில் இருந்து கொண்டிருந்தால், பொது மக்கள் மன்றத்தில், நான் நம்புகின்ற பொது மக்கள் மன்றத்தில் அவர்களுக்கு என்னிடம் ஏற்பட்டிருக்கிற எண்ணத்தில் நிச்சயம் மாசு ஏற்படக்கூடும்.

இன்றைக்குப் பல அங்கத்தினர்கள் பேசியதை நாம் பார்த்தோம். இங்கே பேசிய என்னுடைய அருமை நண்பர் லத்தீப் அவர்கள் கோபமாகப் பேசினாரா அல்லது நான் கோபமாகப் பேசினேனா என்பது எனக்குத் தெரியவில்லை. அவர் என்னுடைய உற்ற நண்பர் ஆவார். இரண்டு பேர்களும் ஒன்றாகப் படித்தோம். பதவிக்காக ஒரு வேளை வந்திருக்கக்கூடும் என்று சொன்னார். எத்தனையோ காரணங்கள் சொல்லலாம். ஆயிரம் காரணங்கள் சொல்லலாம். எப்படியோ வெளியே வந்துவிட்டேன். நான் விடுதலை பெற்று வந்ததாகக் கருதுகிறேன். விடுதலைக்கு அதிகார பூர்வமான நாள் இன்று. அந்த விடுதலை நாளில் நான் மிக நெருக்கடியான நிலையை யாருக்கும் உருவாக்க விரும்பவில்லை.

பேரவைத் தலைவர் அவர்களே, என்னை ஆளாக்கி வைத்து அந்த வாய்ப்புத் தந்த திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் மதிப்பிற்குரிய டாக்டர் கலைஞர் அவர்களுக்கு இந்த நேரத்தில் நன்றி தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தப் பேரவையில் நான் நிகழ்ச்சிகளை நடத்துகிற நேரத்தில், எனது அனுபவக் குறைவை ஈடு செய்யக்கூடிய வகையில் நம்முடைய சட்டமன்றத் துறையிலே செயலாளராக இருந்த திரு. சி. டி. நடராசன் அவர்களும், இன்றைக்கு இருக்கிற செயலாளர் அவர்களும், துணைச் செயலாளர் அவர்களும், இங்கே இருக்கிற ஊழியர்கள் அத்தனை பேர்களும் எனக்கு மிகப் பெரிய உதவியாக இருந்தார்கள். அவர்கள் எல்லோருக்கும் இந்த நேரத்தில் நன்றி தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நம்முடைய பத்திரிகை உலகத்தை நான் மறக்க முடியாது. பத்திரிகை உலகமும், வானொலியும் எனக்கு மிக அருமையான உற்சாகத்தையும், ஊக்கத்தையும் தந்தார்கள். இந்த நேரத்திலே அவர்களுக்கும் நான் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

1974 மார்ச் 9] [திரு. பெ. சீனிவாசன்]

இந்த நேரத்திலே இன்றைக்கு இந்த நம்பிக்கை இல்லை, பதவி விலகல் தீர்மானத்தில் நான் என்ன செய்யப் போகிறேன், என்னுடைய நிலை என்ன என்ற நிலைமையில் உங்களுக்குச் சந்தேகம் கிளம்பியிருக்கலாம். பல பேருக்குத் தர்ம சங்கடமாக இருக்கலாம். யாருக்கும் அந்த நிலைமையை உருவாக்க விரும்பவில்லை. நான் சார்ந்திருக்கிற என்னுடைய கட்சித் தலைவர் அவர்களுடைய அனுமதியைப் பெற்றிருக்கிறேன். எங்களுடைய சட்டமன்றக் கட்சித் தலைவருடைய அனுமதியைப் பெற்றிருக்கிறேன். நான் இந்தப் பதவியிலிருந்து உங்கள் அத்தனை பேருக்கும் முன்னால் உங்களுடைய அன்பையும், பாராட்டுதலையும் பெற்றிருக்கிறேன். உங்கள் எல்லாருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். என்னுடைய பதவி விலகல் கடிதத்தை நான் உங்களுக்கு முன்னால் பேரவைத் தலைவர் அவர்களிடம் கொடுக்கிறேன். (ராஜினாமாக் கடிதம் பேரவைத் தலைவரிடம் கொடுக்கப்பட்டது). எனவே, இந்தத் தீர்மானத்தை வற்புறுத்த வேண்டாம் என்று மதிப்பிற்குரிய கந்தப்பன் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. செ. கந்தப்பன்: தலைவர் அவர்களே, இப்பொழுது ஏற்பட்டிருக்கிற இந்தத் திருப்பத்தை ஒட்டி நான் உங்கள் முடிவுக்கு இதை விட்டுவிடுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, நண்பர் சீனிவாசன் அவர்கள் இந்த விவாதத்திற்குப் பிறகு தானே பதவியிலிருந்து விலகுவதாகக் கடிதம் கொடுத்திருக்கிறார்கள். அதை நான் பாராட்டுகிறேன். பிரிவு உபசாரம் என்று சொன்னார்கள். அதையும் ஏற்றுக்கொள்கிறேன். பிரிந்து போகிறவர்கள் திரும்பி வருவார்கள், வரவேண்டும் என்று வாழ்த்திடுவதுதான் பிரிவு உபசாரத்தில் நடைபெறுவது. அந்த அளவிலே இதைப் பிரிவு உபசாரம் என்று நான் கருதி, இந்த விலகல் கடிதத்தை ஏற்றுக்கொண்டு, இந்த விவாதத்தை இந்த அளவோடு முடித்து விடலாம் என்ற கருத்தை எடுத்து வைக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: துணைத் தலைவருடைய ராஜினாமா கடிதம் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. பேரவையின் அனுமதியோடு திரு. கந்தப்பன் அவர்களுடைய தீர்மானம் திரும்பப் பெறப்படுகிறது.

[பேரவைத் தலைவர்] [1974 மார்ச் 9

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று, பேரவை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு மீண்டும் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 12-59-க்கு ஒத்திவைக்கப்பட்டது.

(4) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. Statutory Rules and Orders.

% 147. Notification issued with G.O. Ms. No. 475, Home, dated the 6th March 1974 in regard to draft directions to fix revised rates of fare for auto-rickshaws and taxis including tourist taxis. (Laid on the table of the House under section 133 (3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939).]

148. Notification issued with G.O. Ms. No. 2060, Rural Development and Local Administration, dated the 20th September 1973 in regard to preliminary notification for declaration of the areas forming the Tiruvallur Local Planning Area. [Laid on the table of the House under section 123 (2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 3 of 1972).]

149. Notification issued with G.O. Ms. No. 2062, Rural Development ond Local Administration, dated the 20th September 1973 in regard topreliminary notification for declaration of the areas forming the Nagapattinam Local Planning Area. [Area on the table of the House under section 123 (2) of the Tamil Nadu Town and Country Planning Act 1971 (Tamil Nadu Act 35 of 1972).]

150. Notification issued with G.O. Ms. No. 2055, Rural Development and Local Administration, dated the 20th September 1973 in regard to preliminary notification for declaration of the areas forming the Turaiyur Local Planning Area. [Laid on the Table of the House under section 123 (2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972).]

151. Notification issued with G.O. Ms. No. 6743, Revenue, dated the 7th November 1973 in regard to an amendment to the Revenue Department Notification II-1 No. 1431 of 1965 published at pages 588–593 of Part II—Section I of the Tamil Nadu Government Gazette, dated the 31st March 1965. [Laid on the table